தாமரை

பொருளடக்கம்

தீபாவளி இதழ்

ஆசிரியர் பேசுகிருர்		3
கலை இலக்கியத்தில் லெனின் வழி		5
மண் புழுக்கள்	—நா. பார்த்தசாரதி	8
தெய்வம்	—ஐ. சாமிநாதன்	14
அரக்கர்கள் யார்?	—சாமி சிதம்பரனுர்	17
திருவடி	—சுப்பு ஆறுமுகம்	22
தமிழ்நாட்டில் தாய்வழிச் சமுதாயம்	—நா. வானமாமலை	25
நான்கண்ட மக்கள் கவிஞர்	—டி. கே. பாலச்சந்திரன்	31
காதற்கதையின் முடிவு	—வெங்கடேஷ் வக்கில்	37
மலரும் அரும்பு—பெண்குழந்தை	—வாய்மைநாதன்	44
குட்டிக் கதை		47
இறைவன் விழித்தான்	—இக்பால்	48
தமிழ் இலக்கிய அறிமுகம்	—இளம்பூரணன்	49
வேதனை	—வல்லிக்கண்ணன்	54
வளரும் விஞ்ஞானம்	—எம். வி. ஆர்.	59
வனமலர்கள்	—தமிழ் ஒளி	63
எரி நட்சத்திரம்	—டி. செல்வராஜ்	66

கதைகளில்வரும் பெயர்களும் சம்பவங்களும் கற்பனையே.

தாமரை

மலர் : 1 | விகாரி௵ ஐப்பசி௴ (1-11-59) | இதழ் : 12

ஆசிரியர் பேசுகிறார்

கசக்கும் தீபாவளி

தீபாவளிப் பண்டிகை காலகாலமாக தேசம் முழுவதும் ஒரு பெரும் தேசியத் திருநாள்போல் கொண்டாடப்பட்டு வந்திருக்கிறது. அநீதிக்கும் நீதிக்குமிடையே நடைபெற்ற போராட்டத்தில் நீதி வென்றதைக் குறிக்கும் விழாவாகக் கருதப்பட்டு வந்திருக்கிறது.

ஆனால் இந்த ஆண்டு தீபாவளிப் பண்டிகையின்போது கோடானு கோடி மக்களின் உள்ளங்களிலே குளுமையில்லை, குதூகலமில்லை, மகிழ்ச்சியில்லை. எவ்விதம் இருக்க முடியும்? சாமான்ய மக்களுக்குத் தினத்துக்குத் தினம் வாழ்க்கை சுமையாக மாறிக்கொண்டிருக்கிறது. ஓடாகத் தேய மாடாக உழைத்தாலுங்கூட கவ்வும் குடலை நனைக்கக் கால்வயிற்றுக் கஞ்சிக்குக்கூட வழியில்லை. அகவிலை ஏற்றமோ சொல்லத் தரமன்று. சோவியத் 'ராக்கெட்டை'யும் மிஞ்சிவிடும் போலிருக்கிறது!

முக்கியமாக அரிசி விலை எட்டிப் பிடிக்க முடியாத அளவுக்கு ஏறிக்கொண்டே செல்கிறது. புளிவிலையை நினைத்தால் கிலி ஏற்படுகிறது. குதிரைக் கொம்பாவது கிடைத்துவிடும் போலிருக்கிறது, ஆனால் சர்க்கரை கிடைப்பது அரிதிலும் அரிதாக இருக்கிறது. காப்பிக் கொட்டையோ இந்த ஓட்டப்பந்தயத்தில் முதல் பரிசைத் தட்டிச் சென்றுவிட முந்துகிறது!

இதற்கிடையே ஆலைவாய்க் கரும்பாக அகப்பட்டுக்கொண்டு பொ மக்கள் அவதியுற்று நிற்கிறார்க , "இயற்றலு மீட்டலுங் காத்தலுங் காத்து வகுத்தலும் வல்ல" அரசோ தானும் செய்யாது, பிறர் சொ வதையும் கேளாது, 'நாம் எல் செய்வோம் பராபரமே' என் வேதாந்தம் பேசிக் கொண்டிரு கிறது.

இந்நிலையிலே சக்திகளிலெல்லாம் மிகப் பெரிய சக்தியான மக்கள் சக்தி ஒன்றுபட்டு, உரிமைக் குரல் எழுப்பினால் உண்டு வெற்றி நிச்சயம்!

நவயுகம் அமைத்த நவம்பர்!

நவம்பர் 7-ம் தேதி மனித வர்க்க வரலாற்றிலே ஒரு பொன்னேடு

அத்தியாயம் துவங்கிய நன்னாள்.

அன்று ரஷ்யாவிலே மமதை கொள் மணிமுடி மண்ணிலே உருண்டது; அகந்தை அழிந்தது; சர்வாதிகாரம் சரிந்தது; மாவீரர் லெனின் தலைமையிலே மக்களரசு மலர்ந்தது!

உலகத்திற்கே புதுமையான இந்த ஒப்பிலாத சமுதாயத்தைக் கண்டு என்னென்னமோ ஆருடம் கூறினர், பாட்டாளிகளாவது பாராள்வதாவது என்று ஏளனமாக எள்ளி நகையாடினர். அத்தகையோர்களே இன்று சோவியத் நாட்டின் அதி அற்புத சாதனைகளைக் கண்டு மூக்கிலே விரலை வைக்கின்றனர்.

அந்த அளவுக்கு மிகக் குறுகிய காலத்திற்குள் அதாவது 42 ஆண்டுகளுக்குள் தொழில், விஞ்ஞானம், கல்வி. கலை, இலக்கியம் முதலிய சகல துறைகளிலும் சோவியத் யூனியன் மாற்றார்களே போற்றுமளவுக்கு அபார முன்னேற்றமடைந்திருக்கிறது அதிகம் போவானேன் உழைக்கும் வர்க்கத்தின் சின்னமான செங்கொடி இன்று சந்திரனிலேயே பறக்கிறது!

இது ஒரு உண்மையைத் தெள்ளத் தெளிய நிதர்சனப்படுத்தி விட்டது. அதாவது அகிலத்தின் அந்தகாரம் அகற்றி, மனித வர்க்கத்தின் வாழ்விலே ஒளி பாய்ச்சும் மலை விளக்கு மார்க்ஸிஸமே என்பதை நவம்பர் புரட்சி அறுதியோடு உறுதியாக நிரூபித்து விட்டது. வாழ்க நவம்பர் புரட்சி!

ஈடுசெய்ய முடியாத இழப்பு

பாடல் மேதை பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் தமது இளம் வயதிலேயே அகால மரணமடைந்தது திரை உலகிற்கு மட்டுமன்றி தமிழகத்துக்கே ஈடு செய்ய முடியாத மாபெரும் இழப்பாகும்.

'தூங்காதே தம்பி, தூங்காதே' என்று லட்சோப லட்சம் மக்களைத் தட்டி எழுப்பி விட்டு அவர் மீளாத நித்திரையில் ஆழ்ந்து விட்டார்.

எளிய, தெளிய, கருத்தாழமிக்கப் பாடல்களை இயற்றி அவர் தமிழ்த் திரைப்பட வரலாற்றிலேயே ஒரு புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்தார். உழவர் மகனாகப் பிறந்து மிகக் குறுகிய காலத்திற்குள்ளே திரைப்பாடல்கள் இயற்றுவதில் அவருக்கு நிகரில்லை என்ற உன்னத இடத்தையும் பெற்றார் இன்பத்திலும் துன்பத்திலும் உழைக்கும் மக்களின் அணியில் அவர் நின்று ஒப்பற்ற மக்கள் கவிஞராகத் திகழ்ந்தார்.

அத்தகைய ஒரு பாட்டாளி கவிஞர் இன்று காலஞ் சென்றவரல்ல, காலத்தை வென்றவர் உயிர் வாழ்ந்தும் இறந்தவர்கள் போலுள்ள சிலரைப் போலன்றி இறந்தும் ஆயிரம் ஆயிரமான நெஞ்சங்களிலே உயிர் வாழ்பவர் அவர்! வாழ்க அவரது திருநாமம்!

கவிஞரைப் பிரிந்து வேதனையுற்று நிற்கும் அவரது குடும்பத்தினர்க்கு 'தாமரை'யின் ஆழ்ந்த அனுதாபங்கள்.

அட்டைப் படம்

மனித வர்க்கத்தின் பிணி தீர்க்கும் மாமருந்து மார்க்சியம். அந்த மார்க்சிய வழியிலே, ஒளியிலே நவயுகம் அமைத்த கர்மவீரர் லெனின் அன்று அவர் ஏற்றிவைத்த சோஷலிஸ விளக்கு இன்று உலகின் பாதிப் பகுதியில் சுடர்விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. இந்த அணையா ஜோதி அகில உலகிலும் சுடர்விடும் நாள் வெகு தூரத்திலில்லை.

தத்துவஞானக் கட்டுரை

தத்துவஞானக் கட்டுரையை இந்த இதழில் வெளியிட இயலாது போயிற்று. அடுத்த இதழில் வெளிவரும்.

கலை இலக்கியத் துறையில் லெனின் வழி

ஜீவா

வழிவழிவரும் கலாச்சாரம்

அன்று ரஷ்யாவில் புரட்சியை ஒப்புக்கொண்டு, புதிய பண்பாட்டை உருவாக்கி, மிகுந்த செல்வாக்குப் பெற்றதாக உரிமை கொண்டாடிய இலக்கியக் குழுக்கள் இரண்டு. ஒரு குழுவினர் "எதிர்கால வாதிகள்"; மற்றொரு குழுவினர் 'பாட்டாளி வர்க்க கலைஞர்கள்." இந்த இரண்டு கூட்டத்தினரும் புதிய கம்யூனிஸ்டு சமுதாயத்தை உருவாக்குவதுதான் தங்கள் வாழ்க்கைப் போராட்டத்தின் முதலும் முடிவும் என்று பறையடித்தனர்.

ஆனாலும் சரித்திரத்தின் இரக்கமற்ற தர்க்கவியல் சித்தாந்தம் இவ்விரு குழுத் தலைவர்களும் தவறான தத்துவ அடிப்படையில் செயல்பட்டனர் என்றே காட்டிற்று. "எதிர்கால வாதிகளும்" "பாட்டாளி வர்க்கக் கலைஞர்களும்" பரஸ்பரம் மோதிக் கொண்டார்கள். ஆயினும், இருதிறத்தாரும் ஆதரித்த அடிப்படையான இலக்கிய, அரசியல் கோட்பாடுகளும் உண்மையில் ஒரே கண்ணோட்ட முடையவைகளாகவே இருந்தன.

கலை - இலக்கியத்திற்கும், பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கும், கம்யூனிஸ்டுக் கட்சிக்கும், கம்யூனிஸ்ட் லட்சியத்தை அடைய தொழிலாளி வர்க்கம் நடத்தும் அரசியல் போராட்டத்திற்கும் எந்தவித ஒட்டும் உறவும் இருக்கக் கூடாது கலை-இலக்கியப் பணி சுதந்திரமாக இயங்க வேண்டும் என்று அந்த இரு கூட்டத்தினரும் கருதினர். சென்றகாலப் பண்பாட்டு மரபைப் பொறுத்த மட்டில் அவர்கள் நிராகரிப்பு மனப்பான்மையையே காட்டினர். ஆயினும், இறுதியில் இலக்கியத்தின்மீது ஏகபோக ஆதிக்கம் செலுத்தி புரட்சியின் தனிப்பெரும் பிரதிநிதியாக தங்களை ஆக்கிக் கொள்வதில் ஒன்றுபட்ட விருப்பத்தையே காட்டினர்.

1918ல் எதிர்கால வாதிகள் "கலை இலக்கியத்தை அரசாங்கத்தின் பிடிப்பிலிருந்து விடுவிக்கவேண்டும்" என்று கோரினர் 'புதிய இலக்கியத்தின் கலைவளர் மேடை' என்று கூறி அவர்கள் அராஜகக் கருத்தோட்டங்களை முன்வைத்தனர். "கலையின் பழைய உருவங்களையெல்லாம் மிச்சமீதமின்றி உடைத்து நொறுக்கிப் பொடி சூர்ணமாக்கி, சர்வநாசஞ் செய்து, உலகத்தின் முக மண்டலத்தில் இருந்த இடந்தெரியாமல் செய்துவிட வேண்டும் என்பதே பாட்டாளிக் கலைஞனின் உறுதியான கனவு..."என்று அவர்களுடைய தலைவர்களில் ஒருவர் கூறினார்.

அதே பொழுதில் "பாட்டாளிக் கலைஞர்களோ" ஒரு கொச்சையான சித்தாந்தத்தை வகுத்தனர். அதாவது, புதிய பண்பாட்டை தொழிலாளி வர்க்கத்தால் மட்டுமே உருவாக்க முடியும் என்றனர். அக்டோபர் புரட்சி தங்கள் முன் வீசி எறிந்த ஆதாரங்களை, உண்மைகளை பயன்படுத்த புரட்சி-முற்காலக் கலைஞர்கள் கையாலாகாது போய்விட்டனர் என்று இவர்கள் அறுதியிட்டுப் பேசினர்.

இந்த "பாட்டளிக் கலைஞர்கள்"

ஆக்கிய பாடல்களில் பொதிந்து கிடந்த கருத்துக்கள் உயிரற்ற வாழ்விலொட்டாத தத்துவார்த்தக் கருத்துக்களாகவே இருந்தன. அந்தக் கருத்துக்கள் தற்கால வாழ்வுக்கு 'த்த சம்பந்தம், அர்த்த சம்பந்தம், நிக்கு சம்பந்தம்' இல்லாத, சோவியத் நாடு தொடுத்துவந்த மகத்தான, தீவிரமான போராட்டத்திற்கு உறவோ தொடர்போ இல்லாத கருத்துக்கள்; அவை பாறல் நிலத்தில் விளைந்த சண்டு சாவிகள்; அவை இலக்கிய நசிவுக்காட்சி சாலைகளால் நினைவுப் பொருள்களாக வரவேற்கத் தக்க கருத்துக்கள்.

இந்த இருவகைக் கருத்தோட்டக் காரர்களையும் லெனின் தனது வன்மையான விமர்சனக் கோடரிக்கு இரையாக்கினார். அவர்களுடைய சித்தாந்தத்தையும் செயல்பாட்டையும் அக்குவேறு ஆணிவேறாகப் பிய்த்துக் காட்டி, அவற்றிலுள்ள பொத்தல்களையும் பொள்ளல்களையும் முச்சந்தியில் தூக்கி எறிந்தார். அவர் வற்புறுத்தினார்: "பாட்டாளி வர்க்கப் பண்பாடு, எங்கே, எப்பொழுது யாரால் பிறந்தது என்று சொல்ல முடியாத ஏதோ ஒன்று அல்ல. அது, தங்களை பாட்டாளி வர்க்கப் பண்பாட்டின் நிபுணர்கள் என்று தற்பெருமை யடித்துக் கொள்கிற ஒரு சிலரின் கண்டுபிடிப்பும் அல்ல. அப்படிச் சொல்வதெல்லாம் கடைந்தெடுத்த மடத்தனம். எதேச்சாதிகார சமுதாயம், நிலப்பிரபுத்துவ சமுதாயம், ஆகிய சமுதாயங்களில் மனிதவர்க்கம் நரக வாதனை அனுபவித்துத்திரட்டிய அறிவுச் செல்வத்தின் இயல்பான வளர்ச்சியின் விளைவாகத்தான் பாட்டாளி வர்க்கப் பண்பாடு உருவாகி நிற்கவேண்டும்" என்று.

1920ல் நடந்த அகில ரஷ்ய 'பாட்டாளி வர்க்கக் கலைஞர்களின்" சிறப்புக் காங்கிரஸுக்கு லெனின் ஒரு நகல் தீர்மானம் தயாரித்தார். அதில் அவர் "பாட்டாளி வர்க்கக் கலைஞர்கள்" என்பவர்கள் தங்களுக்காக ஒரு பண்பாட்டைக் கண்டுபிடிக்கும் முயற்சியையும் அவர்கள் ஒரு வரையறுக்கப்பட்ட ஸ்தாபனங்களினுள் மட்டும் தங்களை அடைத்து வைத்துக்கொள்வதையும் அல்லது அவர்கள் தங்களுக்காக ஒரு சுயாட்சியை நிலைநாட்டிக்கொள்வதையும், கொள்கைரீதியாகப் பிசகானது என்றும் நடைமுறைரீதியாகக் கேடு விளைப்பது என்றும் குற்றம் சாட்டினார். சோவியத் நாட்டில் உருவாக்கும் பண்பாடு, கம்யூனிஸ்ட் கட்சி, சோவியத் அரசாங்கம் ஆகியவற்றின் நடைமுறைக் கொள்கையிலிருந்தோ, சோஷலிச உயர் நோக்கங்களை அடைய முயலும் போராட்டங்களிலிருந்தோ பிரிக்க முடியாதது என்றும் அந்த நகல் தீர்மானத்தில் வலியுறுத்தினார்.

சோவியத் அரசாங்கத்தின் கல்வி முறை முழுவதும்—பொதுவாக அரசியல் கல்வித்துறையிலும் குறிப்பாக கலை, இலக்கியத் துறையிலும்,—அரசியல் அதிகாரத்திற்கான பாட்டாளி வர்க்கத்தின் வர்க்கப் போராட்ட உணர்வில் தோய்ந்து கிடக்கிறது; அதாவது, முதலாளி வர்க்கத்தை முறியடிப்பதில், வர்க்கங்களை இல்லாமல் செய்வதில், மனிதனை மனிதன் சுரண்டும் சுரண்டல் முறைகளையும் ஒழித்துக்கட்டுவதில் அந்த உணர்வு தோய்ந்து கிடக்கிறது என்று லெனின் அந்த நகல் தீர்மானத்தில் விளக்கினார்.

இவ்வாறு லெனின் சோவியத் ஆட்சியின் தொடக்க ஆண்டுகளில் கடுமையாகவும் அதே பொழுதில் நேர்மையாகவும் விமர்சனம் செய்து, கலை-இலக்கியத் துறையில் வழி காட்டினார். கலை-இலக்கியத் துறையில், அரசியல் தன்மையற்ற போக்குகளைச் சாடினார்; கொச்சைப் படுத்தும் முயற்சிகளைக் கண்டித்தார்; ஏடாகூடாப் போக்குகளையும் எதிர்மறை ஓட்டங்களையும் மண்டையிலடித்து மடக்கினார். அதே பொழுதில் நன்மதிப்புக்குரிய, நேர்மை உணர்வுமிக்க பழைய படிப்

பாளிகளை, பொதுமக்களோடு நெருங்கிவரச் செய்யவும், புதிய வாழ்வைக் கட்டுவதில் அவர்களையும் இழுத்துக்கொண்டு வந்து நிறுத்தவும், லெனின் செம்மையான நடவடிக்கைகள் பல எடுத்தார்.

மகா அக்டோபர் புரட்சியின் உடனடி விளைவுகளில் ஒரு கூறு, கலாச்சாரப் புரட்சி. எனவே, புதிய இலக்கியப் படையலின் நடைமுறை சோவியத் நாட்டின் பொதுவான பொருளாதார, அரசியல், கலாச்சார வளர்ச்சியோடு இணைந்து பிணைந்து போக வேண்டுமென்று லெனின் வற்புறுத்தினர்.

இந்த கலாச்சாரப் புரட்சியின் கடமைகள் எவை? சோவியத் யூனியனிலுள்ள பாட்டாளி மக்கள் அனைவரையும் எழுத்தறிவு பெற்றவர்களாகவும் பண்பட்டவர்களாகவும் செய்ய வேண்டும். எல்லோருக்கும் ஆரம்பக் கல்வி கிடைக்கும் திட்டத்தைப் புகுத்த வேண்டும் சோவியத் பொது மக்களிடமிருந்தே ஒரு படிப்பாளிப் பகுதியை உருவாக்கவேண்டும் சென்ற காலக் கலைச் செல்வங்கள் யாவும் பொது மக்களுக்குக் கிடைக்கத் தகுந்த சூழ்நிலையை உருவாக்கவேண்டும். இவ்வாறு லெனின் அறிவுறுத்தினர்.

உள்நாட்டுப் போரும், வெளிநாடுகளின் தலையீட்டுப் போரும் நடந்த அந்த பயங்கரமான நெருக்கடி மிக்க ஆண்டுகளில், கலை-இலக்கியப் பெருஞ் செல்வத்தை, சகல மக்களுக்கும் உடைமையாக்க சோவியத் கம்யூனிஸ்டுக் கட்சி மாபெரும் பணி புரிந்தது. உள்நாட்டுப் போரும், தலையீட்டுப் போரும் பட்டினிப் பேயையும், அழிவுச் சனியனையும் சோவியத் நாட்டில் கட்டவிழ்த்து விட்டன. எதிரிகளின் படைகள் சோவியத் குடிஅரசை எட்டுத் திசைகளிலும் முற்றுகையிட்டு, காதைச் சூதறையாகப் பிய்த்தெறிய பேயாட்டம் ஆடின. அந்த நாளிலும் லெனினும், கம்யூனிஸ்டுக் கட்சியும், சோவியத் அரசும் கலை-இலக்கிய மதிப்பீடுள்ள பொருள்களைப் பேணிக் காத்து, அவற்றைப் பொது மக்களுக்குப் பயன்படும்படி செய்வதில் கண்ணும் கருத்துமாயிருந்தனர்.

1918ல் லெனினுடைய முன் முயற்சியில் அரசாங்கப் பதிப்பகம் பற்றிய ஒரு சட்டம் நிறைவேற்றப் பட்டது. இந்தச் சட்டப்படி முதிர்ந்த பெரும்புலவர்களின்(Classical Authors) இலக்கியப் படையல்கள் யாவும் மக்களின் பொது உடைமையாகப் பறைசாற்றப் பட்டது. இந்த இலக்கியப் படையல்களை, கல்வி நிலையங்கள், கலைக் கழகங்களுக்கு முழுப் பதிப்பும், சாதாரணப் பொது மக்களுக்குச் சுருக்கப் பதிப்புமாக, இரண்டு பதிப்புகளை அரசாங்கப் பதிப்பகம் வெளியிட ஏற்பாடாயிற்று. மிகச் சுருங்கிய காலத்தில், மிகச் சிறந்த நூற்கள் சாதாரண மக்கள் வாங்கிப் படிக்கத்தக்க விதத்தில் மலிவு விலைக்குக் கிடைத்தன.

வெளிநாட்டுச் சிறந்த இலக்கியங்களை வெளியிடவும் சோவியத் அரசாங்கம் தக்க ஏற்பாடு செய்தது. அரசாங்கக் கல்வித்துறை நிர்வாகத்தின் கீழ், உலக இலக்கியப் பதிப்பகம் ஒன்று நிறுவப்பட்டது. சிறந்த கவிஞர்கள், உரைநடை எழுத்துக் கலைஞர்கள், மொழி பெயர்ப்பு வல்லுநர்கள் இந்தத் துறையில் ஈடுபடுத்தப் பட்டார்கள். இந்தப் பதிப்பகத்திற்கு எழுத்துக்கலை மேதை மாக்சிம் கார்க்கி இயக்குநர் ஆனர். பால்சாக்கும், பெரங்கரும், வால்டேரும், அனட்டோல் பிரான்சும், ஸ்டெந்தாலும், பிளபாரும், பைரனும், டிக்கன்சும், ஜாக்லண்டனும், ஆப்டன்சிங்கிளேரும், வெல்ஸூம், ஹீனும், ஷில்லரும், ஹாப்மனும் இன்னபிற உலகுபுகழ் எழுத்துக் கலைஞர்களெல்லாம், சோவியத் மக்களின் கரங்களையும் மதிநலங்களையும் அணிபெறச் செய்தனர். அராபிய, துருக்கிய, பாரசீக, மங்கோ

(13ம் பக்கம் பார்க்க)

மண்புழுக்கள்

நா. பார்த்தசாரதி

கொளுத்து கொளுத்தென்று காய்கின்ற உச்சி வெய்யிலில் மாடாக உழைத்துக் கொண்டிருந்தான் வேலையன். கரணை கரணையாகச் சதை வைத்த தோள்களிலும், மார்பிலும், வேர்வை வழிந்து வெய்யிலில் மின்னிற்று. இரண்டு கைகளாலும் மண்வெட்டியைத் தலைக்கு மேலே தூக்கி ஓங்கி மண்ணில் பாய்ச்சுகிறபோது அவனுடைய தோள்கள் புடைப்பதில் ஒரு தனி அழகு இருந்தது. ஹெர்க்குலீஸ் சிலை மாதிரி மேலே அகன்று இடையில் ஒடுங்கிய ஆண்மை லட்சணமுள்ள மார்பு அவனுடையது தலையில் ஒரு அழுக்குத் துணி முண்டாசு. அதையும் துளைத்துக்கொண்டு உறைத்தது வெய்யில். இடுப்பில் முழந்தாளுக்கு மேல் வரிந்துகட்டிய வேட்டியில் அழுக்கு மண்டிய மண் கறைகள்

ஒவ்வொரு முறையும் மண்வெட்டி பாய்ந்து மண்ணைப்புரட்டிப் பிளந்து மேலேதள்ளும் போதும் 'கும்'மென்று பரவும் ஈர வாடையோடு மேலெழுந்து பரவிற்று மண்ணின் மணம்.

அந்த மண்ணின் மணம் தன் மூச்சுக் ·காற்றோடு இழைகிற போதெல்லாம் தன் உழைப்பே அப்படி மணப்பதுபோல் வேலையனுக்கு ஒரு பெருமிதம்—ஒரு பூரிப்பு--உண்டாயிற்று.

மண்ணைக் கிளறிக்கொண்டே மண்ணைப் பற்றிச் சிந்திப்பது உற்சாகமாக இருந்தது வேலையனுக்கு. அந்த ஐந்து செண்டு நிலத்தை வெட்டிக் கொத்திப் பாத்தி பிரிப்பது அவனுக்குச் சிரமமான காரியமேயில்லை. இன்றைக்கு 'வெட்டு வேலை' முடிந்துவிட்டால் எப்படியும் நாளை ஒரு நாளைக்குள் கட்டிகளை உடைத்துச் சமப்படுத்திப் பாத்தி பிரித்து விடலாம். வாய்க்காலும் வகுத்துக் கொள்ளலாம்.

ஈரம் கசிந்த களிச்சத்துள்ள நல்ல மண் அது! கீரையும், தக்காளியும், 'நான் நான்' என்று போட்டிபோட்டுக்கொண்டு உண்டாகும்.

பெரிய நிலங்களுக்கு நடுவில் 'நத்தம் புறம்போக்கு'ப் போல் இருந்தது வேலையனின் ஐந்து செண்டு. சிறிது மேடுபள்ளமாகச் சமமின்றி நன்செய்ப் பயிருக்கும் தகுதியில்லாமல், புன்செய்ப் பயிருக்கும் தகுதியில்லாமல்—இரண்டுங் கெட்டானாகக் கிடந்தது அவனுடைய துண்டு நிலம். நீண்ட நாள் சிந்தனைக்குப் பிறகு அதில் 'காய்கறி கீரை' பயிர் செய்து பார்க்கலாமென்ற முடிவுக்கு வந்தான் வேலையன்.

நான்குபுறமும் பெரிய பண்ணையார்களுக்கு நடுவே அந்தச் சிறிய ஐந்து செண்டு நிலம் தனித்து இருந்த காட்சி பச்சைப் பட்டுப் புடைவையும், பகட்டான நகைகளும் அணிந்த நான்கு பணக்காரப் பெண்களுக்கு நடுவே வெறும் கைத்தறிப் புடைவை அணிந்து நகைகளில்லாத மூளி உடம்போடு ஏழைப் பெண்ணொருத்தியும் நிற்பது போலிருந்தது. வடபுறம் புலிவலம் வந்த நல்லூர்ப் பெரிய பண்ணையின் நிலம் ஐம்பது ஏக்கர் ஒரே தாக்காக இருந்தது. தெற்கே மாடிவீட்டு ரங்கநாராயண ஐயரின் பதினைந்து ஏக்கர் முதல் தரமான நன்செய்; பேயாற்றுக்கால் தலைப்பாசன நிலம். கிழக்கே வீரபத்திர வாண்டையாரின் வாழைத் துரவு; கண்பார்க்க முடிந்த தொலைவு மட்டும் தூண் கொண்டெழுந்த பசுமைப் பரப்பாய் ஒரே வாழை மரக்காடு. மேற்கே முக்காணிமங்கலம் முகுந்தராஜ முதலியாரின் கரும்புத்தோட்டம், எழுபத்திரண்டு ஏக்கர் செங்கரும்புப் பயிர் காற்றில் தோகைகள் சுழல அற்புதமாய்க் காட்சியளிக்கிறது.

அத்தனையும் பணம்! நெல், வாழை, கரும்பு, மட்டுமல்ல! உடை

மைக்காரர்களுக்குப் பணமாகவே விளைந்த நிலங்கள் அவை. புலிவலம் வந்த நல்லூர்ப் பெரிய பண்ணையாரும், மாடிவீட்டு ரங்க நாராயண ஐயரும், வீரபத்திரவாண்டையாரும், முருகந்த ராஜ முதலியாரும்,—வண்டி கட்டிக்கொண்டு வந்துதான் நிலத்தைப் பார்வையிடுவது வழக்கம். எவ்வளவு பெரிய நிலம்? நடந்து சுற்றிப் பார்த்தால் கட்டுபடியாகுமா? மண்ணில் இறங்கி நடந்துவிட்டால் கௌரவம் 'ஸ்டேட்டஸ்' எல்லாம் என்ன ஆவது? நடத்தை கெட்டவளானாலும் தெருவில் உடம்பை மூடிக்கொண்டு தானே நடக்கவேண்டும்? பணக்காரர்களுக்கு 'அந்தஸ்து' என்கிற விவகாரமும் அப்படித்தான். இருக்கிறதோ இல்லையோ, வெளியில் 'அந்தஸ்தை' நடித்துக் காட்டினால்தான் பணக்காரர்களுக்குப்பெருமை; பணத்துக்கும் மதிப்பு!

அந்தப் பெரிய பெரிய மிராசுகளுக்கு நடுவே தன்னுடைய 'உள்ளங்கையகல நிலம்' ஒரு அவமானம் போல் தோன்றினாலும் அதை அப்படியே தரிசாக விட்டுவிட மனமில்லை வேலையனுக்கு. கீரையும், காய்கறியும், பயிர்செய்து விற்றால் நாள் ஒன்றுக்கு ஒன்றரை ரூபாய்க் காசுகூடவா சம்பாதிக்க முடியாது?' என்று நினைத்து ஒரு முடிவுக்கு வந்தபின்பே இப்போது அந்த நிலத்தை வெட்டிக் கொத்திக்கொண்டிருந்தான் அவன் மனிதன் சும்மா இருக்கிறவரை யாருமே அவன் பக்கமாகத் திரும்பிக் கவனிப்பதில்லை. நல்லதோ, கெட்டதோ, அவன் எதையாவது செய்ய ஆரம்பித்துவிட்டால் எல்லோருடைய கவனமும் அவன் பக்கம் திரும்பிவிடுகிறது. வேலையனுடைய ஐந்து செண்டு நிலம் கரடுதட்டிப் போய்க்குண்டும், குழியுமாய்ச் சும்மா கிடந்தவரை 'முக்காணி மங்கலமும்,' 'புலிவலம் வந்த நல்லூரும் அதைப்பற்றி நினைக்கவே இல்லை

ஒரு நாளுமில்லாத திருநாளாய் அன்றைக்கு அந்தப் பள்ளத்துக் கரட்டில் மண்வெட்டி இறங்கும் ஓசையைக் கேட்டபோது புலிவலம் வந்த நல்லூர் வண்டியை நிறுத்தச் சொல்லி இறங்கிப் பார்த்தார்.

"ஏலே வேலு! என்னடாது; திடீரென்று இந்தக் கரட்டுமேலே இத்தனை அக்கறை?'—வைரக் கடுக்கன்களும், வலது கையில் சுழன்ற வெள்ளிப் பூண்பிடித்த பிரம்பும் வெய்யிலில் மின்ன மேட்டில் தம் நிலம் முடிகிற இடத்தில் நின்றுகொண்டு மிடுக்காக அவனைக் கேட்டார் புலிவலம் வந்தநல்லூர் நெற்றி வேர்வையை வழித்து உதறிவிட்டு நிமிர்ந்தான் வேலையன்.

"ஐயா, சும்மாக் கெடக்கறதைக் கொத்தி ஏதோ நாலு காய்கறி. கீரை போட்டுப் பார்க்கலாமின்னு எண்ணமுங்க..."

"அடி சக்கை! காய்கறித் தோட்டமா? பலே; ஜமாய்த்துத் தள்ளு..."

"தோட்டமாவது, ஒண்ணுவதுங்க...ஏதோ அஞ்சாறு பாத்திக்கு.." அவன் முடிப்பதற்குள் புலிவலம் வந்த நல்லூர் வண்டியில் ஏறிவிட்டார். அதிக நேரம் வேலையனிடம் நின்று பேசிக்கொண்டிருந்தால் அவருடைய அந்தஸ்து என்ன ஆவது?

மறுபடியும் வேலையனின் கைகள் மண்வெட்டியை இயக்கின. மேற்குப் புறத்து மேட்டில் தம் கரும்புக் கொல்லை முடியுமிடத்தில் 'முக்காணி மங்கலம் வந்து நின்றார்.

"ஏண்டா வேலையா! உன் 'ஜமீன்லே' ஏதோபெரிய 'ஸ்கீம்லே' சாகுபடி ஆரம்பிச்சு நடக்கிறது போலிருக்கே? என்ன சமாசாரம்? வாழையா கரும்பா? நெல்லா?"—என்று கிண்டலாகப் பேச்சை ஆரம்பித்தார் முக்காணி மங்கலம்.

"ஐயாவுக்குக் கேலியாத் தோணுது.... நமக்கென்ன முப்பது ஏக்கரா; நாற்பது ஏக்கரா?—உள்ளங்கையிலே பாதிநிலம். ரெண்டு

கீரைப்பாத்திக்குக் காணுது. வாழை யையும், கரும்பையும், நினைக்கக்கூட முடியாதுங்களே ?"—என்று சொல்லி முறுவலித்தான் வேலையன்.

இன்னும் சிறிதுநேரம் கழித்து வீரபத்திர வாண்டையார் வந்து, "நமக்கும் நிலமிருக்குங்கறதைக் காண்பிக்கிறதுக்காகக் கொத்துப் போட்டுக் கிட்டிருக்கியா?"—என்று கேலி செய்துவிட்டுப் போனுர். வாழைத்தார் வெட்டிச் சந்தைக்கு அனுப்பத் தினசரி வந்து போவார் வாண்டையார்.

"அடே வேலையா ; இதிலே கீரை யும், காய்கறியும் நன்ளு வரும்டா. பசையுள்ள மண் ; அதோ பாரு ; சிக்கு விழுந்த நூல் மாதிரி எத்தனை மண்புழு நெளியறது? மண் புழுக் கள் தூக்கிற மண் காய்கறிககு நன்ளு வரும் நிலம் உரம் வாய்ந்த துங்கிறதை மண்புழு இருக்கறதா லேயே தீர்மானிச் சிண்டுடலாம் !"— என்று தெற்குப் பக்கத்து நிலக்காரர் கலைக்கால் பாசனம் ரங்கநாரயண அய்யர் அவனுக்கு 'சர்டிபிகேட்'— கொடுத்துவிட்டுப் போனுர்.

"சாமீ ! எல்லாம் உங்க ஆசிர் வாதம்..."—என்று விநயமாகப் பதில் சொல்லி அவரை அனுப்பிவைத் தான் வேலையன். தன் நிலத்தில் கீரையும், காய்கறியும் நன்ருக வரும் என்பது அவனே அறிந்ததுதான், 'புருபுரு' வென்று முறுக்குமாவு பிசைந்தமாதிரிக் கரிசல் நிறத்துக் களிப்பாங்கான மண். அதில் ரப்பர் நூல்கள் போல ஏராளமான மண் புழுக்கள் நெளிகின்றன. 'மண்புழு வைத் தோட்டக் காரனின் நண்பன் என்பார்கள், அது மண்ணை உர முள்ளதாக்குகிறது. சத்துள்ளதாக வும் வளமுள்ளதாகவும் செய்து நல்ல விளைவைத் தருகிறது'—என்று நாள் தவருமல் வீட்டில் தன்மகன் பள்ளிக்கூடத்து 'ஸயன்ஸ்' புத்த கத்தை நெட்டுருப் போடுவதை வேலையன் கேட்டிருக்கிருன். 'ஸயன்ஸ்' என்கிற இங்கிலீஷ் வார்த்தை இந்த நாட்டில் நுழை வதற்கு முன்பே அவனுடைய முப் பாட்டன் காலத்திலிருந்தும் கர்ண பரம்பரையாகவும் அந்த விஷயம் அவனுக்குத் தெரியும்.

"மண்புழு நிறைய இருந்தால் நெலத்துலே ஐசுவரியம் பொங் கும்டா"—என்று அவனுடைய தாத்தா அடிக்கடி பெருமையாகச் சொல்லிக் கொண்டே இருப்பார். அதே செய்தியை இப்போது ரங்க நாராயண ஐயரும் கூறக்கேட்ட போது அவனுக்குப் பெருமையும், திருப்தியும், உண்டாயின. தன்னு டைய சொந்த முயற்சியில் உருவாக இருக்கும் காய்கறித் தோட்டத்தில் ஐசுவரியம் பொங்கப் போவதை நினைந்து அவன் மனம் பூரித்தது.

அன்று பொழுது சாய்வதற்குள் 'வெட்டு' வேலை முடிந்து விட்டது. மறுநாள் கட்டிகளை உடைத்துச் சமன் செய்து பாத்தியும், வாய்க் காலும் வகுத்து விட்டான். மூன்ரும் நாள் விதைத்து நீர்பாய்ச்சி விட் டான். மூன்று பாத்தி அரைக்கீரை. இரண்டு பாத்தி தக்காளி. இரண்டு பாத்தி முளைக்கீரை. ஒரு பாத்தி கொத்துமல்லி. நாலுபாத்தி வெண் டைக்காய். இருக்கிற நிலத்தை நிரந்து பன்னிரண்டு பாத்தியாகப் பிரித்திருந்தான்.

அது நல்ல ஈரச்சத்துள்ள உர மண் ! விதைத்த மூன்ருவது நாளில் கீரைப்பாத்திகளில் பொட்டுப் பொட்டாகப் பசுமை தெரிந்தது. ஏழாவது நாளில் வெண்டை யும், தக்காளியும் முளைகிளம்பின. பின்பு கொத்துமல்லியும் வெந்தய மும் பொல்லென்று பூத்த பசுமை யாய்ப் பாத்திகளை நிறைத்தன. வேலையனின் ஐந்து செண்டு நிலத் தில் ஒருபசுமைக் கனவு உருவாகி மிளிர்ந்தது.

கீரைகள் அடர்ந்து பசுமை கொழித்து மேலெழும்பி வளர்ந்தன. வெண்டை பூத்தது தக்காளியும் தன்றிய மஞ்சள் நிறப் பூக்களால்

மென்னகை புரிந்தது. கொத்து மல்லி பச்சைப் பாசி மணி போல் காய்த்துக் கதிர் வாங்கி மணம் பரப்பியது.

"கொடுத்து வைத்த பயல்டா நீ—" என்று அவனது காய் கறித் தோட்டம் வாய்த்த விதத்தை வியந்தார் 'புலிவலம் வந்த நல்லூர்'.

"பொட்டல் காட்டிலே என்னமோ செய்து அற்புதம் பண்ணிப் பிட்டியேடா!" என்றார் வாண்டையார்.

"இந்த மாதிரி வெண்டை விதை எங்கேடா கிடைச்சது உனக்கு? கொத்துக் கொத்தாய்க் காய்ச்சுத் தள்ளி யிருக்கே; யோகக் காரண்டா நீ!" என்று கண் வைத்தார் முக்காணி மங்கலம்.

"நான் அன்னிக்கே சொன்னேனே ல்லியோ? மண்புழு இருந்தாக் காய் கறித் தோட்டத்துக்குப் பேஷா வரும்னு பெரியவா தெரியாமேயா சொன்னு? பகு ஜோரா வந்திருக்குடா உன் காய்கறித் தோட்டம்!" என்றார் ரங்க நாராயண அய்யர்.

நீலப் பசும் மலைச் சிகரங்களிலிருந்து தொலைவில் தெரியும் நெருப்புப்புள்ளிகளைப் போலத் தக்காளிச் செடிகள் நிறைந்த பாத்திகளுக்கு நடுவே சிவப்புக்கள் தெரிந்தன. தக்காளி பழுத்தது. அந்த முண்டும் முடிச்சுமான சிவப்பு நிறப் பழங்களுக்குத்தான் எத்தனை கவர்ச்சி?

அந்தச் சிறிய காய்கறித் தோட்டத்தில் பாத்திகள் அமைந்திருந்த விதத்தில் ஒரு ஒழுங்கு இருந்தது. தெற்கே தக்காளிச் செடிகள், வடக்கே வெண்டைச் செடிகள், கிழக்கே வெந்தயம், கொத்துமல்லி—மேற்கே கீரைவகைகள் இன்னும் இரண்டொரு நாளில் விற்பனைக்குப் பறித்துக்கொண்டு போகலாம் என்று தீர்மானித்திருந்தான் வேலையன்.

அப்படியிருக்கும்போது அன்று பொழுதுவிடிந்ததும், தோட்டத்தைச் சுற்றிப் பார்க்கப்போன அவனுக்கு அங்கே ஒரு அதிர்ச்சி காத்திருந்தது.

வெண்டைச் செடிகளில் வெண்டைக்காய் திருடு போயிருந்தது. தக்காளிப் பாத்தியில் தக்காளிப் பழங்கள் திருடு போயிருந்தன. கீரைப் பாத்தியில் கீரை குறைந்திருந்தது. வெந்தயக் கீரையும், கொத்துமல்லிக் கீரையும், யாரோ பாத்தியில் இறங்கிக் கொஞ்சம் பறித்துக்கொண்டு போயிருந்தார்கள். வேலையன் திகைத்தான். அத்தனை நாளுமில்லாமல் அன்று திருடுபோக ஆரம்பித்த காரணம் அவனுக்கு விளங்கவில்லை. இயற்கையாகவே அவன் நிலத்துக்குப் பாதுகாப்பும், காவலும் அதிகம். நான்குபுறமும் பெரிய பண்ணையார்களின் நிலங்கள். அவர்களுடைய நிலத்தைக் காவல் செய்ய ஏராளமான காவல் ஆட்கள் உண்டு. வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, எந்தப் பக்கத்திலிருந்து அவன் காய்கறித் தோட்டத்திற்குத் திருட வரவேண்டுமானாலும் காவலைக் கடந்துதான் வர முடியும்! பெரிய பண்ணையார்களின் வாழைத் தோட்டத்தையும், கரும்புக் கொல்லையையும், நெல் வயல்களையும்கடந்து வந்து அவனுடைய காய் கறித் தோட்டத்தில் சோரம் செய்து கொண்டு போவதென்பது அவ்வளவு சுலபமான காரியமில்லை. அவ்வாறிருக்கும்போது காய்கறிகளும், கீரையும், எப்படித் திருடு போயிருக்க முடியுமென்று அவனுக்கு விளங்கவில்லை.

அன்று இரவு முழுவதும் அங்கேயே காவல் இருந்து அந்தத் திருட்டைக் கண்டுபிடிக்க விரும்பினான் அவன். அவனது ஐந்து செண்டு நிலத்தின் ஒரு கோடியில் அடர்ந்து வளர்ந்த மஞ்சள் நாறிமரம் ஒன்று இருந்தது. இரவுச் சாப்பாட்டை முடித்துக்கொண்டு கையில் பூண் பிடித்த கிளுவைக் கம்புடன் வயலுக்குப் போய் அந்த மஞ்சள் நாறி மரத்துக் கிளையில் ஏறி மறைந்து உட்கார்ந்து கொண்டான். கிளைகளை அடர்ந்து தழுவியிருந்த பசுமை அவன் உட்கார்ந்திருப்பது கீழே

தெரியாமலும், கீழே அவன் காண முடிந்த படியும் வகையாக அமைந்திருந்தது. நல்ல நிலாக் காலம். பாற்கடலில் நனைந்துப் பரப்பிய ஓவியம்போல் வயல்வெளிகளும், வாழைக்காடும், கரும்புக் கொல்லையும், மரங்களும், அழகாகத் தெரிந்தன.

வேலையன் மரத்திலேயே இருந்து விழிப்பாகக் கண்காணித்துக் கொண்டிருந்தான். நாழிகைகள் ஒவ்வொன்ருய் நழுவிக் கொண்டிருந்தன.

விடிவதற்குச் சிறிது நாழிகைக்கு முன் வாண்டையாரின் குரல் வாழைத் தோட்டத்தருகே கேட்டது. அவரும் அவருடைய வாழைத் தோப்புக் காவல்காரன் பக்கிரியும் பேசிக்கொண்டே நடந்து வருவதை மரத்திலிருந்த படியே கவனித்தான் வேலையன். அவர்கள் இருவரும் அவன ஏறியிருந்த மஞ்சள் நாறி மரத்தடியிலே வந்து நின்றனர். "டேய், பக்கிரி! இந்தப் பாத்தியிலே இறங்கி, ஒரு கட்டுக் கொத்து மல்லிக் கீரையும், வெந்தயக் கீரையும் பிடுங்கிக் கொண்டா...எப்படியிருக்குன்னு பார்க்க நேற்றுக்கொஞ்சம் கொண்டுபோனேன். நல்ல ருசி..." என்று தம் காவல்காரப் பக்கிரிக்கு ஆணையிட்டார் வாண்டையார்.

பக்கிரி பாத்தியில் இறங்கி தாறுமாருக உழப்பிக் கீரையும், கொத்துமல்லியும், பிடுங்கிக் கொண்டு வந்தான்.

"விலைக்கு வாங்கறதாயிருந்தா; நாலும், நாலும், எட்டணுவாவது கேட்பான்! பயல் தோட்டம் போட்டாலும் போட்டான்; நமக்கு யோகம்"—என்று கூறிச் சிரித்துக் கொண்டே வாண்டையார் கீரையும் கொத்துமல்லியையும் வாங்கி மேல் துண்டில் மறைத்தவாறு நடந்தார். பக்கிரி பின் தொடர்ந்தான்.

சிறிது நேரம் கழித்து 'முக்காணி மங்கலமும் அவருடைய கரும்புத் தோட்டத்துக் காவலாளும் அந்தப் பக்கமாகப் பேசிக்கொண்டு வந்தார்கள். வேலையன் இன்னும் மரத்தின் மேலிருந்து கவனித்துக் கொண்டு தான் இருந்தான்.

"டேய்? சாம்பான்; இந்தப் பக்கமாகக் கீரைப் பாத்தியிலே இறங்கி ஒருகட்டு முளைக்கீரை பிடுங்கு பார்க்கலாம்" என்று தம் காவலாளை ஏவினர் முக்காணி மங்கலம். அவன் இறங்கிப் பிடுங்கிக் கொண்டு வந்தான். அவர்கள் இருவரும் போன சிறிது நேரத்தில் 'புலிவலம் வந்த நல்லூரர்' வந்தார். அவர் தனியாகவே வந்ததால் தாமே இறங்கி மேல்வேஷ்டி நிறைய வெண்டைக்காய் பறித்துக் கொண்டு திரும்பினர். அவர் தலை மறைந்ததும் ரங்கநாராயண ஐயர் வந்து ஒரு துணிப் பை நிறைய அவசர அவசரமாகத் தக்காளிப் பழங்கள் பறித்துக் கொண்டு புறப்பட்டார். பொழுது நன்ருக விடிந்துவிட்டது வேலையன் மஞ்சள் நாறி மரத்திலிருந்து கீழே இறங்கிக் காய்கறித் தோட்டத்தைச் சுற்றிப் பார்த்தான். சோரம்போன தோற்றத்தில் அது தாறுமாருகக் காட்சியளித்தது. அவன் நெஞ்சில் உணர்ச்சி கொதித்தது. கைகள் துடித்தன. தோள்கள் புடைத்தன. ஏழைமையை நினைத்து அடங்கினுன். வாண்டையார் வீட்டு வாழைத் தோட்டத்தில் களவு போகாமல் காக்கக் காவலாள் இருக்கிருன். முதலியார் வீட்டுக் கரும்புக் கொல்லைக்கும் காவல். பண்ணையார் வீட்டு நிலத்துக்கும், ஐயர் வீட்டு நெல் வயலுக்கும், எல்லாவற்றுக்கும் கட்டு உண்டு. காவல் உண்டு!

அவன் சொத்து மட்டும் எடுப்பார் கைப் பிள்ளையா? 'செல்வமும் செல்வாக்கும், இல்லாவிட்டால் மனிதனுகவே பிறக்கக்கூடாது'—என்று பிறவியின் மேலேயே அடக்கவும், தாங்கவும், முடியாதொரு வெறுப்பு அவனுக்கு உண்டாயிற்று. வேலையன் கொதிப்பை வெளிக்

காட்ட முடியாத ஏலாமையோடு உள்ளேயே கொதித்தான். ஏழையின் கொதிப்புநீறு பூத்த நெருப்பு!

ரங்கநாராயண ஐயர் தம் நிலத்தைச் சுற்றிப் பார்த்துவிட்டு வீட்டுக்குப் போவதற்காக அந்தப்பாதையாக வந்தார். அவர் கையில் "அந்தப் பையும்' இருந்தது. "வேலையா! உன் காய்கறித் தோட்டம் நல்ல பலன் வச்சிருக்குடா; மண் புழு நிறைய இருந்தாக் காய்கறிப் பயிருக்கு யோகம்டாப்பா..."—என்றார் தக்காளிப் பழப்பையை முதுகுக்குப் பின்னால் மறைக்க முயன்றுகொண்டே.

"சாமி! மண்ணுக்கு மேலேயும் புழுக்கள் இருக்குங்க. மண்ணுக்குள்ளற இருக்கும் புழுவைத்தான் நீங்க சொல்றீங்க..."—என்று சொல்லி அவரைப் பார்த்துச் சிரித்தான் வேலையன். அந்தச் சிரிப்புக்குத்தான் எத்தனை அர்த்தங்கள்? ●

கலை இலக்கியத்தில்....

(7ம் பக்கத் தொடர்ச்சி)

லிய, சீன, ஜப்பானிய, இந்திய இலக்கியங்களும் ரஷ்ய அச்சு வாகனம் ஏறின. உலகக்கலை—இலக்கியம் சோவியத் மக்களின் வாழ்க்கைக்குப் பயன்பட்டன.

லெனின் 1918 இல் சோவியத் அமைச்சர் பேரவையில் "உருவச் சிலைப் பிரசாரம்" என்னும் ஒரு தீர்மானம் நிறைவேற்ற வைத்தார். புரட்சி இயக்கத்திலும், விஞ்ஞானத்திலும் இலக்கியத்திலும், உலகு புகழ்ப் பெரியார்களுக்குச் சிலை எடுப்பது தான் "உருவச்சிலைப் பிரசாரம்" என்பதன் பொருள்.

தொழிலாளர் - உழவர்களின் அரசாங்கமாகிய சோவியத் அரசாங்கம் நினைவு நாள் கொண்டாடத் தயாரித்த பட்டியல் சிந்தனைக்குச் சுவைமிக்க விருந்தளிக்கும் தன்மையுடையது என்பதில் ஐயமில்லை. இந்த நினைவுப் பட்டியலில், மார்க்ஸ், ஏங்கெல்ஸ், ஸ்பார்ட்டகஸ், டைபெரியஸ், கிராச்சுஸ், மாரட், ரோபஸ்பரி, காரிபால்டி, ஸ்டெப்பான் ரேசின் பெஸ்டல், ராபர்ட் ஓவன் போன்ற பெரியார்களின் பெயர்கள் காணக் கிடக்கின்றன.

இது மட்டுமல்ல. புஷ்கின், லெர்மாண்டோவ், கோகோல், பெலன்ஸ்கி, லியோ டால்ஸ்டாய், ஷெட்ரின், நெக்ரஸோவ் போன்ற 20 ரஷ்ய எழுத்துக் கலைஞர்களுக்கு உருவச் சிலைகள் எழுப்ப வேண்டும் என்று சோவியத் அரசாங்கம் தீர்மானித்தது

லெனின், அன்று சோவியத் கல்வி அமைச்சராகத் திகழ்ந்த லூனச் சார்ஸ்கியோடு, உரையாடிக்கொண்டிருந்தபொழுது, 'உருவச் சிலைப் பிரச்சாரத்'தைப் பற்றி விளக்கம் கொடுத்தார். எப்படி? பின்வருமாறு; "சோஷலிஸத்தின் முன்னோடிகளைப்பற்றி அல்லது சோஷலிஸ தத்துவ ஆசிரியர்களையும் சோஷலிசப் போராட்டத் தலைவர்களையும் பற்றி ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும். தத்துவ ஞானச் சிந்தனை, விஞ்ஞானம் கலை-இலக்கியம் ஆகியவற்றின் ஒளி விளக்குகளை அவர்கள் நேரடியாக சோஷலிசத்திற்குத் தொடர்பற்றவராயினும் கலாச்சாரத்தின் முன்னணி வீரர்களாக விளங்குகிற காரணத்தால் அவர்களைப் பற்றியும் ஒரு பட்டியல் தயாரிக்க வேண்டும்" என்றார்....

['கலை-இலக்கியத்தில் லெனின் வழி' என்று ஜீவா எழுதிய ஒரு பெரிய கட்டுரையின் இடையில் ஒரு பகுதி இது கலை-இலக்கியத் துறை பற்றிய லெனினுடைய கருத்தோட்டம் நம் நாட்டில் கலை-இலக்கிய வளர்ச்சிக்கு நிகரற்ற முறையில் ஒளிகாட்டி வழி காட்டும் என்பதில் இஞ்சிற்றும் ஐயமில்லை, அடுத்து வரும் தாமரை இதழ்களில் ஜீவாவின் இந்தக் கட்டுரையின் இதர பகுதிகள் அலங்கரிக்கும் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.]

தெய்வம்

ஐ. சாமிநாதன்

வாசலில் நாயடிச் சுப்பன் காத்துக்கொண்டிருந்தான். அடிக்கடி 'அம்மா அம்மா' என்று குரல்கொடுத்துக்கொண்டிருந்தான். ருக்மிணி அம்மாள் உள்ளே எங்கேயோ மறதியாய் வைத்துவிட்ட ஐந்து ரூபாய் நோட்டைத் தேடிக்கொண்டிருந்தாள். அவளுக்கு எதைக் கண்டாலும் எரிச்சலாய் வந்தது.

"அம்மா எனக்குத் தலையைச் சீவிவிடு" என்று சின்னவன் கையிலே சீப்பை வைத்துக்கொண்டு அவளிடத்தில் வந்து நின்றான்.

"சனியனே, இப்போதுதான் உங்களுக்கெல்லாம் அவசரம் வந்துவிடும். உன் அழகுக்குத் தலையை வேறு சீவி விடவேண்டுமா?" என்று ஒரு கத்தல் போட்டாள். இன்னமும் கொஞ்ச நேரம் அங்கே நின்றுகொண்டிருந்தால் அவள் உண்மையாகவே தலையைச் சீவி விடுவாள் என்று தெரிந்துகொண்டோ என்னவோ அவன் தலையைத் தொங்கப் போட்டுக்கொண்டு அகன்றுவிட்டான். ருக்மிணி அம்மாளுக்கு வாய் நிறைய மூதேவிச் சொற்கள். குழந்தைகளுக்குப் பாடம் ஆகிவிட்டது.

மூத்த பெண் குட்டிப்பிசாசாய்க் காட்சியளித்தாள். ஒரு பாட்டோ, படிப்போ கிடையாது. அவள் எதிலாவது பாஸ் மார்க் வாங்கியிருந்தால் பெருமை அவளுக்கு முன்னால் உட்கார்ந்து எழுதியவளையே போய்ச் சேரவேண்டும். ருக்மிணிக்குத் தன் குழந்தைகளைக் கவனிக்க நேரமிருப்பதில்லை. காலையிலிருந்து பூத்தொடுப்பதிலும் 'ஜங்ஷன்' போல எப்போதும் நிறைந்திருக்கும் விருந்தாளிகளிடம் பேசிக்கொண்டிருப்பதிலும், சினிமா போவதிலுமே அவளுடைய பொன்னான பொழுது போய்க்கொண்டிருந்தது. பள்ளத்தை நோக்கி வெள்ளம் பாயும் என்று தெரிந்துகொண்டிருந்த ருக்மணி பணத்தைநோக்கியே உறவு பாயும் என்பதைத் தெரிந்துகொள்ளவில்லை. நாலு பக்கமும் வாரியிறைத்து வாழ்ந்த குடும்பம். குழந்தைகளில் எதுவும் உருப்படியில்லை. காரணம்? பெரியவர்கள் அவர்களின் வளர்ச்சியில் சிறிதும் அக்கறை காட்டவில்லை.

"அம்மா, இந்தக் கணக்கை எப்படிப் போடுவது என்று கேட்டால் குமார் சொல்லித் தரமாட்டேனென்கிறான்' என்று இரண்டாவது பிள்ளை குற்றப் பத்திரிகை வாசித்தான்.

"ஆமாம். அவன்தான் எனக்கே அடங்குவதில்லையே. ஒரு வழியாய் அவன் எங்கேயாவது தொலைந்தால் தேவலை' என்று ருக்மிணியம்மாளும் தனக்குத் தனே முறையிட்டுக்கொண்டாள். அப்படியானால் குழந்தைகளை யார்தான் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது?

ருக்மிணியின் கணவருக்கு இதையெல்லாம் கவனிப்பதற்கு உண்மையிலே நேரம் போதாது. இலக்கியத்திற்கு இருபத்து நாலு மணி நேரமும் உழைப்பவர் அந்த டமார இரைச்சலிலும் காதே இல்லாதது போல ஏதாவது எழுதிக்கொண்டிருப்பார். காது அங்கு இருந்து என்ன பயன்? கருத்து எழுத்திலல்லவா இருக்கும். கண்ணும், மூக்கும், வாயும் சாமி படத்தில் இருந்து என்ன பயன்? கருத்தல்லவா இருக்க வேண்டும்.

ருக்மிணியம்மாள் சகல வியாதிகளையும் தீர்த்துவைக்கும் சாமிக்காக பூக்கட்டு ஒரு புறமும், மற்றொரு புறம் தலைவலியை மாத்திரம் தீர்க்கும் மாத்திரைப் பாட்டில் ஒன்றும்

வைத்திருந்தாள். அவளுக்குத் தலை இருக்குமட்டும் தலைவலி மாத்திரையும் அவளுடன் இருக்கும். தலைவலி கூட இருக்க வேண்டுமென்று அவசியமில்லை.

'ஐயோ, இவன் என்னை அடித்துக் கொல்லுகிறானே!' என்ற அலறல் சமையலறையிலிருந்து வந்தது. சமைப்பதற்காகக் கொல்லவில்லை, சாப்பிடும்போது சமையலறையில் இருந்து இப்படி எப்போதும் சப்தம் எழும். அவர்கள் சாப்பிடும்போது வயிறு நிறைந்தாலும் நிறையாவிட்டாலும் காது நிறைந்து விடும்.

இதற்காகத்தான் ருக்மிணி சமையலறை பக்கம் போகவே மாட்டாள். ஆயிரமாயிரம் கடவுள்கள் முன்னாலே உட்கார்ந்துகொண்டு எவர் சில்வர் வாளி நிறையப் பூவை வைத்துத் தொடுத்துக்கொண்டு 'சனியனே என்ன சப்தம்?' இந்தக் கடன்காரன் ஏன்தான் இப்படிக் கதறுகிறானோ? — நாசமாப்போக'' என்று இப்படி ஏதாவது அர்ச்சனை செய்துகொண்டிருப்பாள் — கடவுளின் முன். இவள் போடும் சப்தத்தில் கடவுளெல்லாம் வாயடைத்து ஆணியில்தொங்கிக்கொண்டிருக்கும்.

o o o

வாசலில் நாயடிச்சுப்பன் காத்துக் கொண்டிருந்தான்.

o o o

"இங்கே ஒன்றும் வைக்கவில்லை'' என்று அவர் சொல்லிப் பார்த்தார். அவர் சொல்லி அவள் என்றைக்காவது கேட்டதாக எவனாவது சொன்னால் படத்திலிருக்கும் சாமி அவனை அடித்துப் போட்டுவிடும்

மணிமேகலையைப் புரட்டினாள், ஐந்து ரூபாய் நோட்டு எங்கேயாவது ஒளிந்துகொண்டிருக்கிறதோ என்று,

சிலப்பதிகாரத்தின் ஓர் அடியில் உள்ளத்தைப் புதைத்திருந்தவரின் கையிலிருந்து புஸ்தகத்தைப்பிடுங்கி தற்கால அறிஞரைப் போல முதலிலிருந்து புரட்டிப் பார்த்தாள்.

"நீ இதையெல்லாம் எதற்கு எடுத்திருக்கப் போகிறாய்?''

அவர் பொறி தெறித்தாற்போலப் பேசினார். அதிகமாகப் பேசாத அவர் ஒரு வார்த்தை சொன்னாலும் உப்புப் போட்டுச் சாப்பிடும் ஜென்மம் எதுவுமே சாகும்வரை ஞாபகம் வைத்துக்கொள்ளும்படி பேசுவார்"

தமிழ் இலக்கிய நூல்களையெல்லாம் அலசி ஆராய்ந்து 'இங்கே அந்த நோட்டு இல்லை' என்ற ஆராய்ச்சி முடிவை ருக்மணி வெளியிட்டுவிட்டு வெளியே சென்றாள்.

மூன்றாவது குழந்தை நாராய்த் தொய்ந்து நின்றது. உடம்பு நிறைய வியாதியும் கண்நிறைய கண்ணீருமாக நின்றுகொண்டிருந்தது. அதன் கையிலே மருந்து பாட்டில்.

"அம்மா, மருந்து பாட்டில் திறக்க முடியலே" என்று கெட்டுப்போன ரேடியோ பேசுவது போலப் பேசியது.

"நாசமாய்ப் போக திறந்து குடியேன். ஏன் என் பிராணனை வாங்குகிறாய்?" என்று அந்த எலும்புக் கூட்டைக் கீழே தள்ளிவிட்டு உள்ளே அவசர அவசரமாகச் சென்றாள் ருக்மிணி.

சமையலறைக்குள் சென்றவுடன் அவள் கண்கள் அருவருப்பால் நிறைந்தன. கோயிலிலிருக்கும் நவக்கிரகங்கள் போல ஆளுக்கு ஒரு பக்கம் தட்டைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தார்கள். கோயிலிலிருக்கும் நவக்கிரகமாவது வைத்த இடத்திலே கல்போலச் சாதுவாய் இருக்கும். இந்தக் கிரகங்கள் இந்தச் சமையலறைப் பிரபஞ்சத்திலே சுற்றிக் கொண்டிருக்கும். கிரக மோதலும் அவற்றின் விளைவுகளும் அடிக்கடி உண்டு. ருக்மிணி சமையலறைப் பக்கமே போவதில்லை என்று சொன்னேனல்லவா? அவள் குழந்தைகளுக்கு உணவு பரிமாறிய நாட்களை எண்ணுவதற்கு கையில்லாத முடத்தின் விரல்களே அதிகம்.

யாருக்கு எந்தக் காய் பிடிக்கும் பிடிக்காது என்பதுகூடத் தெரியாத

வள். பாவம் என்ன செய்வாள் ருக்மிணி? பூஜை அலமாரிச் சாமிகள் 'எனக்கு அலங்காரம் செய்துவிடு' என்று அல்லவா நச்சரிக்கின்றன. 'குழந்தைகளுக்கு உணவு கொடு, உன் கணவனுக்கு வேண்டியதைச் செய்' என்று அவை நிற்குத்தான் சொல்லத் தெரிகிறதா"

அப்போது உள்ளே இருந்து 'ருக்மிணி' என்று அவர் பலமான குரலில் கூப்பிடும் குரல் கேட்டது.

'உங்களுக்கு வேறு வேலை என்ன?" என்று முணுமுணுத்துக் கொண்டே எங்கும் அவள் ஐந்து ரூபாய் நோட்டைத் தேடினாள். அடுப்பு நெருப்பில் கைவைத்துத் தேடாத தோஷம்தான்.

ஐந்து ரூபாய்!

அரை மணி நேரமுன் அவள் கையிலிருந்த ரூபாய் எப்படிப் போயிருக்கும்?

அவள் வாயிலிருந்து வீட்டு வேலைக்காரர்களெல்லாம் விழுந்து புறப்பட்டார்கள்

"ஆ ருக்மிணி" என்று மறுபடியும் அவர் கூப்பிட்டார்.

"ஓ! மகா தொந்தரவு' என்று சொல்லிக்கொண்டே, உள்ளே போய்ப் பார்த்தாள் அவர் அப்படியே நாற்காலியிலே சாய்ந்துவிட்டிருந்தார். 'காலைத் திடீரென்று குடைகிறது. சில்லென்று போய் விட்டது' என்று வேதனையோடு சொன்னார். வலி அதிகமானால் தான் வெளியே சொல்லுவாரே தவிர அவர் அதிகமாகத் தன் வலியைச் சொல்லிக்கொள்ள மாட்டார். வியாதிக்கும், புகழுக்கும் விளம்பரம் தாப் பிடிக்காதவர்—பக்திக்கும்தான்.

"இதற்கு என்னை என்ன செய்யச் சொல்கிறீர்கள் எனக்குக்கூட ஒரு வாரமாக உடம்பே சரியாக இல்லை. படபடவென்று வருகின்றது. முதுகுக் குடைச்சல். உடம்பில் ரத்தமே இல்லை' என்று டாக்டர் லீலாவதி சொல்லிவிட்டாள். இந்த வீட்டில் எனக்கு எங்கே செய்துகொள்ள முடிகிறது?"

"ஆ..." என்று அவர் கதறினர். அவள் அகன்றுவிட்டாள்.

பூஜை மலர்களைப் பக்தியுடன் (?) திரட்டினாள். மலரினிடைச் சாமியைக் கண்டதுபோல அவள் முகம் மலர்ந்தது. மலரினிடையே கண் கண்டசாமியான அந்த ஐந்து ரூபாய் நோட்டு இருந்தது.

அதை எடுத்துக்கொண்டு வேகமாக நடந்தாள்.

எலும்புக்கூட்டினுள் தர்மத்திற்கு உயிரை வைத்துக் கொண்டிருந்த குழந்தை திறக்க முடியாத பாட்டிலுள் இருந்த மருந்தைக் கண்டுவிரக்தியுடன் சிரித்துக்கொண்டிருந்தது.

சமையலறையில் யுத்தகளம் அலறிக்கொண்டிருந்தது.

ருக்மிணி இந்தப் பிசாசுகளைப் பார்க்காமல் வேகமாக நடந்தாள்.

"ஆ" ருக்மிணி என்று அவர் வலி அதிகமாகிக் கூவிக் கூவி ஓய்ந்து தளர்ச்சியில் சாய்ந்துவிட்டார்.

ருக்மிணி முகமலர்ச்சியுடன் சுப்பனிடத்தில் ஐந்து ரூபாயை வைத்தாள்.

"இந்தச் சனியன்களுக்குச் சோறு போட்டுக் குழந்தைக்கு மருந்து புகட்டி, அவருக்குக் காலில் தைலம் தடவிவிட்டு வருவதற்குள் நடுநிசை ஆகிவிட்டது" என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.

ஐந்து ரூபாய்.

யாரோ நாயை அடித்துச் செடியினடியில் போட்டால் செடிகள் நன்றாக வளர்ந்து அதிகமாகப் பூக்கள் தரும் என்று சொன்னதைக் கேட்டு அலமாரிச் சாமிகள் மீது வைத்த அபரிமிதமான பக்தியால் அவற்றிற்கு அதிகமான பூக்கள் வேண்டுமென்றே தான் ருக்மிணி நாயடிச் சுப்பனிடம் இரண்டு உயிரற்ற நாய்களுக்கு ஐந்து ரூபாய் கொடுக்கிறாள்.

நாயடிச் சுப்பன் சென்றவுடன் 'கேட்டைச் சார்த்திவிட்டு புன்சிரிப்புடன் வீட்டினுள் நுழைந்தாள் ருக்மிணி.

மோட்சத்திற்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டதாக அவள் நினைப்பு!

அரக்கர்கள் யார்?

சாமி சிதம்பரனார்

ஏகாதிபத்திய சர்வாதிகார வெறியர்கள் அரக்கர்கள். சர்வாதிகாரத் தன்மையே அரக்கத் தன்மை. தீபாவளி என்னும் பண்டிகைக்குப் புராணக்கதையுண்டு. அக் கதையின் தத்துவம், சர்வாதிகாரத்திற்கும், ஜனநாயகத்துக்கும் நடந்த போரில் ஜனநாயகம் வெற்றி பெற்றது என்பதுதான்.

நரகாசுரன் என்னும் அரக்கன், தேவர்களுக்கும், மக்களுக்கும் நலஞ்செய்யும் இந்திரன் அரசைக் கவர்ந்தான். பதினாறாயிரம் கன்னியர்களைச் சிறையில் அடைத்து வைத்திருந்தான். கண்ணன், அவனைக் கொன்று தேவர்க்கும், மக்களுக்கும், பெண்களுக்கும் விடுதலை யளித்தான். இதுவே புராணக் கதை.

தீபாவளிப் பண்டிகை தேசியப்பண்டிகை போலக் கொண்டாடப் படுகிறது. இந்த நாளில் அரக்கர்களைப் பற்றி நாம் அறிந்து கொள்ள வேண்டும். இந்நாளைய அரக்கர்களிடமிருந்து மனித சமூகம் விடுதலை பெறவேண்டும்.

அரக்கர்கள் யார்? என்ற இக்கட்டுரை, அவர்களைப் பற்றி அறிந்து கொள்ளத் துணை செய்கின்றது.

அரக்கர்கள் யார்? என்ற கேள்விக்குப் பொதுமக்கள் உடனே பதில் கொடுப்பார்கள்; என்ன பதில் தருவது என்று யோசனை செய்து கொண்டு நிற்கமாட்டார்கள்; கன்னத்தில் பளீர் என்று ஓங்கி அறைவது போல் பட்டென்று பதில் சொல்லுவார்கள். "இரக்கமற்ற கொடியவர்கள் தாம் அரக்கர்கள்" என்பதே அவர்கள் தரும் பதிலாக இருக்கும்.

இந்த உண்மையை மதிக்காத ஒரு கும்பல் இன்று தமிழ்நாட்டில் உலவுகின்றது. அக் கூட்டம் உள்ளத்தில் எதையோ நினைத்துக் கொண்டு வெளியில் எதையோ சொல்லிக் கொண்டு வருகின்றது. மக்கள் கருத்துக்கு மாறாகப் பேசுவதுதான் பகுத்தறிவு; மக்கள் கொள்கைக்கு விரோதமாக எழுதுவதுதான் ஆராய்ச்சி; பழமையான நம்பிக்கை நல்லதாக இருந்தாலும் சரி, பொல்லாததாக இருந்தாலும் சரி, அதை எதிர்த்துப் பேசுவதுதான் புரட்சிக் கருத்து; என்ற போக்கிலே போய்க்கொண்டிருக்கின்றது அக்கும்பல்.

இந்தக் காரணத்தால்தான் அரக்கர்கள் யார்? என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு விடைதர வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கின்றது. இந்தக் கேள்விக்கான—உண்மையான பதிலை ஆராய்ந்து பார்ப்போம்.

அரக்கன் என்ற சொல்லுக்கு அகராதியில் விளக்கமான விடைகாணப் படுகிறது. "அரக்கன்; அசுரன். இராக்கதன். நிசாசரன். கொடியோன். இரக்கம் அற்றவன்" என்பது அகராதி கூறும் பொருள்.

கம்பன் கருத்து

இந்த அரக்கர்களைப் பற்றிக் கம்பன் தெளிவாகக் கூறுகின்றான். அவன் அரக்கர்களைப் பற்றிச்

சொல்லி யிருப்பது, தானாகக் கூறியதன்று; அரக்கர்களின் மேல் வீண் வெறுப்புக் கொண்டு விளம்பியதன்று. அரக்கர்களின் தன்மை, அவர்களின் செயல்கள், மனித சமுதாயத்திலே அவர்கள் நடந்து கொண்ட விதம் இவைகளையெல்லாம் நன்றாகக் கண்டறிந்தவன் கம்பன். ஆதலால் அவர்களைப் பற்றித் தெளிவாகத் தெரிவிக்கின்றான்.

"இரக்கம் என்று ஒரு பொருள்
இலாத நெஞ்சினர்;
அரக்கர் என்று உளர் சிலர்;
அறத்தின் நீங்கினர்.

இரக்கம் என்று சொல்லப்படுவதே சிறந்த மனிதப் பண்பு; மக்கள் உள்ளத்திலே என்றும் குடிகொண்டிருக்க வேண்டிய ஒப்பற்ற பொருள் இந்த இரக்கம்தான். இந்தச் சிறந்த பொருள் இல்லாத நெஞ்சத்தினர் உண்டு. இந்தக் கல் நெஞ்சினர் தாம் அரக்கர்கள்; இத்தகைய அரக்கர்கள் சிலர் உண்டு; இவர்கள் அறநெறியை விட்டு விலகியவர்கள்."

இவ்வாறு அரக்கர்களின் தன்மையை எடுத்துரைத்த கம்பன், மேலும் அவர்கள் இயல்பை விளக்கிக் கூறுகின்றான்:

"வஞ்சமும் களவும் வெஃகி
வழி அலா வழிமேல் ஓடி
நஞ்சினும் கொடியர் ஆகி
நவை செயற்கு உரிய நீரார்;
வெப்பின அரக்கர்.

பிறரை வஞ்சித்து ஏமாற்றும் வித்தையைக் கற்றவர்கள். பிறர் பொருளை—பிறர் வருந்தித் தேடிய உடைமையை வஞ்சகத்தால் களவாடுகின்றவர்கள்; இக் கொடுந் தொழிலையே எப்பொழுதும் செய்து வாழ விரும்புகின்றவர்கள்; வாழ்கின்றவர்கள்; நேர் வழியிலே—நியாயமான அறவழியிலே நடக்கமாட்டார்கள், அறமற்ற கெட்ட வழியிலே நடப்பார்கள். மனித சமூகத்திற்கு தீங்கிழைப்பதிலே விஷத்தைக் காட்டிலும் கொடியவர்களாயிருப்பார்கள். எப்பொழுதும் குற்றம் செய்வதையே—அதாவது செய்யக் கூடாத செயல்கள் எவை எவை யென்று அறிவுள்ளவர்களால் விலக்கப்பட்டிருக்கின்றனவோ அவைகளையே—அக்குற்றங்களையே செய்யுந் தன்மையுள்ளவர்கள் இவர்களே—இப்படிப்பட்ட குணம் படைத்தவர்களே, கடுஞ் சினம் கொண்ட கருணையற்ற அரக்கர்கள்!

இவ்வாறு அரக்கர்களின் விருப்பத்தையும், செயல்களையும் எடுத்துக் கூறினான். மேலும் அவர்களின் தன்மையை விளக்குகின்றான் கம்பன்.

"பாவம் தோன்றிய காலமே
தோன்றிய பழையோர்;
தீவம் தோன்றிய முழைத்துணை
யெனத் தகுகண்ணர்;
கோவம் தோன்றிடில் தாயையும்
உயிர் உணும் கொடியர்

"அரக்கர் இன்று நேற்றுத் தோன்றியவர்கள் அல்லர். அவர்கள் பழமையானவர்கள். பாவம் என்பது அதாவது அக்கிரமம், அநீதி, கொடுமை, என்று சொல்லப்பட்ட பாவம் எப்பொழுது பிறந்ததோ அப்பொழுதே அரக்கர்களும் பிறந்து விட்டார்கள். அவர்களை எளிதிலே அடையாளம் கண்டு கொள்ளலாம். அவர்கள் கண்களிலே எப்பொழுதும் கோபக் கனல் அணையாமலிருக்கும். விளக்கு எரிகின்ற மலைக் குகை போன்ற கண்களை உடையவர்கள். முகத்தில் சாந்தம் காணப்படாது. கொடுமை தான் கூத்தாடும். எந்த அநீதியைச் செய்யவும் அஞ்சாதவர்கள். அவர்களுக்குக் கோபம் மிகுந்துவிட்டால், தம்மைப் பெற்றெடுத்த தாயையும், கொலை செய்து தின்றுவிடும் கொடியவர்கள்'.

இவ்வாறு அரக்கர்களின் தோற்றத்தைக் கூறினான் கம்பன். இங்குக் காட்டப்பட்ட மூன்று பாடல்களும் ஒரே இடத்தில் கூறப்பட்டவை அன்று. முதல் செய்யுள் ஆரணிய காண்டத்தில் காணப்படுவது; இரண்டாவது செய்யுள் சுந்தர காண்டத்தில் சொல்லப்படுவது; மூன்றாவது செய்யுள் யுத்த காண்டத்தில் மொழியப்படுவது. கம்பன், அரக்கர்களின் தன்மையை—தனது

காவியத்தில் பலவிடங்களிலும் சொல்லிக் காட்டுகின்றான். மேலே காட்டிய கம்பன் கருத்துக்களைக் கொண்டு அரக்கர்கள் யார் என்பதைத் தெரிந்துகொள்ளலாம்.

கம்பன் கருத்து—அரக்கர்களைப் பற்றிக் கம்பன் கொடுத்திருக்கும் விளக்கம்—பண்டைத் தமிழ் மக்களின் கருத்தேயாகும்;

இராமலிங்கர் கருத்து

பிற்காலத்துப் புலவரான இராமலிங்க அடிகள் அரக்கர்கள் யார் என்பதைப் பற்றிக் கூறியிருக்கின்றார். தேவர்கள் யார்? அசுரர்கள் யார்? மக்கள் யார்? என்ற வினாக்களை எழுப்பிக்கொண்டு அவைகளுக்கு விடையளிக்கிறார் இராமலிங்க அடிகள். இவ்விடையிலே அசுரர்கள்—அரக்கர்கள் என்பவர்கள் யார் என்பதைத் தெளிவாகக் காணலாம்.

" சுரர், அசுரர் என்பதற்குப் பொருள்:

சுரர் என்பது அறிவுடைய ஜீவர்கள் என்பது முதல், வாசனாதி வஸ்துக்கள் எல்லாம் சுரர்.

அகங்காரி முதல் துர்க்கந்த வஸ்துக்கள் எல்லாம், பூமிக்குள் தோன்றும் கந்த மூலம், அழுக்குடைய வஸ்து இவைகள் அசுரர். மேலே குறித்தவை இராமலிங்க அடிகளின் வாசகம்.

அறிவுள்ள மக்களும், மக்களுக்குப் பயன்படும் பண்டங்களும் சுரர்; அதாவது தேவர்கள்.

அகங்காரம் பிடித்த அறிவற்றவர்கள், நிலத்திலே தோன்றும், பயன்படாத பண்டங்கள்; அழுக்கடைந்த உபயோகமற்ற பொருள்கள்; இவைகள் அசுரர்; அதாவது அரக்கர்.

இவைகளே மேலே கண்ட இராமலிங்கர் எழுதியவாசகத்தின் பொருள்.

இதனால், அசுரர் என்பவர்கள்—அதாவது அரக்கர் என்பவர்கள் இன்னார் என்று விளக்கினார் "அகங்காரம் பிடித்தவர்களே அசுரர்கள், அரக்கர்கள்" என்பது இராமலிங்கர் கருத்து.

அகங்காரம் பிடித்தவன், 'நானே பெரியவன்; நானே வீரன்; நானே புத்திசாலி; நானே ஆராய்ச்சி வல்லோன்; நானே எல்லாம் உணர்ந்தவன்" என்கிற கர்வம் பிடித்தவன் ஆவான்; இவன் யாரையும் மதிக்க மாட்டான்; தான்தோன்றித் தம்பிரானாகத் தான் வாழ்வான்; தான் பிடித்த முயலுக்கு மூன்று கால்கள் தான் என்று சாதிப்பான் இவ்வெண்ணம் படைத்தவன், மனித சமுதாயத்தை மதிக்கமாட்டான் எல்லாம் தனக்கு என்ற நினைப்புடன், தனது சுகவாழ்வுக்காக எதையும் செய்யத் துணிவான். ஆகையால் அகங்காரம் பிடித்தவர்களை அசுரர்—அரக்கர் என்று கூறினார் அடிகள்.

உயர்ந்த ரகம்!
நீடித்த உழைப்பு!
உயர்ந்த தயாரிப்பு!
குறைந்த விலை!

எங்கள் சொந்த தறிகளில் பலரக பேட்டுகளையுடைய கோ ம்பாக்கம், பம்பம்பட்டு சேலைகள், 100x100 சேலைகள், 80, 60, 40 நம்பர் சேலைகள் உங்கள் மனதிற்கு கவர்ச்சியளிக்கக் கூடிய முறையில் தயார் செய்கின்றோம்.

எங்கள் விலாசம்:

P. M. RENGAN,
Hand Loom Cloth Manufacturer & Leading Merchant,
6, PANTHADY CROSS STREET, MADURAI (S I.)

தேவர்களும், மனிதர்களும் வெவ்வேறு இனத்தினர் அல்லர். ஒரே இனத்தினர்தாம். அறிவிலே உயர்ந்தவர்கள் தேவர்கள்; அறிவிலே தாழ்ந்தவர்கள் மனிதர்கள்; என்பதே இராமலிங்கர் கருத்து.

"மேலும் அறிவின் உயர்ச்சி தாழ்ச்சியால் தேவர் என்றும், மனிதர் என்றும், சொல்லப்பட்டதே தவிர, வேறு எந்தக் காரணத்தாலும் அல்ல."

என்பது இராமலிங்க அடிகள் வாசகம்.

மேலே காட்டிய இராமலிங்கர் வாசகங்களைக் கொண்டு நாம் அறியும் உண்மை கீழ்வருவது:

அக்கிரமம்செய்துகொண்டு, அகங்காரம் பிடித்துத் திரியும் மக்கள் அசுரர்கள்.

தன்னலமற்றவர்களாய்—அறிவுள்ளவர்களாய் மனித சமுதாயத்தின் நல்வாழ்வுக்காகப் பாடுபடுகின்றவர்கள் தேவர்கள்

அக்கிரமும் பண்ணுமல், தன்னலத் துறப்பும் இல்லாமல், சாதாரணமாக உயிர்வாழும் மக்கள் மனிதர்கள்.

இவைகளே இராமலிங்க அடிகள்—மனித சமுதாயத்தின் அமைப்பை—வாழ்வை நன்ருகக் கண்டறிந்த இராமலிக்க அடிகள் கூறும் உண்மைகள்.

இலக்கண நூலார்

இலக்கண நூலார் மக்கள் பிரிவை மூன்ருகப் பிரித்தனர். மக்கள், தேவர், நரகர் என்பதே அம்முப் பிரிவு.

மக்கள் என்பவர்கள் அறிவுள்ளோரைப் பின்பற்றி இன்பமுடன் வாழ முயற்சிப்பவர்கள்.

தேவர்கள் என்பவர்கள் தன்னலம் இன்றி மக்கள் சமுதாயத்தின் நல்வாழ்வுக்காக உழைப்பவர்கள்.

நரகர் என்பவர்கள் தன்னலமும் தீயொழுக்கமும் உள்ள கீழ்ப்பட்டவர்கள். இவர்கள் அரக்கர்கள் ஆவார்கள்.

நாம் அறியும் உண்மை

இக்கருத்திலேதான் உயர் திணையை—மக்களை—மக்கள், தேவர், நரகர் என்ற மூன்று பிரிவாகப் பிரித்துரைத்தனர் இலக்கண நூலார்.

மேலே கூறியவைகளைக் கொண்டு அரக்கர்கள் யார் என்பதைத் தெளிவாக நாம் காணலாம்.

"இரக்கம் அற்றவர்கள்; வஞ்சனை உள்ளவர்கள்; குற்றமே செய்வோர்; பாவத்துடன் பிறந்தவர்கள்" அரக்கர்கள் என்பது கம்பன் கொடுத்திருக்கும் விளக்கம்.

"அகங்காரம் பிடித்தவர்கள் அசுரர்கள்" என்பது இராமலிங்க அடிகள் கருத்து.

கீழ்த்தரமான ஒழுக்கமுள்ளவர்கள் தேவரினும், மக்களினும் கீழ்ப்பட்டவர்கள். நரகர்கள் எனப்படுவோர். அவர்களே அரக்கர்" என்பது இலக்கண நூலார் கருத்து.

மேலே கூறியவைகளைக் கொண்டு நாம் அறியும் உண்மை, தேவரும், மக்களும், அரக்கரும் மனித இனத்தைச் சேர்ந்தவர்கள் என்பதுதான்.

இராமாயணத்திலே, ஏனைய புராணங்களிலே அரக்கர்களைப் பற்றிச் சொல்லப்படும் கதைகளைப் பார்த்தால் இந்த உண்மை விளங்கும்.

தற்பெருமை பாராட்டித் தன்னலத்துக்காகவே பாடுபடுகின்றவர்கள் அரக்கர்கள்; மற்ற மக்களைத் தங்களுக்கு அடிமையாக்கி, அவர்கள் உழைப்பைக் கொள்ளை கொள்ளுகின்றவர்கள் அரக்கர்கள்; கட்டுப்பாடில்லாமல், கண்டபடி திரியும் வாழ்க்கையுள்ளவர்கள் அரக்கர்கள்; அவர்கள் மற்றவர் மனைவி, அழகாக இருந்தால், அவளை வலியத் தூக்கிக் கொண்டு போய்விடுவார்கள்; புலன் அடக்கம் இல்லாதவர்கள்; குடிகாரர்கள், கொலைகாரர்கள்; ஒழுக்கம் இல்லாதவர்கள்; ஒழுக்கம் உள்ளவர்களைத் தங்கள் பகைவர்களாக நினைப்பவர்கள்; தமது இஷ்டப்

படி சர்வாதிகாரம் செலுத்துகின்றவர்கள்; நாங்களும், மனிதர்களாக உலகில் இன்புற்று வாழ வேண்டும் என்று விரும்புகின்ற ஏழைகளின் உரிமைப் போராட்டத்தை அடக்கு முறையால் நசுக்குகின்றவர்கள்.

இவர்கள் தாம் அரக்கர்கள் என்பதில் ஐயம் இல்லை. இதுவே நமது முன்னோர்களின் கொள்கை. இத்தகைய அரக்கர்களைத்தான் நமது பண்டைய நூல்கள் எல்லாம் படம் பிடித்துக் காட்டியிருக்கின்றன.

அரக்கர்கள் தமிழர்களா?

இந்த உண்மைக்கு மாறாக இன்று ஒரு சிலர் ஆராய்ச்சித் துறையில் இறங்கிச் சேற்றைப் பூசிக்கொண்டு, திரிகின்றனர்.

"தமிழர்களின் முன்னோர்களை அரக்கர்கள்; அசுரர்கள்; என்று ஆரியர்கள் சொல்லி வைத்தார்கள். அரக்கர்கள் செய்த காரியங்கள் எல்லாம் பகுத்தறிவுள்ள செயல்கள். அவைகளை ஒழித்து, மூடநம்பிக்கைகளை மனித சமுதாயத்தில் நிலைநிறுத்தவே அரக்கர்களைக் கொடியவர்களாக வர்ணித்தார்கள்" என்று கூறிக் குழப்பத்தை உண்டாக்குகின்றனர். இத்தகைய கூற்றுப் பொருத்தமற்ற கூற்று என்பதை உணர வேண்டும்.

நமது முன்னோர்கள் "கொடுமையை, அக்கிரமத்தை, அநியாயத்தை, சுயநலத்தை, படுபாதகத்தை, அரக்கர்களாக உருவகம் செய்தனர். இவைகளைப் பின்பற்றும் மனிதர்களை அரக்கர்கள்—அசுரர்கள் என்று கூறினர். இந்த உண்மையை மனித சமுதாயம் மறந்து விடக்கூடாது.

இன்று, மனித சமுதாயத்தை அடக்கியாள நினைக்கின்றவர்கள் யாரோ, அவர்களே அரக்கர்கள்; மனித சமுதாய நல்வாழ்வுக்காக உழைக்கின்ற உத்தமர்களை கொலை செய்கின்றவர்கள் யாரோ, அவர்கள்தாம் அரக்கர்கள்; எங்கள் உழைப்பின் பயனை நாங்கள் பெறவேண்டும்' என்று போராடுவோரைக் கொடுமையாக அடக்குகின்றவர்கள் யாரோ அவர்கள் அரக்கர்கள். எல்லா மக்களுக்கும் கல்வி வேண்டும், வாழ்வதற்கு வேண்டிய வசதிகள் வேண்டும், இழிந்த மனிதர் தாழ்ந்த மனிதர் என்ற வேற்றுமை மாண்டு மடியவேண்டும் என்று சொல்லுகின்றவர்களை யார் தேசத் துரோகிகள் என்று சொல்லுகின்றார்களோ அவர்கள் அரக்கர்கள். இந்த உண்மையைத் தமிழ் மக்கள் உணர்ந்துகொள்ள வேண்டும். இந்த உண்மையை உணர்ந்தும், யாரேனும் தங்களை அரக்கர்கள் என்று சொல்லிக் கொள்வதில் பெருமைப் படுவார்களாயின் அவர்களிடம் நாம் இரக்கம் காட்டத்தான் வேண்டும்.

கைத்தறி சரிகை வேஷ்டிகள்

நாங்கள் சொந்தமாகத் தயாரிக்கும் 100-ம் நம்பர் 8 முழம் சாதா பேட் வேஷ்டிகள் 100-ம் நம்பர் சரிகை வேஷ்டிகள், 100-ம் நம்பர் சரிகை அங்க வஸ்திரங்கள், 100-ம் நம்பர் சாதா அங்க வஸ்திரங்கள் குறைந்த விலையில் உயர்ந்த முறையில் தயாரிக்கின்றோம்.

உற்பத்தியாளர்:

P. M. முத்துகுரு செட்டியார்,

கைத்தறி ஜவுளி உற்பத்தி & விற்பனையாளர்,

நாத்தய்யங்கார் பேட்டை P. O. திருச்சி ஜில்லா.

திருவடி

சுப்பு ஆறுமுகம்

கற்பகாம்பிகை எழுந்தருளியிருக்கும் திருக்கோயில். அடி முதல் முடிவரை அம்பாளுக்கு அனுதினமும் தங்க அங்கி அணிவதுண்டு. பூமாலை அலங்காரமும் நாளுக்கொரு விதமாகப் பொலிவுடன் திகழும். நெற்றியில் சந்தனப்பொட்டு; அதன் நடுவே குங்குமமிட்டு நிகரற்ற முறையில் அழகுக்கு அழகுசெய்து வைத்திருப்பார் அர்ச்சகர். அன்பர்களுக்கு அபயம் கூறும் தோரணையில் அம்பிகை சமைந்திருக்கும் காட்சி கண்பெற்றோரெல்லாம் காணவேண்டிய ஒரு மாட்சி! அந்தக் கோயிலின் மூல விக்ரகத்தில் மட்டுமல்ல, ஒவ்வொரு தூணிலும் ஒவ்வொரு சுவரிலும்கூட தெய்வீகம் பரிணமிக்கும். பல நூற்றாண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட கோயில்!

திருவாளர் சச்சிதானந்தம் அவர்கள்தான் அங்கே மூன்றுகால பூசைக்கும் தேவாரம் பாடுபவர்; கோயில் மான்யத்திலிருந்து ஏதோ கொடுக்கிறார்கள். 'மான்யத்துக்காகவா பாடுகிறார், மகேஸ்வரியின் திருவடிக்காகவல்லவா பாடுகிறார்' என்று அங்குவரும் ஒவ்வொருவரும் அவரைப் புகழ்வதுண்டு. சச்சிதானந்தம், அம்மையின் முன் நின்று பாடுவார்; ஆடுவார்; புலம்புவார்; கண்ணீர் மணிகளைக் காணிக்கையாகக் கீழே உதிர்ப்பார். 'தேவி! நின் திருவடி கிடைப்பதென்றோ' என்று மெய் சிலிர்க்கக் கூவுவார். கேட்போரையும் மெய்சிலிர்க்க வைப்பார். அவர் தேவாரம் பாடுவதைவிட, உத்வேகத்தில் உணர்ச்சிக் கொந்தளிப்பில் அம்மையிடம் பேசும் வாக்கியங்கள், கர்ப்பகிரகத்தினுள்ளிருக்கும் அர்ச்சகரையும் சற்று அசைத்து விடுவதுண்டு. 'புவனேஸ்வரி! பொன்னை விரும்பவில்லை; புகழை விரும்பவில்லை; உன்னை விரும்புகிறேன்; உன் திருவடி வேண்டுகிறேன்'—சச்சிதானந்தம் இப்படியுரைப்பதையே மனனம் செய்துகொண்டு சில அன்பர்கள் தாங்களும் அப்படியே பிரார்த்திப்பதுண்டு!

வரவர பக்தர்களுக்கு சச்சிதானந்தத்திடமும் பக்தியே ஏற்பட்டு விட்டது என்று சொல்லலாம். அம்பாளிடம் நெருங்கிப் பழகும் அர்ச்சகருக்குக் கொடுக்கும் மதிப்பைவிட, திருவாளர் சச்சிதானந்தத்துக்கு, ஒரு உத்திராட்ச பரிமாணம் அதிக மதிப்பே கொடுக்கலாயினர். கோயிலில் பிறந்த இவரது புகழ், தவழும் பருவம் பெற்று, கோயில் வாசலுக்கு வர ஆரம்பித்தது. அதிலிருந்து அங்கே பக்தசிரோன்மணிகள் கழற்றிப்போடும் செருப்புகளுக்குக் காவலிருக்கும் ஒரு கால் நொண்டி கந்தசாமி சச்சிதானந்தத்தை தெய்வப் பிறப்பாகவே நினைக்கவாரம்பித்துவிட்டான். மற்றவர்களுக்கு செருப்பைத் துடைத்து முன் வைப்பது போல் அவருக்கு வைப்பதில்லை. ஸ்ரீ ராமபிரானின் பாதுகைக்கு பரதன் கொடுத்த மதிப்பை, கந்தசாமி சச்சிதானந்தத்தின் திருவடியைச் சுமக்கும் செருப்புக்குக் கொடுக்கலானான். அவர் வருவார். கண்டதுமே கழியை ஊன்றி காலால் எழுந்துநிற்க முயல்வான். குனிந்து தன் வேஷ்டித் தலைப்பால் அதைத் துடைக்கப்போவான். துடைக்கு முன் தன் கையிலுள்ள தூசியையும் தட்டிக்கொள்வான். துணியிலுள்ள தூசியையும் உதறுவான். பணிவு, கனிவு இவைகளை, அவனது ஒவ்வொரு நெளிவு சுளிவிலும் காணலாம். அப்படித் துடைத்த பிறகு அவர் முன்னே பாதுகையை வைப்பான். அவர் எல்லோரும் என்றும் கொடுப்பது போல இரண்டு காசுகளை எறிந்துவிட்டுப் போவார். நொண்டி கந்தசாமியோ அதை எடுத்து கண்களில் ஒற்றிக் கும்பிட்டு தன் இடுப்பில் தனியாக முடிந்துகொள்வான்; தூயவரின் தூய செருப்புகளை தூய்மையாக்கியதால் வந்த துட்டல்லவா!

அன்றிரவு மழை வேறு ஆரம்

பித்துவிட்டது. கோயில் வாசலில் இருந்த கந்தசாமியின் முன்னுள்ள செருப்புகள் நனைந்தன. கந்தசாமி இருக்குமிடத்தில் மட்டும் மழைத் தண்ணீர் விழவில்லை. உடனே மழைவிழும் பகுதிக்கு தத்திவந்து, செருப்புகளை அவசர அவசரமாக எடுத்து நனையாத இடத்தில் வைத்தான். தான் நனைந்தான். மணியோ பத்தாயிற்று. அர்த்தசாமப் பூசை முடிந்தது கோயில் நடையடைக்கும் நேரமும் ஆகிவிட்டது. எல்லோரும் வெளியே வந்து கந்தசாமியிடம் மாமூல் படி தாசை விட்டெறிந்து செருப்பெடுத்துப் போயினர்.

உள்ளே எட்டி எட்டிப் பார்த்தான், கந்தசாமி. வீதியிலும் அங்குமிங்கும் பார்த்தான் யாரையோ எதிர்பார்த்துக் கொண்டிருப்பவன் போல் தென்பட்டான் ஆம், நடையடைக்கும் நேரமாயிற்று தர்மகர்த்தா அறையில் கோயில் சேவகர்கள் யார் யாரோ ஏதேதோ பேசிக் கொண்டிருந்தார்கள். சச்சிதானந்தம் வீட்டுக்குப் போய்த்தானிருக்க வேண்டும்!

கந்தசாமி தன்மடியில் எதையோ எடுத்து மறைத்து வைத்தான். விரைவாக துணைக்கம்பை எடுத்தான் மாடவீதியில் நடந்துவந்து கொண்டிருந்தான்.

"பிடி"—இப்படி ஒரு பேய்க்குரல்.

டக்! டக்! டக்! ஒரு இயற்கைக் கால். கந்தசாமி விரைவாக நடந்து கொண்டிருந்தான்!

"ஊம்... விடாதே"—பேய்க்குரல் இன்னும் பலமானது.

கந்தசாமி பொருட்படுத்தவில்லை: டக்! டக்! விரைவாக நடந்துகொண்டேயிருந்தான்!

போலீஸ்காரர்களின் விசில் சத்தம் ஒரு சந்தில் திரும்பினான். இரு முனையிலிருந்தும் போலீஸ்காரர்கள் "ஊம்" என்று அதட்டியவாறே அவன் பக்கம் பாய்ந்தார்கள்.

கீழே விழுந்து விட்டான்.

கந்தசாமிக்கு அதிர்ச்சி. பூகம்ப பூமியானது அவன் முகம். வியர்த்தான்—பயந்தான்!

"நடஸ்டேசனுக்கு"

"ஏனுங்க?"

"கோயிலிலே அம்மனோட தங்கத் திருவடியை திருடினேயில்லே, அதுக்குதான்"

"ஐயையோ! நான் திருடலையே!"

"மடியில் என்னடா?" இது மற்றொரு போலீஸின் புலன் விசாரிப்பு.

"இதுங்களா" நம்ம கோயிலிலே தேவாரம் பாடிகிறாரு ங்க, சச்சிதானந்தம் ஐயா... அவரு செருப்பை மறந்து விட்டுட்டுப் போயிட்டாரு.. வீட்டிலே கொண்டு கொடுக்கப் போகிறேன்."

அவனே மடியிலிருந்து எடுத்துக் காட்டினான்.

நம்பவில்லை. அதை பிடுங்கியே அடித்தார்கள்.

"இந்த நேரத்திலே நல்லமனுசன் பேரைச் சொன்னால் விட்டுவிடுவோமின்னு நினைச்சியா? வாடா ஸ்டேசனுக்கு. கதையில்லா அளக்கிறான் கதை! அங்கே உதைக்கிற உதையிலே அம்மனோட திருவடியைத் திருடி யார் மூலமாகக் கொடுத்து அனுப்பிச்சிருக்கேங்கிற உண்மை தானாக வெளியே வந்து குதிச்சிடாது!"

கரகரவென இழுத்துச் சென்றார்கள். இன்னும் மழை நிற்கவில்லை. சிலம்வேறு வழுக்கியது. கீழே விழுந்த துணைக்கம்பைக் கூட எடுக்க விடாமல் இழுத்தனர்.

எதிரே காலை வியாபாரத்திற்காக கசாப்புக் கடைக்காரன், கிராபராதிகளான ஆடுகளை கரகரவென இழுத்து வந்து கொண்டிருந்தான்.

இவன் ஆடுகளைப் பார்த்தான்.

ஆடுகள் இவனைப் பார்த்தன.

கூடக்கொஞ்ச நேரமும் பார்க்கி முடியவில்லை, வியாபாரி அவைகளை

இழுத்துச் சென்றான். போலீஸ்காரர்கள் இவனை இழுத்துச் சென்றார்கள்.

"அவனை விடாதீர்கள். அவனைத் தவிர அந்தத் தங்கத் திருவடியை வேறு யாருமே திருடியிருக்க முடியாது. கோயிலுக்கு வெளியே நின்னபடிக்கே அந்தத் தரித்திரம், மூல விக்ரகத்தை கும்பிடுகிறமாதிரி 'பாவலா'ப் பண்ணினதை, எத்தனையோ நாள் நானே பார்த்திருக்கிறேன். அவனை விடாதீர்கள்"— இப்படி கற்பகாம்பிகைக் கோயில் 'தர்ம'கர்த்தாவிடமிருந்து ஸ்டேசனுக்குப் போன் வந்தது!

ஸ்டேசனுக்குள்ளே கந்தசாமி கொண்டுவரப்பட்டான்; அப்போது ஒரு மனிதனாக இல்லை; கால்பந் தாக்கிவிட்டனர்!

"உண்மையைச் சொல்லு, உண்மையைச் சொல்லு" என்று உதைத்தனர். அவன் உண்மையைத்தான் சொல்லிக் கொண்டிருந்தான். மேலும் உதைத்தனர். அவர்களுக்குத் தேவைப்பட்ட உண்மை அவனிடமிருந்து வரவில்லை. உண்மையில்தான் எத்தனை ரகம்!

"ஊம். திருட்டுப்பயலே! உன்னை என்ன செய்கிறேன் பார்"—இப்படி சப்-இன்ஸ்பெக்டரும் அதட்டினார்; அடித்தார்!

அழுதான்; என்னை அடிக்காதீர்கள் என்று தொழுதான்; அலறினான்; கடைசியில் உள்ளேயும் தள்ளப்பட்டான்!

கோயில் பக்கம் செருப்புகளுக்கு காவல் காக்கும் கூலியில் தன்புருஷன் கஞ்சிக்குக் குறுநொய் வாங்கிவருவான் என்று எதிர்பார்த்தவாறே குடிசை வாசலில் தன் மனைவி வழக்கம்போல இன்னும் நின்றுகொண்டிருப்பாள் என்பதை எண்ணினான்; அவன் முன்பு கொண்டுவைக்கப்பட்ட உணவுத் தட்டிலே, அவனது கண்களிலிருந்து கண்ணீர் உருகி உருகி சிந்தித் தேங்கிக்கொண்டேயிருந்தது.

இதே நேரத்தில்...?

திருவாளர் சச்சிதானந்தத்தின் வீட்டு ரகசிய அறையிலே, அம்பாளின் பொன் அங்கித் திருவடி உலையிலிடப்பட்டு உருகி குழம்பாகத் தேங்கிக் கொண்டிருந்தது!

அவனுக்குக் கண்ணீரின் தேக்கம்!

இவருக்குப் பொன்னுருக்கின் தேக்கம்! ●

உயர்ந்த ரகம்
VIJAY FABRICS

குறைந்த விலை
TAJ TEX

எங்கள் சொந்த தறிகளில் தயாராகும் உயர்ந்த ரக பெட்ஷீட் ரகங்களும், தி. மு. க. பார்டர் துண்டு மடிகளும், ஸ்பெஷல் மலபார் சிட்டை துண்டுகளும், நாப்கின், ஹனிகோம், தலையணை உரை, டேபிள் க்ளாத் வகையறுக்கள் சிறந்த முறையில் தயாரித்து வருகின்றோம்.

கிடைக்குமிடம் :

T. A. ஜெவந்திநாதன் & பிரதர்ஸ்,
மேட்டூர் கெமிக்கல்ஸ் காலனி,
மேட்டூர் டாம், :: சேலம் ஜில்லா.

தமிழ் நாட்டில் தாய்வழிச் சமுதாயம்

நா. வானமாமலை. எம். ஏ. எல். டி

பண்டைத் தமிழ் நூல்களில் பல அரசர், சிற்றரசர்களைப் பற்றிப் படிக்கிறோம். சிறப்புப் பெற்ற அவர்களெல்லாம் ஆண்கள். அவர்கள் தாயமுறை ஆண்வழியாகவே காணப் படுகிறது. தெய்வங்களில் ஏற்றமுடைய அனைத்தும் ஆண் பாலாகவே காணப்படுகின்றன. குறிஞ்சித் தெய்வமான சேயோன், (முருகன்) முல்லைத் தெய்வமான, மாயோன் (திருமால்) நெய்தல் தெய்வமான வருணன், மருதத் தெய்வமான இந்திரன் ஆகிய அனைவரும் ஆண்பால் தெய்வங்களே. காவியங்களில் ஆண்களே தலைமை பெறுகிறார்கள். மணிமேகலை கதைத் தலைவியாக உருவாக்கப் பட்டிருப்பினும், அவளது ஆசிரியர் அறவணர் என்ற ஆண் என்பது சிந்தனைக்குரியது. சீவகசிந்தாமணி, பெருங்கதை ஆகிய காவியங்களில் ஆண் தலைமை பெறுவதும், பல பெண்கள், தலைவனுக்கு வாழ்க்கைப்பட்டு, அவனது வெற்றிக்கு உதவுவதும் பெண்களுக்கு, ஆணுக்குத் தாழ்ந்த ஸ்தானத்தைத்தான் காவியங்கள் அளிக்கின்றன என்பது தெளிவாகிறது. புறநானூற்றில் பெரும்பாலான செய்யுட்கள், ஆண்களின் வெற்றிச் சிறப்பையும், கொடைச் சிறப்பையும் போற்றுகின்றன. பெண் கவிகள் சிலர் பாடிய செய்யுட்கள் இத்தொகை நூலிற் காணப்பட்ட போதிலும், அவை ஆண்களுடைய வீரத்தையும், கொடையையும் பாராட்டுவனவாகவே உள்ளன. ஒன்றிரண்டு செய்யுட்கள் பெண்களுடைய துயரங்களைச் சித்திரித்த போதிலும் அவை ஆண்களைப் பிரிந்தபோது பெண்கள் படும் வேதனையாகவே இருக்கிறது.

இவை எல்லாவற்றையும் சான்றாகக் காட்டி தமிழ் நாட்டில் எப்பொழுதும் தந்தை வழிச் சமுதாயமே இருந்து வந்திருக்கிறதென்றும், ஆண் ஆதிக்க சமுதாயமே எப்பொழுதும் நிலைகொண்டிருந்தது என்றும் சில ஆராய்ச்சியாளர்கள் முடிவுக்கு வருகிறார்கள். அவர்கள் முடிவு சரி தானா? மேற்கூறிய சான்றுகளை மட்டும் தொகுத்து முடிவு கண்டால் அவர்கள் முடிவு சரியே. ஆனால் தாய்வழிச் சமூகம், இலக்கிய காலத்துக்கு முந்தியது, சரித்திர காலத்திற்கு முந்தியது, மிகவும் பழமையானது என்பதைக் கவனத்தில் கொண்டால், இலக்கியச் சான்றுகளிலிருந்து மட்டும் மேற்கண்ட முடிவுக்கு வருவது தவறாக முடியும். தற்போது இருக்கும் சமூகத்தில் ஆண் ஆதிக்கம் காணப்படுகிறது. இலக்கியத்திலும் சரித்திரத்திலும் ஆண் ஆதிக்கத்துக்கே சான்றுகள் அதிகமாக உள்ளன. சமீப கால முறைக்கு சான்றுகள் அதிகம் அகப்படுவது இயற்கையே. பெண் ஆதிக்கச் சமுதாயம் மறைந்துவிட்டது. மறைந்துவிட்ட சமூக முறைகளைப் பற்றிய சான்றுகள் தேடிப் பிடித்தால்தான் அகப்படும். அதுவும் சிற்சில எச்சமிச்சங்களே கிடைக்கும். அவற்றிலிருந்து அச்சமுதாயத்தை நாம் புனரமைத்து வருணிக்கவேண்டும்

இத்தகைய எச்சமிச்சங்களான சான்றுகள் இன்று அகப்படுகின்றனவா? என்றாவது தமிழ் நாட்டில் பெண் ஆதிக்க சமுதாயம் இருந்

ததா? இருந்திருந்தால் எந்தச் சமூக அடிப்படையின் மீது மேற்கோப்பாக அது இயங்கிறது என்பதையும் நாம் அறிந்துகொள்ள முயலுவோம்.

மனிதன் தனது உணவை வேட்டையாடிப் பெற்றான் என்பதும், அதன் பின்னர் உழவுத் தொழில் மூலம் பெற்றான் என்பதும் சமூக நூலாராய்ச்சியாளர் முடிவு. வேட்டையாடி உணவு பெற்ற மனிதரை 'வில்லேருழவர்' என்று பண்டை நூல்கள் அழைக்கின்றன. அக்காலத்தில் வேட்டைத் தொழிலில் சிறந்தவர்களுக்கு ஏற்றம் இருந்தது. காரணம், சமூகத்திற்குத் தேவையான உணவை அவர்களே தேடி அளித்தார்கள். உலோகங்கள் கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் மனிதன் வேலைச்செய்தான். வேல் வேட்டைக் கருவியாயிற்று. வேலைக் குறிபார்த்துத் திறமையாக எறிபவன் சிறப்பாக வேலன் என்று அழைக்கப்பட்டான் உணவு தேடுவதில அவனுக்கிருந்த முக்கிய பங்கு குறித்து அவன் சிறப்புப் பெற்றான். வேலன் சக்தி மிகுந்தவன் என்று கருதப்பட்டான். அவனை வேடர்கள் போற்றினார்கள். தங்கள் வாழ்க்கையில் தோன்றும் சங்கடங்களைப் போக்க அவனை நாடினர். மற்றவரைவிட அவன் அறிவு மிகுந்தவன் என்று நம்பினர். வர, வர அவனது செல்வாக்கு மிகுந்தது நாட்பட, அவன் தெய்வமானான். வேடர்கள், உணவுதேட வேறு வழி தேடிக் கொண்டபோதும் வேலனை மறக்கவில்லை. உணவுதந்த வேலன், உணவு தராத போதும், செழிப்பின் சின்னமாகி விட்டான். அவனை அவர்கள் கற்பனையில் தங்களைவிடச் சக்தி மிகுந்தவனாகக் கருதித் தெய்வமாக வழிபட்டனர்.

மனிதன் வேட்டையாடி உணவு தேடிய காலத்தில், ஆண்களே, வேட்டைத் தொழில் செய்தனர். அவர்களே, சமுதாயத்தில் ஆதிக்கம் வகித்தனர். அதனால் பெண்கள் குகைகளிலும், குடிசைகளிலும் தங்கினர். அவர்கள் செடி கொடிகளைக் கண்டனர். அவற்றின் இனப்பெருக்கத்தை அனுபவத்தில் கண்டனர். இயற்கையைப் பின்பற்றித் தாங்களும், கொட்டைகளைப் பூமியில் புதைத்தனர். விதைகளை நிலத்தில் ஊன்றினர் கிழங்குகளை, நிலத்தை அகழ்ந்து புதைத்து மூடினர். அவை வளர்ச்சியுற்றுப் பயனளித்தன இவ்வாறு பண்டைப் பயிர்த்தொழில் தோன்றிற்று. பயிர்த்தொழிலிலிருந்து வேட்டைத்தொழிலிருந்து கிடைப்பதைவிட அதிகமாக உணவு கிடைத்தது. முதலில் பெண்களே பயிர்த்தொழிலில் ஈடுபட்டனர். அவர்களே பயிர்த்தொழிலைக் கண்டுபிடித்தனர். பயிர்த்தொழில் செய்ய ஆள்பலம் வேண்டும். அதற்குரிய மக்களை ஈன்றதும், அவர்களுக்குப் பயிர்த் தொழிலைக் கற்றுக் கொடுத்ததும் பெண்களே. ஆண்கள் வேட்டைக்காக நெடுந்தூரம் சுற்றியலைவார்கள். சில நாட்களுக்கு ஒருமுறையே குடில்களுக்குத் திரும்புவார்கள். ஆகவே பயிர்த்தொழிலின் தொடக்க காலத்தில், ஆண்களுக்கு அதில் அதிகப் பங்கு இருந்ததில்லை. குடும்ப வளர்ப்பிலும் அதிகப் பங்கு இருந்ததில்லை பெண்களே புராதனப் பண்பாட்டை உருவாக்குவதில் முக்கிய பங்கு பெற்றனர். வேட்டை முக்கிய தொழிலாக இருந்தது மாறி, பயிர்த் தொழில் முக்கியத் தொழிலாயிற்று. பயிர்த்தொழிலில் பங்குபெற்ற பெண்களும் ஆண்களைவிட உயர்வு பெற்றனர். தொல்குடிகளைப் பற்றி ஆராய்ந்த அறிஞர் அனைவரும் ஒருமுகமாக ஒப்புக்கொள்ளும் உண்மையிது

இந்நிலையில் மனிதனது கருத்துக்களும் மாறின. பெண் ஆதிக்க சமுதாயம் தோன்றி வளரும் சரித்திர முற்காலத்தில் பெண் தெய்வங்கள் தோன்றின பயிர்த் தொழில் செழிப்பைக் கொடுத்தது ஆகவே செழிப்பைக் குறிக்கும் தெய்வங்கள் பல நாடுகளிலும் பெண் தெய்வங்களாகவே இருக்கின்றன. சீதேவி,

கிரேக்கத் தெய்வங்களான சைபீல், டெடோரு, டெல்பி, முதலியவை பெண் தெய்வங்களே. செழிப்பை வேண்டி நடத்தப்படும் விரதங்களிலும், விழாக்களிலும் இன்றும் ஆண்களுக்குப் பங்கில்லை. உதாரணமாகப் பாவை நோன்பை நோக்குவோம். பாவைகள் பலவகைப்படும். அல்லிப்பாவை, கொல்லிப்பாவை, தெற்றிப்பாவை, மணற்பாவை, வண்டற்பாவை முதலியன. இவற்றை நாடு வளம் கொழிக்கப்பெண்கள் பூசைசெய்வார்கள் மழைவளம் சுரக்கவும், ஆற்று நீர் நிலத்தை விதையேற்கும் பருவமாக்கவும், முளை வளரவும், பயிர் வளம் பல்கவும் பாவையைவாழ்த்துவார்கள். திருப்பாவை இப்பாவை நோன்பை வருணிக்கிறது. இந்நோன்பிலே ஆண்களுக்கு இடமில்லை. பாவையை வணங்கி விழாக் கொண்டாடினால், வளம் சுரக்கும், பெண் மகளுக்கு இன்பமும் சுரக்கும் என்று திருப்பாவை கூறுகிறது. பாவைக்கு நோன்பு செய்தால் கண்ணன் பறை தருவான், அருள்தருவான் என்றும் திருப்பாவை கூறுகிறது. இதிலே கூர்ந்து நோக்க வேண்டியது, கண்ணனுக்குப் பூசை இல்லை. விழாவும் இல்லை. பாவைக்குத்தான் பூசை. பாவை, மணலாலும், வண்டலாலும், கழங்கினாலும் செய்யப்பட்டது. பாவை, நிலத்துக்கு அடையாளம் — நிலமோ பெண். பெண்ணே செழிப்பைத் தருபவள். அவளை வணங்கினால் வளம் அருளுவாள். இங்கே கண்ணன் பார்த்து நிற்பவனே. அவனுக்கு முக்கியத்துவமில்லை. ஆண்டாளுடைய காலத்துக்கு முன் தமிழ்நாட்டுப் பெண்கள் பாவை நோன்பு கொண்டாடியிருக்க வேண்டும். அப்பொழுது கண்ணனுக்கு அதில் சற்றும் இடமிருந்திராது என்பது நிச்சயம். பாவை நோன்பு பாவைக்கு மட்டுமே. அதில் பங்கு பெறுபவர் பெண்கள் மட்டுமே ஆண்டாள் காலத்தில், மிகப்புராதன காலத்தில் நடந்த விழாவொன்றின் மச்சங்கள், பாவை நோன்பில் எஞ்சிக்காணப் பட்டன.

பண்டைத் தமிழ் நூல்களில் பெண் தெய்வம் ஒன்றின் பெயர் காணப்படுகிறது அவள் பலவாறு அழைக்கப் படுகிறாள் 'முதியோள்' என்பது அவளது பெயர்களுள் ஒன்று. எல்லோரிலும் பெரியவள் என்பது அதன் பொருள். அதே பொருளில் அவள் 'பழையோள்,' என்றும் அழைக்கப் பட்டுள்ளாள். இவள் யாரால் வணங்கப்பட்டாள்? அதற்கு அவளுடைய மற்றொரு பெயர் பதிலளிக்கிறது பரிபாடல் பதிகத்தில் அவள் 'காடுகாள்' என்று அழைக்கப்படுகிறாள். 'காடுகிழாள்' என்ற மறுபெயரும் அவளுக்கு உண்டு குறிஞ்சிநில மக்கள், வேட்டைத் தொழிலிலிருந்து புராதனப் பயிர்த் தொழிலுக்குத் திரும்பிய காலத்தில் புன்புலப் பயிர் செய்யத் தொடங்கினார்கள். அக்காலத்தில்பெண்கள் ஆதிக்கம் பெறத் தொடங்கினார்கள். ஆகவே காட்டில் பெண்கள் பயிர் செய்யத் தொடங்கிய காலத்தில் காடுகிழாளும் தோன்றினாள்.

அதற்கு முன்பே, சேயோன் (வேலன்) கடவுளாகி விட்டானல்லவா? அவனுடைய சிறப்பு ஆண் ஆதிக்கத்தையல்லவா, குறிக்கிறது? பெண் ஆதிக்க சமுதாயம் அவனுக்கும் ஓர் இடம் கொடுக்க வேண்டும். ஆகவே அவனை காடுகிழாளின் மகனாக ஏற்றுக்கொண்டது. அவன் வீரன். ஆகவே அவளையும் வீர மங்கையாக்கியது வீரத் தொழிலில் வெற்றி பெற விரும்புவோரும் அவளை வணங்க அவள் கொற்றவை ஆனாள் அவனும் "கொற்றவை சிறுவன்" ஆனான். பிற்காலத்தில் வேட்டைத் தொழிலை விட்டு ஆண்கள் ஏர் உழவின் மூலம், பயிர்த் தொழிலில் முக்கிய பங்கு பெறத் தொடங்கிய பின், மறுபடியும் வேலன், "காய் கடவுட் சேய்" ஆகிவிட்டான். பெண்ணாதிக்க சமு

தாயத்தில் தாய்வழி உறவு பெருமையாகச் சொல்லப்படுகிறது. ஆணாதிக்க சமுதாயத்தில், தந்தை வழி உறவு பெருமையாகச் சொல்லப்படுகிறது.

சிலப்பதிகாரத்தில் கொற்றவை வழிபாட்டு முறை வருணிக்கப்படுகிறது கொற்றவை கோயில் ஐயை கோட்டம் என அழைக்கப்படுகிறது. ஐயைக்கு விழாச் செய்ய வேண்டுமென நாள் குறித்துச் சொல்லுபவள் சாலினி என்னும் பெண். அவள் தெய்வ வெறிகொண்டு ஆடுபவள். "பழங்கடனுற்றமுழங்கு வாய்ச் சாலினி" என்று அவள் வருணிக்கப்படுகிறாள். ஐயைக்கு படிவமில்லை. ஒரு குமரிப் பெண்ணை கோலம் புனைந்து ஐயை என்று பெயரிட்டு கலைமான் மீது ஏற்றி வணங்குகிறார்கள்.

" இட்டுத் தலையெண்ணும்
    எயினரல்லது
சுட்டுத் தலைபோகா
    தொல்குடிக் குமரியை
சிறு வெள்ளரவின்
    குருளை நாண் சுற்றி,
குறு நெறிக்கூந்தல்
    நெடுமுடி கட்டி,
இளை சூழ் படப்பை
    இழுக்கிய வேனத்து,
வளை வெண்கோடு
    பறித்து மற்றது
முளைவெண்
    திங்களென்னச் சாத்தி,
மறங்கொள் வயப்புலி
    வாய்பிளந்து பெற்ற
மாலை வெண்பற்றாலி
    நிரை பூட்டி.
வரியும், புள்ளியும்
    மயங்கு வான்புறத்து
உரிவை மேகலை
    உடீஇப் பரிவோடு
கருவில் வாங்கிக்
    கையத்துக் கொடுத்து.
… … … … …

பறையும், குழலும், கூறைச் சின்னமும், முழக்கவும் மணியிரட்டவும் தெய்வமென எழுந்தருளுவித்து வேடர்கள் (எயினர்) வணங்குகின்றனர். பூசைக்குரிய சந்தனத்தையும், மலரையும், சாம்பிராணியையும் எயிற்றியர் (பெண்கள்) ஏந்தி வருகிறார்கள். தெய்வமும் பெண் தெய்வம், பூசனை முழுவதும் பெண்களின் உரிமை. இது பழங்காலப் பெண்ணாதிக்க சமுதாயத்தின் எச்சம். சிலப்பதிகார காலம் ஆணாதிக்கமும், தந்தை வழிமுறையும் நன்றாக வளர்ச்சி பெற்றிருந்த காலம். அக்காலத்திலும் தொன்மையின் எச்சம் இவ் வழிபாட்டில் காணப்படுகிறது.

பி காலத்தில் ஆணாதிக்க சமுதாய அடிப்படையில் தோன்றிய கடவுளர்களும், இத்தெய்வத்தின் உறவினர்களாக்கப் படுகின்றனர். இத்தெய்வங்களின் செயல்களைப் புராணங்கள் வருணிக்கும் நிகழ்ச்சிகள், ஐயை மீது ஏற்றிக் கூறப்படுகின்றன. உதாரணமாக சிவனது தன்மைகள் சில ஐயை மீது ஏற்றிக் கூறப்பட்டுள்ளது;

" மதியின் வெண்தோடு
    சூடுஞ் சென்னி
நுதல் கிழித்து விழித்த
    இமையா நாட்டத்து
பவளவாய்ச்சி,
    தவளவாய் நகைச்சி
நஞ்சுண்டு கறுத்த கண்டி………"

கண்ணனது செயல் இவள் மீதேற்றி கூறப்படுகிறது;

" மருதின் நடந்து நின்
    மாமன் செய் வஞ்ச
உருளும் சகடம்
    உதைத்தருள் செய்குவாய்"

எப்படியாயினும் இப்பெண்தெய்வத்தின் கணவன் எவன் என்று கூறப்படவில்லை, இவளே குமரி இவளே செழிப்பின் செல்வி. இவளது வழிபாட்டை நடத்தும் உரிமையுடையவர்கள் பெண்களே. ஆண்கள் எட்ட நின்று அருள் பெறுவதற்கே உரியவர்கள். பெண்ணாதிக்க சமுதாயத்தின் எஞ்சிய மரபென்று இதனை ஐயமறக்கொள்ளலாம்.

இனி 'தந்திரம்' என்றழைக்கப் படும் சித்தர் தத்துவத்திலிருந்து பெண்ணாதிக்க சமுதாயத்தின் எச்சங்களைச் சுருக்கமாகக் காணலாம். சித்தர்கள் சக்தி உபாசகர்கள். பட்டினத்தாரையும் ராமலிங்கரையும் தற்காலத்தார் சித்தர்களாக்கி

விட்டனர். உண்மையான சித்தர்கள் 'தந்திரத்தில் நம்பிக்கையுடையவர்கள். தந்திரம் தொன்மையான மந்திரவாதம். அதன் அடிப்படை சக்தி. இச்சக்தி பெண்மைதான். அவர்களுடைய அடையாளம் பெண் பிறப்புறுப்பு. (அல்குல்) அதனை அவர்கள் இரண்டு வித அடையாளங்களால் குறிப்பிடுவர். ஒன்று தாமரை. மற்றொன்று முக்கோணம். பெண்மையின் ஆற்றலை அடைந்தால் பிரபஞ்சத்தை அடக்கி ஆளலாம் என்பது அவர்கள் தத்துவம். இதற்காகப் பெண்மை ஆற்றலை அடைய அவர்கள் யோகமுறைகளை ஏற்படுத்தியுள்ளார்கள். இதற்கு ஒரு புராதன விஞ்ஞான விளக்கமும் கொடுக்கிறார்கள். முதுகுத் தண்டிலுள்ள சுழுமுனை என்னும் நரம்பில் சட்சக்கர பேதம் என்று படிப்படியாக உயரும் நிலையில் 7 தாமரைகள் இருப்பதாகவும் யோகத்தின் மூலம் மனம் ஒவ்வொரு படியாக ஏறிக் கடைசியில் சகல சக்திகளையும் அடையும் என்பதும் அவர்கள் தத்துவம். இவையனைத்தும் பெண்மையின் சக்தியைப் பெறும் முயற்சியே. ஆண்கள் பெண்களின் சக்தியை ஏன் பெறவேண்டும்? பெண்கள் உயர்வானவர்கள் என்று மதிக்கப்பட்ட காலத்தில்தான் அத்தகைய எண்ணம் தோன்ற முடியும். அது பெண்ணாதிக்கம் உண்மையிலேயே இருந்த காலத்தில் உருவான கருத்து. பெண்ணாதிக்கத்திற்கு அடிப்படையான சமுதாய அமைப்பு மாறிய பின்னரும் சக்தி வழிபாட்டிலும், தந்திர முறைகளிலும் சித்தர் தத்துவங்களிலும் எச்சங்களாகக் காணப்படுகின்றன. இவையனைத்தையும் 'வாமாசாரம்' என்ற சொல்லால் இந்திய தத்துவ நூலார் அழைக்கிறார்கள். வாமம் என்றால் பெண். ஆசாரம் என்றால் ஒழுக்கம். பெண்ணொழுக்கத்தைக் கடைப்பிடித்து பெண்மையின் சக்தியைப் பெறுவதே இம்முறைகளின் நோக்கம். இம்முறைகளின் மூலவேர் பெண்ணாதிக்கச் சமு-

கன்றை தின்னும் பசு !

தாயத்திலிருந்தது என்பதில் ஐயமில்லை.

இனி இன்று நிலவிவரும் அம்மன் வணக்கத்திலிருந்து சில சான்றுகள் காணலாம். இப்பொழுது நவராத்திரி யல்லவா? ஒவ்வொரு ஊரிலும் பெண் தெய்வங்களுக்குத் திருவிழாக்கள் நடக்கின்றன. இத்தெய்வங்களுக்கு ஆகம முறைப்படி பூசனையில்லை. தந்திரீக முறைகள் சிலவும் தொன்முறை வழக்கங்களும், இப்பூசனைகளில் இடம் பெறுகின்றன. அம்மனுக்கு முன் முக்கோணம், அல்லது தாமரை வடிவத்தில் யந்திரங்கள் கோலமாகப் போடப்படுகின்றன. இவை எதனைக் குறிக்கின்றன என்று முன்னரே கண்டோம். அவற்றின் மீது பூரண கும்பம் வைத்து, நெல் நிரப்பி, மஞ்சளும் தேங்காயும் வைக்கிறார்கள். அல்குல் இன விருத்திக்கு அடையாளம். அதனோடு தொடர்புகொள்ளும் நெல்லும், மஞ்சளும், தென்னையும், பல பயிர்வகைகளுக்கு அடையாளங்கள். பயிர்களெல்லாம் ஒன்று நூறாகப் பல்கவேண்டும் என்பது இச்செய்கையில் மறைந்திருக்கும் பொருள். அம்மனுக்குக் குங்குமம் அருச்சனை செய்கிறார்கள். தந்திர நூல்களில் குங்கு-

மம் மாதவிடாய் இரத்தத்தைக் குறிக்கும்.

முதன் முதலில் பூப் பெய்தியதிலிருந்து. மாதவிடாய் நிற்கும் காலம் வரை, பெண் செழிப் பின் சின்னம். அதற்கு முன்னும் பின்னும் அவள் கருவுயிர்த்து, இனச் செழிப்புக்குக் காரணமாவதில்லை. ஆகவே மாதவிடாய் உதிரம் மாயசக்தி உடையது, செழிப்புக்கு அறிகுறி என்ற கருத்து புராதன மக்களுக்கு ஏற்பட்டது. இன்னும் நாகரிக மடையாத தொல்குடி மக்களுக்கு இந்த நம்பிக்கை உள்ளது. மாத விடாய் பருவத்திலுள்ள பெண்களை விதை மூளைக்கும் வயலைச் சுற்றிவரச் செய்தால் விதை வளர்ந்து நல்ல பயன் தரும் என்று அவர்கள் நம்புகிறார்கள். இதற்கு அடிப்படையான காரணம் மனிதனது பிறப்புக்கு ஆண் பெண் உறவு காரணமாவது போல உலகில் எல்லாம் தோன்றுவதற்கு உடலின் நிகழ்ச்சிகள் போன்ற வேறு பிரகிருதி நிகழ்ச்சிகள் காரணம் என்ற நம்பிக்கையும், பிரகிருதியின் செழிப்பை, பெண்ணின் செழிப்புச் சக்தி வளர்க்கும் என்ற நம்பிக்கையுமே. எல்லா அம்மன்களுக்கும் சிவன் கணவன். என்ற கதை இன்று வழங்கிவந்த போதிலும் செவிவழிக் கேள்வியாக வழங்கிவரும் முத்தாரம்மன் கதை, குமரியம்மன் கதை போன்ற கதைகளில், இவ்வம்மன்மார் சிவனது மனைவியாகப் பேசப் படவில்லை. சிவனை எதிர்த்துப் போராடிய அசுரர்களுக்கு உதவிய தாகவும் கதை சொல்லுகிறது. இக் கதைகளைப் பற்றிய விரிவான ஆராய்ச்சி தாய்வழிச் சமுதாயம் பற்றிய புதிய சான்றுகளைக் கொடுக்கும்.

இக்கட்டுரை தமிழகத்தின் வரலாற்று முற்காலத்தை அறிய ஆதாரமாகும் சிலசான்றுகளை மட்டுமே குறிப்பிட்டது. ஒவ்வொரு சான்றையும் விளக்கினுல் அது ஒரு விரிந்த நூலாகிவிடும். அத்தகைய ஒரு நூல் முற்கால தமிழகத்தின் சமுதாய வளர்ச்சியை அறிய மிகவும் அவசியம். மார்க்சிய அறிவும், இலக்கிய அறிவும், சரித்திர அறிவும் அமையப்பெற்ற பலர் கூட்டுறவில், இத்தகைய ஒரு நூல் தோன்றுமாக.

ஆதார நூல்கள்

சிலப்பதிகாரம், பரிபாடல், திருப்பாவை, சித்தர் பாடல்கள், நாடோடிப் பாடல்கள். Lokayatha—Debiprasad Chatopadyava; Origin of the family and the state—Engels; Art and Social Life — Plekonov : Forgotten sons of India — Subbarayan, Retired D S P ; Science in History — Bernal.

உயர்ந்த ரகம்
VIJAY FABRICS

குறைந்த விலை
TAJ TEX

நாங்கள் சொந்தமாகத் தயாரிக்கும் ஸ்பெஷல் சிட்டை துண்டுகள்,
மலபார் சிட்டை துண்டுகள், தி. மு க. பார்டர் துண்டுகள்,
நாப்கின், ஹனிகோம், தலையணை உறை, டேபிள் கிளாத்
பல ரகங்களில் உயர்ந்த பெட் ஷீட் வகையறுக்கள்
சிறந்த முறையில் தயாரித்து வருகிறோம்.

கிடைக்குமிடம் :

M. S. & T. A. பாலகிருஷ்ணன்,
வீவிங் பாக்டரி,
105, கன்னியப்பன் தெரு, ஸ்ரீரங்கம் S. Ry. திருச்சி-6.

நான் கண்ட மக்கள் கவிஞர்

டி. கே. பாலச்சந்திரன்

எனக்கு அழ முடியவில்லை; இத்தகைய சோகத்தை நான் அனுபவித்ததில்லை; இவ்வளவு கண்ணீர் நான் சிந்தியதில்லை; என் வாழ்வில் இவ்வளவு பிரியமான வரை நான் இழந்ததில்லை; வருங்காலத்தைப் பற்றி இவ்வளவு நம்பிக்கை நான் யாரிடத்திலும் வைத்ததில்லை; இன்று நான் அவரை மறக்கத்தான் முயற்சிக்கிறேன் என் நண்பர்களைக் கூட என் காது கேட்க அவரைப்பற்றிப் பேச வேண்டாமென்கிறேன். ஆமாம், ஒரு முறை நினைத்தாலும் இதயத்தை மட்டுமல்ல உடம்பையும் சக்கையாகக் கசக்கிப் பிழிந்து எறிந்து விட்டு என் வலுவை யெல்லாம் அள்ளிச் சென்று விடுகின்றனவே அந்த நினைவுகள்!

இப்படி நினைப்பதற்கும் அஞ்சி நிற்கும் நேரத்தில் தாமரை ஆசிரியர் குழு என்னைப் பணிக்கிறது அவரைப் பற்றிக் கட்டுரை ஒன்று வரையுங்கள் என்று. தபாலுக்கு மௌனம் சாதித்து விடுவேனோ என்று தோழர் மாஜினி அவர்கள் நேரிலே வந்து ஆறுதல் கூறி என் கடமையையும் ஞாபக மூட்டிச் செல்கிறார். நான் எழுத முயற்சிக்கிறேன். அவரை குறித்த எண்ணற்ற நினைவுகள் என் சிந்தனையில் சுழன்று சூறாவளி ஏற்படுத்துகின்றன. அவற்றை முறைப் படுத்துவதில் நான் எப்படி வெற்றியடைவேன் என்று சொல்ல முடியாது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

நடிகர்

எனக்கு அவர் முதல் முதலில் அறிமுகமானது (1953ல்) கவிஞர் என்ற முறையில் அல்ல, நடிகர் என்ற முறையில் முதல் நாளே பல மணி நேரம். நாங்கள் பேசிக் கொண்டிருந்தோம். எங்கள் எண்ணங்களையும், திட்டங்களையும், ஒருவருக்கொருவர் பரிமாறிக் கொண்டோம். அனைத்திலும் இருவருக்கும் உடன்பாடு. அநேகமாகத் தினமும் சந்திக்க ஆரம்பித்தோம். புதுப்புது விஷயங்கள் பேச்சில் அடிபட்டன.

ஒரு நாள் கேரள மக்கள் கலைக்குழுவினரின் "நீங்கள் என்னே கம்யூனிஸ்ட்டாக்கி" என்ற மலையாள நாடகத்தின் பாட்டுப் புத்தகத்தை நான் என் அறையில் வைத்துப்படித்துக் கொண்டிருந்தேன். இந்த நேரம் கல்யாணம் வந்தார் (ஆமாம் நான் அவரை அப்படித்தான் அழைப்பது வழக்கம்). அவர் வந்ததும் நான் அந்தப் புத்தகத்தை மடித்து வைத்து விட்டு பாடுவதை நிறுத்தி விட்டேன் (வெட்கத்தால்) ஆனால் அவர் விடுவதாக இல்லை. பாடுங்கள் என்றார். பாடினேன். பொருள் கேட்டார். நல்ல வேளை! அவர் என் குரலை கவனிக்கவில்லை என்று உறுதியானவுடன் உற்சாகமாக பாடல்களின் ஒவ்வொரு வரியையும் படித்துக் காட்டி மொழி பெயர்த்து பொருள் கூறினேன். அந்த கிராமீயப் பாடல்களில் தன்னையும் மறந்து மூழ்கி விட்டார். இயற்றியவரின் பெயர் என்ன

வென்று கேட்டார்! தோழர் ஓ.என். வி. குரூப் என்றேன். பக்கத்தில் அமர்ந்திருந்த நடிகர் நண்பர் ஏ. வீரப்பன் என்னிடம் "அண்ணே கல்யாண சுந்தரம் பாட்டு எழுது வார்;" என்றார். அதை யொட்டி நாங்கள் வெகுநேரம் பேசிக் கொண்டிருந்தோம். நீண்ட நேர பேச்சிற்குப் பிறகு நாங்கள் ஒரு நாடகக்குழு ஆரம்பிக்க வேண்டும் என்ற முடிவில் அன்று பிரிந்து சென்றோம். அதன் பலன் தான் மக்கள் நாடக மன்றத்தின் தோற்றம்; "கண்ணின் மணிகள்' என்ற நாடகத்தின் அரங்கேற்றம். 1954 ஆகஸ்டு முதல் தேதி திண்டுக்கல் காந்தி மைதானத்தில் தமிழ்நாடு விவசாய சங்க மகாநாட்டையொட்டி நடைபெற்றது அந் நாடகம். நாடக முடிவில் தலைமை வகித்த தோழர் ஜீவா அவர்கள் அனைவரையும் பாராட்டிப் பேசினார். கவிஞரை குறிப்பிடும்போது "மக்கள் கவிஞருக்குரிய தர உயர்வு பட்டுக்கோட்டையாரின் பாடல்களிலே ஒளி விடுகின்றது என்றார். நாங்கள் சென்னை சேர்ந்தோம். ஒருநாள் பிரபல நடிகர் ஒருவர் கல்யாணத்தைச் சந்தித்தபோது "வாரும் ஐயா! மக்கள் கவிஞரே!" என்று வரவேற்றார் சிறிது கிண்டல் கலந்த தொனியில். இதைப்புரிந்து கொண்ட அவர் "ஆமாம். நான் மக்கள் கவிஞனாகவே ஆகப்போகிறேன். ஜீவாவே சொல்லி விட்டார்" என்றார். கிண்டல்காரர் வாயடைத்துப் போனார்.

பாடல் மேதை

சிறந்த முற்போக்குக் கருத்துக்களையும், புரட்சிக் கருத்துக்களையும் தனது பாடல்களின் மூலமாக அள்ளித் தந்த கவிஞர் எப்படி வேதாந்த பாடல்களையும், சின்றின்ப பாடல்களையும் சிறிதும் சுவை குன்றாமல் பாடுகிறார் என்று நானே பல நாட்கள் சிந்தித்ததுண்டு. கடைசியில் ஒரு சிறந்த குணச்சித்திர நடிகன், எப்படி தான் ஏற்கும் பாத்திரங்களுக்கு ஏற்றாற்போல் தன் நடை, உடை பாவனை, அனைத்தையும் மாற்றிக்கொண்டு அந்தக் கதாபாத்திரமாகவே மாறிவிடுகிறானோ அதைப் போன்று அந்தந்தப் பாடல் களை எழுதும் போது அதன் கருத்திற் கேற்றாற்போல் அவர் தன்னை மாற்றிக் கொண்டிருக்க வேண்டும். நடிப்புத்திறனும், கவித்திறனும் ஒன்றென கலந்தது அனைவர் காதிலும் தேன்மாரிபெய்தது.

"கண்ணின் மணிகள்" நாடகத்திற்கு முன் அவர் சில நாடகங்களுக்குப் பாடல்கள் இயற்றியுள்ளார். ஆனால் அவருக்குப் புகழ்தேடித் தந்தவை மக்கள்நாடக மன்றத்தின்நாடகப் பாடல்களே என்று அவரே பல பேட்டிகளில் கூறியுள்ளார். கவிஞர் முதலில் பாட்டு இயற்றிய திரைப் படம் "படித்தபெண்". அந்தப் படத்தில் "கண்ணின் மணிகள்" நாடகப் பாடல் ஒன்றை (' கதிராடும் கழனியில்" என்ற பாடல், அந்தப் பாட்டில் வரும் அடிகள் தான் தேனாறுபாயுது, செங்கதிர் சாயுது—ஆனாலும் மக்கள் வயிறு காயுது என்பது) இணைத்தார். இந்தப் பாட்டின் ஈரடிகள் அவருடைய இருண்ட பாதையில் ஒளி வீசச்செய்தன என்றால் மிகையாகாது. அதன் பிறகுள்ள அவருடைய கவிதை வாழ்வும், கலைவாழ்வும், அனைவரும் அறிந்ததே.

முற்போக்குக் கருத்துக்கள்

பொது உடமை தத்துவத்தில் ஆழ்ந்த நாட்டமும் மக்கள் சக்தியில் நம்பிக்கையும் கொண்ட தோழர் கல்யாணம் காதல் பாட்டிலும் தன் கருத்தைப் பதிக்க மறந்ததில்லை. "மானே இன்னாட்டிலே வகையான மாறுதல் வந்தாலன்றி ஏது சீறுகள்" என்று விசயமாக அத்தகைய மாறுதல் வந்துதான் திருமென்று அறுதிட்டு உறுதி கூறினார் தன் காதலிக்கு.

"காடு வெளஞ்சென்ன மச்சான் - நமக்குக்கையும் காலும்தானே மிச்சம்?"

என்று ஏங்கும் தன் கண்ணாட்டிக்கு.

"காடுவெளையட்டும்பெண்ணே-நமக்குக்
காலமிருக்குது பின்னே"

என்ற அசைக்கமுடியாத நம்பிக்கை ஊட்டச் செய்தார்.

பொறுமை இழந்தனர் மக்களெல்லாம்
- மனம்
பொங்கி எழுந்தனர் எரிமலைபோல்
உரிமை பறித்த உலுத்தர் எதிர்த்தனர்
ஒருமித்தஜனசக்தி வென்றது-வென்றது.
தோளோடு தோள்ஒட்டி நின்றனர்.
அரிவாளோடு மார்தட்டிச் சென்றனர்,
ஆள் அடிமை தளை அறுந்து விழ்ந்தது.
நம்மை அடைத்து வைத்த வெஞ்சிறை
உடைந்தொழிந்தது

ஒன்றுபட்ட மக்கள் சக்தியின் முன்னே அடிமைத்தளைகளும் வெஞ்சிறைகளும் உடைந்து நொறுங்குவதைப் பார்த்தார். முடிவில் மக்கள் சக்தி வெல்வதைக் கண்டார். இது தான் அவருடைய இதயக் கனவு.

சிந்திக்க வைத்தார்

ஒருநாள் கவிஞரும் நானும் மைலாப்பூர் லஸ் கார்னரிலிருந்து மூன்றும் நம்பர் பஸ் ஏறினோம். பஸ் ஆழ்வார் பேட்டைத் திருப்பத்தை நெருங்கிக் கொண்டிருந்தது. வேகமாக வந்த பஸ், சிறிது மெதுவாக போக ஆரம்பித்தது. ரோட்டை எட்டிப்பார்த்த கவிஞர் "என்ன செங்கொடி தெரிகிறது" என்றார் என்னிடம். நான் ரோட்டைப் பார்த்துவிட்டு தண்ணீர் குழாய் பழுது பார்ப்பதற்காகப் பள்ளம் தோண்டியிருக்கிறார்கள், அதற்காக எச்சரிக்கை செய்யும் முறையில் அபாயக் கொடி போட்டிருக்கிறார்கள் என்றேன். அதற்கு நம் கவிஞர் சிறிது யோசித்து விட்டு "ஓஹோ......ஏற்றத் தாழ்வு எங்கெங்குண்டோ அங்கெல்லாம் இந்தக் கொடி உயர்ந்துவிடும்போலிருக்கிறது" என்றார்; சிரித்தார். நானும் சிரித்தேன். ஆனால் வெகுநேரம் என்னைச்சிந்திக்கவும் வைத்தது எவ்வளவு கருத்தாழம்!

கவிஞர் சென்னைக்கு வந்ததுமுதல் ராயப்பேட்டை வட்டாரத்திலே தான் குடியிருந்தார். அவரை அதிகமாகப் பார்க்க வேண்டுமென்றால் ராயப்பேட்டை அல்லது மைலாப்பூரில்தான் பார்க்கலாம். தமக்குப் பொழுது போகவில்லையென்றால் நேராகப் புறப்பட்டுமைலாப்பூருக்கு வந்துவிடுவார்.

ஒரு நாள் நண்பர் ஒருவர் வழியில் பார்த்துக் கேட்டார், "எங்கே போகிறீர்கள்" என்று. அதற்கவர், "மேலோர் வாழும்மைலாப்பூருக்குப் போகிறேன்" என்றார். ஆமாம், தனது நண்பர்களை அவர் அப்படித் தான் கருதினார். அவ்வளவு மதிப்பும், மரியாதையும் கொடுத்தார். கல்யாணம் வந்துவிட்டால் எங்களுக்குப் பொழுது போவது தெரியாது. எத்தனைப் பாடல்கள் அங்கேயே உருவாகும் தெரியுமா? இதற்கு அவருக்கு வேண்டிய பக்கவாத்தியம் ஒரு பெட்டியின் ஓரம், ஒரு பலகை, அதுவும் இல்லையென்றால் ஒரு நெருப்புப் பெட்டி. இப்படி உருவான பல பாடல்கள் பிற்காலத்தில் பல படங்களில் வந்திருக்கின்றன; நல்ல பெயரும், புகழும் அவருக்கு சம்பாதித்துத் தந்திருக்கின்றன. ஒரு முறை நாங்கள் (மக்கள் நாடக மன்றத்தினர்) ஸ்ரீவில்லிப்புத்தூர் நாடகத்திற்குப் போயிருந்தோம். (அப்போது அவர் எங்கள் மன்றத்தில் நடிகரும்கூட.) மழையால் எதிர்பாராதவிதமாக நாடகம் நடக்கவில்லை. (எதிர் பார்த்த நாடகம் நடக்காமலிருந்தால் சம்பந்தப்பட்ட கலைஞர்கள் மனோநிலை எப்படியிருக்கும் என நான் இங்கே விளக்கத் துணியவில்லை). சுருக்கமாக யாரும் யாரிடமும் பேசாமல் முகத்தைத் தொங்கவிட்டுக் கொண்டு அடுத்த நாள் நடக்கவிருக்கும் அருப்புக்கோட்டை நாடகத்திற்குச் செல்ல ஸ்பெஷல் பஸ் ஒன்றில் புறப்பட்டோம். பாதை மிகவும் கரடுமுரடாக இருந்தது. போதாக் குறைக்கு முன்தினம் பெய்த மழையும் வேறு. ஆகவே கிட்டத்தட்ட கட்டை வண்டியில் போகும் நினைவு தான் அனைவருக்கும் ஏற்பட்டது.

அருவெறுப்பான ஒரு மௌனம் எங்கள் மத்தியிலே நிலவியது. அவருக்குப் பிடிக்கவில்லை போலும். வழக்கமான முறையில் தாளம் போட்டுக்கொண்டு முனக ஆரம்பித்தார். எரிச்சலாக இருந்தது. அவர் விட்டால்தானே. வாய்விட்டுப் பாடவே ஆரம்பித்துவிட்டார்.

சின்னக்குட்டி நாத்தனா—
சில்லறையை மாத்தினா
குன்னக்குடி லாரியிலே—
குடும்பத்தையே ஏத்தினா

இவர் பாடப்பாட மௌனம் கலைந்து அனைவரும் தாளம்போட ஆரம்பித்துவிட்டோம். அவ்வளவு தான். கேட்கவேண்டுமா! சிறிது நேரத்துக்கெல்லாம் கலைஞர்களுக்கே உரித்தான உற்சாகமும் கலகலப்பும் அங்கே நிலவியது. பஸ்ஸை ஓட்டி வந்தவரும், டிக்கெட் கொடுப்பவரும் அனைவரும் எங்களுடன் கலந்துவிட்டார்கள். கவிஞரின் கற்பனையும் இறக்கை விரித்து மேலேறிப் பறந்தது. அன்று உருவான அந்தப் பாடல் பிற்காலத்தில் ஒரு திரைப் படத்தில் வெளியாயிற்று.

இப்படியாக அவர் பாடல்கள் உருவாக்கின சூழ்நிலையே விசித்திரமானவை.

ஒருமுறை என்னைப்பார்க்க வந்தார். "என்னங்க, என்னங்க" என்று அவசரமாக என் அறைக்குள் நுழைந்தார். (அவர் நேரில் என்னைப் பெயர் சொல்லி அழைத்ததில்லை) "என்ன கல்யாணம்?" என்றேன். வந்தவர் விஷயத்தைச் சொல்லாமல் சிரிக்க ஆரம்பித்து விட்டார் (அவருடன் ஒருநாள் பழகினவர்களுக்கும் மறக்க முடியாத அந்தச் சிரிப்பு, இதயம் திறந்து சிரிக்கும் அந்தச் சிரிப்பு) "சமாச்சாரம் தெரியுமா? என்று ஆரம்பித்தார். வேறொன்றுமில்லை, யாரோ ஒரு திரைப்படக் கம்பெனியார் சென்னையில் உயர்ரக ஹோட்டலான 'ஹோட்டல் ஓஷியானிக்கில்' ஒரு அறை எடுத்துக் கொடுப்பதாகச் சொன்னார்களாம் உட்கார்ந்து பாட்டெழுத. இதுதான் அவருடைய சிரிப்பின் காரணம். நான் வேண்டுமென்றே என்ன சொல்கிறார் பார்க்கலாம் என்பதற்காக "ஆமாம், வாஸ்தவம் தான் போய் உட்கார்ந்து எழுதுங்களேன்" என்றேன். அவ்வளவு தான் முகத்தில் சிரிப்பு மறைந்து கோபம்வர ஆரம்பித்து விட்டது. இன்னும் சிறிது நேரம் நான் சிரிக்காமல் இருந்திருந்தால் அழுதேயிருப்பார் போலும்! "நான் சும்மாதான் சொன்னேன், நீங்க அப்படியெல்லாம் போகமாட்டீங்கன்னு எனக்குத் தெரியுமே "என்ற பிறகு தான் அவரைத் தேற்ற முடிந்தது. உங்களுக்கு மரத்தடியும், குளத்தங் கரைப் படிக்கட்டும் தானே பிடிக்கும்" என்ற பிறகு வாய்விட்டு சிரிக்க ஆரம்பித்துவிட்டார்.

வாழ்க்கை வரலாறு

பத்திரிகை பிரதிநிதி ஒருவர் பட்டுக்கோட்டையாரைப் பேட்டிக் கண்டு அவருடைய வாழ்க்கை வரலாற்றை பிரசுரிக்க விருப்பம் கொண்டு அவர் தங்கியிருந்த வீட்டைத் தேடிவந்தார். விவரத்தைச் சொன்னார். "பேட்டிக்காக வந்தீர்களா?" என்று கேட்டுக்கொண்டு சட்டையை மாட்டியவாறு தன் பாட்டுக் காகிதங்கள் வைத்திருக்கும் 'பயிலை' யும் எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டு விட்டார். அங்கிருந்து நடந்து பஸ் நிற்குமிடத்திற்கு வந்தார்.

பேட்டிக்காண வந்தவரும்கூடவே பேசிக் கொண்டு வந்தார். சிறிது நேரம் பஸ்ஸுக்காக காத்து நின்றும் கிடைக்காமல் ஒரு சைக்கிள் ரிக்ஷா கூப்பிட்டுத் தானும் ஏறி, வந்தவரையும் ஏற்றிக் கொண்டார். சிறிது தூரம் வந்ததும் ஒரு நண்பரைப் பார்த்து அங்கே இறங்கினார். ரிக்ஷாவிற்கு சில்லரைக் கொடுத்து அனுப்பிவிட்டார். அங்கிருந்து சுற்றும் முற்றும் பார்த்தார். டாக்ஸி ஒன்று பார்த்துக் கூப்பிடும் நேரம் இவர் பாட்டெழுதும் கம்பெனியின் கார் ஒன்று அந்த வழியாக வந்தது. கார் ஓட்டி வந்தவரே இவரைப்

பார்த்து "வாருங்கள்" என்று காரை நிறுத்திக் கூப்பிட்டவாறு கதவைத் திறந்தார். இவ்வளவு நேரமும் விடாக்கண்டராக கவிஞரைத் தொடர்ந்து வந்த பத்திரிகை பிரதிநிதி நான் "எப்ப வரட்டும்?", என்றார். "எதற்கு?" என்று கேட்டார் கவிஞர். வந்தவருக்கு உள்ளுக்குள் எரிச்சல் உண்டாகியிருக்க வேண்டும். ஆனால் அவர் வெளிக் காட்டாமல் "உங்கள் வாழ்க்கை வரலாறு வேண்டும்" என்றார் மறுமுறையும். "இது தான் என் வாழ்க்கை வரலாறு" என்றார் கவிஞர். வந்தவர் விழித்தார். "என்ன? புரியவில்லையா?" என்று கேட்டு ஒரு சிரிப்பு சிரித்தார். முதலில் கால் நடை, பிறகு பஸ், பிறகு சைக்கிள் ரிக்ஷா, அதன் பின்டாக்ஸி. இப்போது என் சொந்த தேவைக்கும் கம்பெனிகார்கள். இது தான் என் வாழ்க்கைப் பயணமும்" என்று ஒரு சிரிப்பு சிரித்து விட்டுக் காரில் ஏறிப் போய் விட்டார்.

இரு பாதைகளில் நாங்கள்

கடைசியாக நாங்கள் ஒன்றாக இருந்த நாட்கள் ஆகஸ்டு மாதம் 14ந் தேதி இரவு 7 மணி முதல் 18ந் தேதி காலை 8 மணி வரை. 14ந் தேதி இரவு கவிஞர் எங்களுடன் (மக்கள் நாடக மன்றத்தினர்) நீலகிரி எக்ஸ்பிரஸில் கோவைக்குப் புறப்பட்டு வந்தார். 15-16 ஆகிய இரண்டு நாட்கள் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் சாமி தியேட்டரில் நடந்த "பாட்டு முடியும் முன்னே", "நீதியாம் நீதி" ஆகிய இரண்டு நாடகங்களுக்கும் தலைமை வகித்துப் பேசினார். 16-8-59 அன்று கோவை முற்போக்கு மன்றங்கள் சார்பில் சினிமாத் துறை தலைவர் எஸ். எம். ஸ்ரீராமுலு நாயுடு அவர்கள் தலைமையில், நகர சபைத் தலைவர் தோழர் பூபதி அவர்களும், தொழிற் சங்கத் தலைவர் தோழர் கே. ரமணி அவர்களும், கலந்துகொள்ள எனக்கும், நண்பர் எம். என். கண்ணப்பா, கவிஞர் பட்டுக்கோட்டையாருக்கும் ஸ்டேன்ஸ் மில்ஸ் கல்யாண மண்டபத்தில் பிரம்மாண்டமான வரவேற்பு தந்து, வரவேற்புப் பத்திரமும் வாசித்தளித்தார்கள். அதற்குப்பின் 17ந் தேதியும் இண்டு மூன்று வரவேற்புகளில் நாங்கள் மூவரும் கலந்துகொண்டோம். அங்கெல்லாம் வரவேற்புக்கு பதில் கூறும் முறையில் கல்யாணம் அவர்கள் பேசும்போது "மக்கள் கவிஞர் என்று நீங்கள் என்னை அழைக்கிறீர்கள். நான் உங்கள் முன் சபதமேற்கிறேன். நான் என்றும் மக்கள் பக்கத்திலே நிற்பேன். மக்களுக்காகவே பணி புரிவேன்" என்றார். கூட்டம் முடிந்து நாங்கள் தங்கியிருந்த ஹோட்டலுக்குத் திரும்புகையில் சொன்னார், "அன்புடன் தொழிலாள மக்கள் செய்யும் ஒவ்வொரு கைத்தட்டல் ஆரவாரமும் உடலில் இரண்டு பௌண்டு ஏறுவது போல் இருக்கிறது" என்றார்.

கடைசி நேரத்திலும் மக்கள் நாடக மன்றத்திற்கு சேவை:

என்னுடன் கோவையில் இருக்கையில் நான் "நமது அடுத்த நாடகக் கதை வசனத்தை நானே எழுதியுள்ளேன், எத்தனைப் பாட்டுகள் தருகிறீர்கள்?" என்று கேட்டேன். "நீங்களே எழுதினீங்களா" என்று ஒரு சிரிப்பு சிரித்துவிட்டு, "எல்லாப் பாட்டும் நான்தான் எழுதுவேன்" என்றார். சென்னை வந்து சேருவதற்குள் இரண்டு பாட்டுகளையும் தந்துவிட்டார். விளம்பரம் கொடுக்கட்டுமா என்றேன். தைரியமாகக் கொடுங்கள் என்றார். அக்டோபர் மாதம் முதல் தேதி ஜனசக்தியில் அவர்பெயருடன் விளம்பரமும் வெளியிட்டேன். ஆனால் எட்டாவது நாள் கிடைத்த செய்தி!

நாங்கள் ரயிலில் வந்து கொண்டிருக்கும் போது எங்கள் நண்பர் ஒருவர் சொன்னார். என்னைக் குறிப்பிட்டு "அண்ணன் "நீதியாம் நீதி" நாடகத்தில் ஒரு காட்சியில் அழுது

எங்களையெல்லாம் அழவைப்பார்'' என்று. இதைக் கேட்டுக் கொண்டிருந்த கவிஞர் வாய்விட்டு சிரித்து விட்டு நானும் "அவரும் இப்படி மேடையில் அழுதால்தானே உண்டு, வேறே வாழ்க்கையில் எங்கே அழப் போறோம்" என்று வாய்விட்டு சிரித்தார். நானும் சிரித்தேன். அவர் சிரித்துக் கொண்டே போய் விட்டார். நான் அவர் வாக்கைப் பொய்ப்பித்து விட்டு அழுது கொண்டே வாழ்கிறேன்.

நாங்கள் கோவையிலிருந்து சென்னை சென்ட்ரல் வந்து சேரும் நேரம் (18-8.59) டாக்ஸிகள் வேலை நிறுத்தம். ஆளுக்கொரு சைக்கிள் ரிக்ஷா வைத்துக் கொண்டோம். அவர்கள் பேசிய கூலியையும் ஒத்துக் கொண்டோம். ஊர்வலம் போகிறோம் என்று சிரித்தவாறு சொல்லிக் கொண்டே ஏறி அமர்ந்தார். அவர் ஏறின ரிக்ஷா மௌண்ட்ரோடு வழியாக ராயப்பேட்டை, போகவும், நான் ஏறின ரிக்ஷா கடற்கரை ஓரமாக மைலாப்பூர் போகவும் கிழக்கும் மேற்குமாக திரும்பியது...அவர் நிரந்தரமாக என்னைவிட்டு வேறு பாதையில் செல்லுகிறார் என்று எனக்குத் தெரியாது போய்விட்டது. தெரிந்திருந்தால் நான் பிரிந்து சென்றிருக்கவே மாட்டேன். இன்றும் நினைக்கிறேன். "கல்யாணம்! உங்கள் இறப்பு பொய்யாகக் கூடாதா?"......மேஜைமேல் இருக்கும் கடிகாரம் டிக்...டிக்......என்று என்னை ஏளனம் செய்கிறது.

பட்டுக் கோட்டை கவிஞர் முதியோனின் கவிதையின் முதலடி என் காதில் ஒலிக்கிறது.

சென்றதினி மீளாது..........

புது வெள்ளம்

(செ. பகலுமுகியிதீன், பி.ஏ.)

உள்ளம் நிறைவது போலவே—புது
வெள்ளம் விரைந்திடு வேகத்தில்
பள்ளம் நிறைந்திடும் பாங்கினைக்—காணத்
துள்ளியே வந்ததைப் பாரடி!

துண்ணெனும்மாசினை நீக்கிடத்—தூய
எண்ணங்கள் தோன்றுதற் போலவே
மண்ணதன் மாசினை மாற்றிடப்—புதுத்
தண்ணெனுந் தண்ணீரும் வந்ததே!

கண்ணினனையதம் காதலர்—பல
காதவழியினிற் சென்றதால்
திண்ணிய கற்பதன் பெற்றியால்—கண்கள்
சிந்திய வெள்ளிய தாரையோ?

விண்ணதிர் குற்றங்கள் செய்திடும்—இந்தத்
திண்ணிய மாக்களைப் பெற்றதால்
மண்ணவ ளேக்கமே கொண்டுமே—யவள்
கண்ணுமிழ் வெள்ளமோ நோக்கடி!

காளமெலாஞ் சுற்றி வந்துமே—ஒரு
கயத்தை நிறைத்திடும் வெள்ளமே
தானமிலாதலைந் தரசவை—நண்ணுந்
தண்டமிழ்ப் புலவரை யொக்குமே!

[ஆகஸ்ட் 1959, "அருண்" என்ற ஹிந்திப் பத்திரிகையில் திரு. வெங்கடேஷ் வக்கீல் கதையை திரு. தீ. வ. கவடி ஹிந்தியில் மொழிபெயர்த்த "பட் கதார் கஹானி கா அந்த்" என்னும் கதை.]

காதற்கதையின் முடிவு

வெங்கடேஷ் வக்கீல்

தமிழாக்கம் : இசை ஜின்

★

'கடகட' என்ற பேரிரைச்சலோடு வேலையைத் தொடர்ந்துகொண்டிருந்தன அச்சுக்கூடத்தின் மூன்று இயந்திரங்களும்! அதனோடு போட்டி போட்டுக் கொண்டு தங்கள் இயந்திர வாழ்வில் லயித்திருந்தனர் இருபது, முப்பது 'கம்பாசிட்டர்'கள்! இருள் அழகியின் இன்ப அணைப்பிலே மெய்மறந்து தூங்கிவிட்டிருந்தனர் வெளியுலக உல்லாச மக்கள் கூட்டம்.' ஆனால் உழைக்கவே பிறந்த மக்களினம், தங்கள் ஒட்டிய ஒரு முழ ஆழ வயிற்றின் ஒரு சிறு பருக்கையை நினைவில் நிறுத்தி 'இரவு பகல்' என்ற பேத வித்தியாசம் மறந்து வேலையில் உழன்று கொண்டிருந்தனர். அவர்களில் தானும் ஒருவனாக அந்த அச்சுக் கூடத்தின் முன் அறையில் அமர்ந்து சிவந்த விழிக் கண்களை அகல விரித்து 'காலி புரூப்' திருத்திக் கொண்டிருந்தான் 'காஷிகர்'! முன்னுள்ள 'கேபின்' அறைக்குள் மேஜைமேல் கால்களைத் தூக்கிப் போட்டு நாற்காலியில் நீண்டு சாய்ந்து, 'கோழித் தூக்கம்' போட்டுக் கொண்டிருந்தார் முதலாளி. அவர் இழுத்துவிட்ட சிகரெட் புகைச் சுருள்கள் அறையின் மேல் மண்டி மிதந்தன. பத்து நாட்களுக்குப் பின் வரப்போகும் தீபாவளிக்காக வெளியிட வேண்டிய 'மலர்' நாளை மறு நாளைக்குள் 'ஏஜெண்டுகளின்' கைக்குப் போய்ச் சேரவேண்டும். அப்படிப் பார்த்தால் அந்தக் காரியாலயத்தாரின் 'தீபாவளி மலர் தயாராகி விட்டது. ஆனால், ஏற்கெனவே வெளியாகி விற்பனையாகும் மலர்களைவிட சற்று அதிகபட்ச அளவில் வெளியிட்டு வாசகர் கூட்டத்தைக் கவரத் திட்டமிட்டிருந்தார், முதலாளி சூரஜ்மல் சேட்.

மிகக் கூர்மையாகக் கடைசி 'புரூப்'பில் விடுபட்ட தவறுகளைக் கவனித்துத் திருத்திக்கொண்டிருந்தான் புரூப் ரீடர், காஷிகர். அச்சாகும் பக்கங்களின் 'சப், சப்,' ஒலிகள் மிக வேகச் சுருதியோடு அவன் செவிகளில் பதிந்தன. கேபின் அறையிலிருந்து எழுந்த டெலிபோன் மணி அவன் காதுகளில் விழவில்லை; அதைத் தொடர்ந்து 'காஷிகர்' என்று ஒலித்த முதலாளியின் அழைப்புக் குரலும் அவன் செவிப் பறையில் பதியவில்லை. முதலாளியான சூரஜ்மல் சேட் 'கேபினை' விட்டு வெளியே வந்து நின்று இரைந்தார். "காஷிகர்! இன்னும் எத்தனை புரூப்கள் மீதமிருக்கின்றன?"

கீழ்நோக்கிக் குனிந்திருந்த கழுத்தைத் தூக்கி நிறுத்தி 'சுளுக்' கெடுத்துக் கொண்டான் காஷிகர். "ஒரு மணி நேரத்திற்குள் அநேகமாக முடிந்துவிடும்"

கடிகாரத்தின் பக்கமாகத் தன் பார்வையைத் திருப்பினார், சேட். மணி பதினொன்றைத் தொட்டு நின்றது "காஷிகர், 'ராஜஸ்தான் சிண்டிகேட்'டிலிருந்து ஒரு "விளம்பரம்" இன்னும் சிறிது நாழிகைக்குள் வந்துவிடும். அதற்கென அவர்கள் கொடுக்கப்போகும் ஐநூறு ரூபாய்கள் வீணாகப் போய்விடக் கூடாது. அந்த விளம்பரத்தோடு அதற்கேற்றாற்போல் ஒரு கதையும் அமைத்துப் பிரசுரிக்க வேண்டும்."

முதலாளியின் முகம் நோக்கி விழித்து நின்று தலையை மேலும் கீழும் ஆட்டிக் கொண்டான் காஷிகர். "ஐநூறு ரூபாயா? என்னுடைய ஐந்து மாதச் சம்பளப் பணம்!" என்று ஆச்சரியத்தால் அவனையறியாமலேயே உதடுகள் முணுமுணுத்தன.

"சேட் சிரித்தார்—" இரண்டு மூன்று பக்கக்கதையா, என்ன?" என்றார்.

எழுந்து நின்று கொண்டான், காஷிகர். "விளம்பரம் வந்ததும் அதைக் கொண்டுபோய் ஆசிரியரின் மேஜை மேல் வைத்துவிட்டு விஷயத்தைக் கூறுகிறேன்" என்றான் பணிவோடு.

"நாம் நேரத்தை வீணாக்குவதில் பயனில்லை, காஷிகர் நீயே ஒரு நல்லகதை எழுத உட்கார்ந்துவிடு உனக்கொரு 'சான்ஸ்' கொடுக்கிறேன்" என்றார் சேட் சூரஜ்மல்.

சிலையாகச் சமைந்து நின்றான் காஷிகர். "ஆனால் ஆசிரியர் அதைப் பற்றி......' என்றான் இழுத்தாற்போல்.

"அதை நான் கூறிக்கொள்வேன். ஆனால் கதை வரட்டுத்தனமாக அமைந்துவிடக் கூடாது? நல்ல பொழுது போக்குக் கேற்ற, வாசகர்களைக்கவரும் சுவைமிக்க காதற் சம்பவங்கள் மலிந்த உணர்ச்சி நிறை காவியமாக அமைக்க வேண்டும். உம்; எழுத ஆரம்பிப் பார்ப்போம்" என்று ஆக்ஞை பிறப்பித்துவிட்டு 'கேபின்' அறைக்குள் புகுந்து விட்டார் சூரஜ்மல். காஷிகர் சிந்திக்க ஆரம்பித்தான்:

உணர்ச்சி மிகு சுவையான காதற் கதை. ஆனால் கதைக்கான சம்பவமாக எதைக் கையாள்வது? இன்றைய காதற்கதைகளெல்லாம் பழைய இதிகாசங்களை மிஞ்சியா போயிற்று? ஒரு மாமன்னனின் காதலுக்குப் பாத்திரமானவளின் சடல அறைச்சமாதியை மடியிலிருத்திக் கொண்டு கம்பீரமாக எழும்பி நிற்கிறதே தாஜ்மஹால்—அது கூறுமே ஆயிரமாயிரம் காதலர்களின் சுவையான சந்திப்பை? ஆனால், ஒரு பேரழகியைத் தன்னகத்தே கொண்டுள்ள அந்த அழகெழிலை பகல் வேலையிலே கற்பனை நெஞ்சத்தோடு காணும் போது எத்தனை அதிபயங்கர எண்ணக் குமிழிகள் 'எழுத்துமனக் குளத்தில் ஆர்ப்பரிக்கின்றன!

கடந்த மாதக் கடைசியில் அவன் வீட்டிற்கு வந்திருந்த நந்தினி, "உலகம் முழுவதுமே தாஜ்மஹாலை 'காதற் சின்னம்' என்று புகழ் பாடட்டுமே. ஆனால் ஒரு எழை அனார்கலியை சுண்ணாம்புக்காளவாயிலும், வீரக் காதலனைக்கொன்று நூர்ஜஹானை மணம் முடித்துக் கொண்ட தாங்கள் பரம்பரையினர் புரிந்த காதற் கொலைகளுக்கும் பிராயச்சித்தமாக நிர்மாணிக்கப் பட்ட பயங்கர ரகசியத்தை உள்ளடக்கிக் கொண்ட மாளிகையாகவே கருதுகிறேன்" என்றாள்.

காதலிக்கவும் மனிதர்களுக்குத் 'தகுதி' வேண்டும். அழகோ, ஆசையோ இருந்து மட்டும் என்ன பயன்?

இரவு மணி பண்ணிரண்டு என்று அறிவித்த கடிகாரம் அதோடு 'சவால்' கொடுத்துக் கொண்டது முதலாளி சேட் சூரஜ்மல் எழுப்பிய குறட்டைஒலி.

திருத்திய புரூப்களை எடுத்துக் கொண்டு சென்று அச்சடிக்கக் கூறி 'போர் மேனின்' கையில் திணித்து விட்டுத் திரும்பி வந்து, தன் தகர நாற்காலியில் அமர்ந்தான் காஷிகர். 'சேட்' கூறியது நினைவிற்கு வந்தது. 'உணர்ச்சி யூட்டும் காதற்கதை'! காஷிகருக்கு ஒன்றும் ஓடவில்லை ஆசையிருந்தது; அதோடு ஆர்வமிருந்தது; கதைக்கான துகை 'சன்மானமாக' வந்து நின்று வேடிக்கை காட்டி விளையாடியது.

'சுவையான காதல் கதை!'—அவனுக்குக் கொட்டாவியும், பெருமூச்சும்தான் வந்தது. மின்னல் வெட்டி மறைந்தாற்போல் நந்தினியும்

தோன்றினாள்; முழுமையாகப் பத்து வருடங்களை காலம் விழுங்கி பின் மறுபடியும், அவனைத் தேடிவந்திருந்தாள் நந்தினி...!

காஷிகர் கதை எழுதத் தயாரானான்.

கதைக்குக் கதாநாயகியாக நந்தினி இரையானாள். கதாநாயகன் பெயர் முகேஷ்...... முகேஷ் ஊ... ஹீம்; இந்தப் பெயர் எடுப்பாக இல்லை. அதற்காக அந்த இடத்தை நிரப்பித் தன்பெயரை நிறுத்தத் துணியவில்லை காஷிகர். கதை தொடர்ந்தது...

அந்தச் சேரி ஸ்டோரில்' குடியிருந்த் அனைவரும் நந்தினியை அதிசயத்தோடு பார்த்தனர்!

"யாரைப் பார்க்க வேண்டும்?" என்று யாரோ அவளிடம் கேள்வி எழுப்பினார்கள்.

"கஜானந்த்; இங்கேதானே குடியிருக்கிறார்?" பதிலையே திருப்பிக் கேள்வியாகப் பரிமளிக்கச் செய்தாள் நந்தினி.

"அச்சுக் கூடத்தில் வேலை பார்க்கிறாரே, அவரா?" என்று அடுத்து யாரோ கேட்டார்கள்.

"மேலே செல்லுங்கள், பதினான்காவது 'குச்சில்' மூன்றாவது அறை"

நந்தினி, படிகளேறி விரைந்தாள். சுற்றிலுமுள்ள பெண்கள் தங்கள் தங்கள் வீட்டிலிருந்தே அவளைக் கூர்மையாகப் பார்த்தனர். அவளது 'ஜார்ஜெட்' சேலையின் சலசலப்புச் சப்தம்தான் அவர்களை மயக்கிஇருக்க வேண்டும். இருக்காதா என்ன? தரித்திரத்தின் மடியிலே தவழும் அவர்களின் வட்டாரத்திற்குள் ஒரு......

கஜானந்த்தின் வீட்டு வாசலில் வந்து நின்றாள் நந்தினி. வாசற் கதவுகள் திறந்து தானிருந்தன; ஆனாலும் அறைக்குள் இருள்தான் மண்டிக்கிடந்தது. இருள் கவியும் நேரம் வந்தும் மின்சாரத்தின் விநியோகம் ஆரம்பமாகவில்லை போலும்; 'மீட்டர்' பெட்டி அந்த வீட்டுச் சொந்தக் காரரின் அறையிலல்லவா இருந்தது.

தன் வீட்டுவாசலில் ஒரு பெண் வந்து நிற்பதைக் கண்டு எழுந்தோடி வந்த கஜானந்த்தின் மனைவி, "தாங்கள்...,எங்கள் வீட்டிற்கா விஜயம் செய்திருக்கிறீர்கள்?" என்று கேட்டாள்.

அந்த ஸ்டோரின் வட்டாரத்தில் வீசும் நாற்றத்தைச் சகிக்க முடியாமல் முகம் சுளித்து மூச்சடக்கி நின்றிருந்தாள் நந்தினி. ஒவ்வொரு வீட்டு முன்னாலும் குப்பைக் கூழங்களும், அழுகிய பழங்களும், அழுக்கைத் துடைத்துக் காயப் போட்டிருந்த கந்தைத் துணிகளும்தான் தென்பட்டன. சுற்றுப்புறச் சூழ்நிலை ஒவ்வொன்றுமே அவளை அருவருப்பின் உச்சத்தில் நிற்கச் செய்தது. 'இருந்திருந்தும் இந்த இடம்தானா கஜானந்த்துக்கு வசிக்கக் கிடைத்தது?' என்றெண்ணியது செல்வத்தில் புரளும் அவள் மனம். 'தன்னிடம் பேசிநிற்கும் இந்தப் பெண் யாராக இருக்கும்? இவளுக்கும், கஜானந்த்திற்கு என்ன முறையாக இருக்கலாம்? என்ற சிந்தனைவலை பின்னச் சிக்கிப் போனாள் நந்தினி.

"கஜானந்த் இங்குதானே வசிக்கிறார்?"

"ஆமாம்; இப்போதுதான். அச்சாபீஸிலிருந்து வந்தார். உள்ளே வந்திருங்கள்; அவரை அனுப்பிவைக்கிறேன்" என்று கூறி நந்தினியின் முன்னால் ஒரு 'ஸ்டூலை' நகர்த்தி வைத்து, அவள் உள்ளே சென்றாள்.

நந்தினி தனது பூனைக் கண்ணால் அந்த அறையை அளவு விட்டாள். கஜானந்த் உள்ளிருந்து வந்தான் உருமாறிப் போய். அவனது முகம் லேசாகச் சுருங்கியது.

"நான்,...என்னால் தங்களைச்சரியாகப் புரிந்துக்கொள்ள முடியவில்லை" என்றான் நெற்றிச் சுவட்டில் கோட்டுக் கீறல் விழ.

கஜானத்திற்குப் பின்னால் நின்று கொண்டிருந்த அவன் மனைவி

"உண்மையிலேயே உங்களுக்குப் புரியவில்லையா?" என்று கேட்டாள்.

நந்தினியின் முகம் சுருங்கிப் போயிற்று

...இதுவரைக்கும் எழுதியிருந்த கதையில் தன் திருஷ்டியை ஓடவிட்டான் காஷிகர்—"சே! இத்தனை நேரத்தை வீணடித்துவிட்டோமே. சுவையான காதற் கதையல்லவா தேவை! நாம் ஒரு தொழிலாளியின் துன்பத்தையல்லவா உருவாக்கப் புகுந்து விட்டோம்" என்றெண்ணினான்.

அச்சடிக்கும் யந்திரம் இயங்கிக் கொண்டிருந்தது. மேக்கப் 'கம்பாஸிட்டர்'கள் தலைகீழ் எழுத்துக்களை சரிப்படுத்திக் கொண்டிருந்தனர். கடியாரத்து முட்கள் முன்னேறிக் கொண்டிருந்தன. வான வீதியில் வேகமாக பவனி செய்துகொண்டிருந்தது சந்திரன் மலர்ச்சியோடு. ஆனால் இங்கே தனது சோபை இழந்த வாழ்வின் சோர்ந்த மனத்தோடு உடைந்த நாற்காலியில் அமர்ந்து சுவையூட்டும் காதற் கதை ஒன்று சிருஷ்டிக்கப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தான் காஷிகர். அதிக நீளமில்லை; மூன்றே பக்கக் கதை! ஐனூறு ரூபாய் பெறுமானமுள்ள சிமெண்ட் சிண்டிகேட்டின் விளம்பரத்தோடு விளங்கப்போகும் கதை.

"கட்டிடங்களை அழகு படுத்த சிமெண்ட் உபயோகியுங்கள்" காஷிகர் சிந்திக்க ஆரம்பித்தான்!

அப்படியானால் வேறுகதை தான் உருவாக்கவேண்டும். விளம்பரத்தை விளக்கும் சிமெண்டுக் கம்பெனி கதையோடு நந்தினியின் காதல் மறதியை ஏன் எழுதுவேண்டும்? காஷிகர் ஒரு 'சார்மினர் சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டான்.

ராஜஸ்தான் சிமெண்ட் சிண்டிகேட்டும் மொகலாய மன்னன் ஷாஜஹானின் காலத்தில் இருந்திருந்தால் தாஜ்மஹாலின் சௌந்தர்யத்தை மேலும் அதிகப்படுத்துவதில் நிச்சயமாக அதுவும் பங்கு பெற்றிருக்கும். பத்துப் பதினைந்து வருடங்களுக்கு முன் கல்லூரி வாழ்க்கையின் போது தாஜ்மஹாலைக்காண நந்தினியோடு சென்றிருந்தான். அங்கே தான் பௌர்ணமி முழு நிலவின் எழில் ஒளியில், குளித்த காதற் சின்னம் தாஜ்மஹாலின் கட்டிடத்திற்குள்ளே அவளிடம் காதல் சத்தியம் பெற்றான். ஆனால் இப்போது பத்தாண்டு பிரிவுக்குப்பின் அவனைத் தேடிவந்த நந்தினியை புரிந்து கொள்ள மறுத்துவிட்டான்!

காஷிகர் தன் கதையைத் தொடர்ந்தான்—

"கஜானந்தின் இந்தப் புதிர் நடத்தையைக் கண்டு நந்தினி வியாகூலச் சிந்தனையில் ஆழ்ந்துபோனாள். 'அவன் உண்மையிலேயே தன்னை மறந்துவிட்டான் 'என்று அவளால் நம்பமுடிய வில்லை!

அவனது மனைவி தனது புகையும் அழுக்கும், தூசியும் அப்பிக்கொண்ட கந்தல் புடவையைச் சரிசெய்து கொண்டே கூறினாள்

"ஏனிப்படிக் கூறுகிறீர்கள்? நன்ருக நினைத்துப் பாருங்கள் 'அவர்கள்' இவ்வளவு கஷ்டப்பட்டு தேடிவந்திருக்க' என்று (—)

"நினைவில்லையா? சரி நான் வருகிறேன்" என்று சோகத்தால் கண்டம் அடைக்கப் போவதற்கு எழுந்தாள், நந்தினி.

கஜானந்தன் இடத்திலே ஆடாமல் அசையாமல் மௌனமாக அமர்ந்திருந்தான். அவளைத் தடுத்து நிறுத்தவுமில்லை

கஜானந்திற்கும், நந்தினிக்கும் இடையில் வந்து நின்றுகொண்டாள் அவன் மனைவி. புறப்படத் தயாராக இருந்த நந்தினியிடம் ஏதோ கூற வாய்திறந்தவள் இருமஆரம்பித்தாள் அவளது நெஞ்சில் எரிச்சல் ஏற்பட்டிருக்கவேண்டும். மார்புக் குழிக்குள் விரல்களால் அழுத்தத் தேய்த்துக் கொண்டாள். அவளுடைய வரண்ட இருமல் ஒலி கேட்டு நந்தினிக்கு ஒரு விதமான பயம் அண்டியது. அந்தப் பெண்ணின் தேகம் ரத்தம் உறைந்து வெளுத்துப்போய் இருந்தது!

"என்ன உடம்புக்கு?" என்ற அனுதாபக் கேள்வியோடு கஜானந்தையும் அவன் மனைவியையும் மாறி மாறிப் பார்த்தாள், நந்தினி.

நிறையக் குழந்தைகளைப் பெற்ற 'போஷாக்குக்' குறைந்த பெண்களுக்கு ஏற்படும் வழக்கமான தேக பாதிப்புத்தான்!" என்று விரக்தியோடு பதிலளித்தான், கஜானந்த்.

கஜானந்தைக் காண நந்தினி வந்திருப்பதை அதிசயத்தோடுப் பார்த்தனர் சுற்றிலுள்ள குடும்பத்தினர். பெண்கள் ஒன்றுகூடி நின்று ஏதோ, 'குசுகுசுத்'துக் கொண்டனர். ஏதாவது வேலையை சாக்கு வைத்துக்கொண்டு ஆண்களும் நந்தினியை எட்டிப்பார்த்துச் சென்றனர். சிறார்களைப்பற்றிக் கூறவேண்டாம். கஜானந்தின் வாசலில் கூடி நின்று வேடிக்கைப் பார்த்தனர்—மொத்தத்தில் அந்தப் பஞ்சைகளுக்குத் தங்கள் 'ஹட்டா'விற்குள் ஒரு பணக்காரப் பெண் வந்திருப்பது உலக மகா அதிசயமாக இருந்ததில் வியப்பில்லைதானே. நின்றிருந்த சிறுவர்களில் ஒரு சிலர் உடுத்தாமல் இருந்தனர். அவர்களையெல்லாம் தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான் ஒரு சிறுவன். கஜானந்தின் மனைவி அவனது கையைப் பிடித்திழுத்து, "பண்ட்யா! போ, போய் 'நிக்கர்' போட்டுக்கொள்." என்று அவனை உள்ளே இழுத்துச் சென்றாள்.

"எத்தனைக் குழந்தைகள், இருக்கிறார்கள்?"

"ஆறு" என்றான் கஜானந்த்.

"ஹை! இப்ப ஆறு எங்கேயாம்?" என்றாள் கதவோரத்தில் நின்றிருந்த பத்து வயதுச் சிறுமியொருவள்.

கஜானந்த் துணுக்குற்றான். அந்தச் சிறுமியை நோக்கி, "கிஷோ பேசாமற்போஉள்ளே"என்று அதட்டினான். இருந்த இடத்தைவிட்டு எழுந்து வேடிக்கைக்காகக் குழுமி நின்ற 'ரோட்லாரி'களை (அழுக்கைச் சுமந்து நின்ற சிறுவர்களை) விரட்டி விட்டான்.

இவையெல்லாம் நந்தினியைப் பொறுத்தவரையிலும் புதுமையான அதிசயமாக இருந்தது—

"ஆறு மாதங்களுக்குமுன் 'க்ஷயத்தால்' ஒரு குழந்தை இறந்துவிட்டான். மறதியாக அவனையும் எண்ணிக்கையில் சேர்த்துக் கூறிவிட்டேன்" என்று கூறியவாறு வந்து அமர்ந்தான் கஜானந்த். அவன் முகத்தில் 'சவக்களை' வியாபித்திருந்தது!

"குழந்தையா, க்ஷயம் வந்திறந்திட்டான்?" என்று மிரண்ட கண்களின் உருண்ட விழிகளோடு கேட்டாள் நந்தினி.

"பின் எப்படி இறப்பானும்? வேறு மார்க்கமே கிடையாதே. ஹூம்; விடுங்கள் இந்தப் பேச்சை—நடந்தவை நல்லதிற்காகத்தான், ஸ்கூல் பீஸ், துணிமணி மிச்சம்தானே, நம் அரசாங்கமும் மிச்சப்படுத்தத்தானே கூறுகிறது?"

நந்தினி அகலவிரித்த இமைவட்டக்குழிக் கருவிழிகளால் அவனை ஊடுருவி நோக்கினாள். "தனது குழந்தையின் சமீபத்திய மரணத்தை மறந்துவிட்ட ஜென்மத்திற்கு பதினைந்திருபது வருடங்களுக்குமுன் நடந்தவைகளை நினைவுபடுத்தித்தான் என்னபயன்?" — விரைப்பாக எழுந்து நின்றாள், நந்தினி.

"மன்னிக்க வேண்டும்..." என்று ஆரம்பித்தான் கஜானந்த்.

...... காஷிகருக்குத் தன் கதையில் சுவாரஸ்யம் தட்டியது. மீண்டும் ஒரு 'சார்மினார்' சிகரட்டை, நெருப்பில் குளிப்பாட்டி, 'ஹோமம்' வளர்த்தான். 'கேபின்' அறையிலிருந்து சேட்சூரஜ்மல்லின் 'குறட்டை ஒலி' சுருதி கூட்டிக்கொண்டிருந்தது. எழுதிய கதையை ஒருமுறை வாசித்தான் காஷிகர். முதலாளி கூறியதுபோல் அதில் சுவையான காதல் (?) இருப்பதாகத் தெரியவில்லை.

மணி ஒன்றைத் தாண்டியிருந்தது பசி வயிற்றைக் குடைந்தது. வாய்

கொட்டாவி விட்டது. ஒரு காப்பி குடித்தால் தேவலை போலிருந்தது

"காபி! காபி ...?'—நந்தினிக்கும் அன்று அவன் மனைவி காபி போட்டுக்கொண்டு வந்து தந்தாள். அந்தச் சம்பவம் நினைவில் நிழலாடியது. காஷிகர் கதையைத் தொடர்ந்து எழுத ஆரம்பித்தான்—

... மன்னிப்புக் கோரியதும், நந்தினியின் முகம் மலர்ந்தது. "மன்னிக்க என்ன இருக்கிறது? முதலில் என்னைப் புரிந்துக் கொண்டதாகக் கூறுங்கள்" என்றாள்.

உதடுகளைப் பிதுக்கி, உடலைச் சிலிர்த்துக் கொண்டே கூறினான், கஜானந். "தாஜ் மஹாலின் புனித சன்னிதானத்தருகில் கொடுத்த காதல் வாக்குறுதியை அலட்சியப் படுத்தி மறந்தவளின் நினைவை நெஞ்சில் எதற்காக நிறுத்தவேண்டுமாம்?"

"நானொன்றும் வாக்குறுதியை மறக்கவோ, அலட்சியப் படுத்தவோ இல்லை!', என்று ஆவேசத்தோடு பேசினாள் நந்தினி. "இன்றும் நான் கன்னியாகவே இருக்கிறேன், தாஜ் மஹாலின் பிரதிபிம்பத்தை நெஞ்சில் நிறுத்தி. இந்தக் குச்சிலா உங்களோடு குடும்ப வாழ்க்கை நடத்த எனக்கு விதி இருந்தது வாழ்க்கையில் காணக் கிடக்கும் உவகை உல்லாசம் எல்லாவற்றையும் தியாகம் செய்து ஏன் குடும்பம் தனை வாழ்கிறீர்கள்?"

"என் தாய் நாட்டிற்காக— அதன் சுபீட்சத்திற்காகப் போராடி நின்றேன், நான்" என்று தன் குற்றத்தை மூடிமறைக்க ஒரு 'நொண்டிச் சாக்கு'

"கிடைத்ததா அந்த சுபீட்ச வாழ்வு?" என்று விரக்தியோடு கேட்டாள் நந்தினி.

கஜானந் அதற்குப் பதிலுரைக்க வாய் திறந்தான். அதற்குள் நந்தினிக்காக 'காபி'யோடு வந்து சேர்ந்தாள் அவன் மனைவி. "என்ன, ஒருவரை யொருவர் புரிந்தாகி விட்டதா?" என்றவாறே 'காபி டம்ளரை' நந்தினியிடம் நீட்டினாள்; நந்தினியும் பெற்றுக்கொண்டாள். கஜானந் துடித்தெழுந்து தடுத்தான்.

"கீழே வைத்துவிடு அந்தக் கோப்பையை; இந்த வீட்டில் 'காபி அருந்த விடமாட்டேன்' என்ற கஜானந்தத்தை அவன் மனைவியும், நந்தினியும் விந்தையோடு நோக்கினர்.

.... சிகரெட்டின் காரமான கடைசிச் சுண்டை இழுத்துக் கொண்டே எழுந்து விட்டான் 'காஷிகர்'. மெல்ல வெளிக்கதவைத் திறந்து பாதைக்கு வந்தான்; காவல்கார 'கூர்க்கா'வின் 'சலாம்' ஒன்றும் கிடைத்தது.

திறந்த வெளிக்கு வந்ததும் நிராசை நிறைந்த நெஞ்சினுள் ஒரு சிறிது சாந்தி கிட்டியது. 'கிடைத்ததா அந்த சுகவாழ்வு?" என்றல்லவா நந்தினி கேட்டாள்.

அவன் சிறையிலிருந்தபோது வெளியேறுவதற்குத் தீவிர ஆசை உண்டாயிற்று. ஒரு பறவையாக மாறிப் பறந்து ஒரு கிளையிலிருந்து இன்னொருகிளைக்குத் தத்தித் தாவும்' இன்ப நினைவில் லயித்துப்போவான். ஆனால் உலக நியதி அவனை எலியாக்கி ஒரு வளைக்குள் அடைத்து வைத்ததோடு அவன் சென்ற பாதையில் வலை விரித்து வைத்துவிட்டது.

காஷிகர் மீண்டும் உள்ளே நுழைந்தான். மேஜைமேல் பரப்பிக்கிடந்த கதையெழுதியக் காகிதங்களைத் தூரத்தள்ளி வைத்துவிட்டான். முதலாளியின் குறட்டை மிகுந்திருந்தது. கம்போஸிங் ஹால் மௌனத்தில் தோய்ந்து வெறிச்சோடிக் கிடந்தது. அச்சாகியிருந்த 'பாரம்'களின் மீது 'மெஷின் மேன்' விழுந்து தூங்கிக்கொண்டிருந்தான்; அசதி! காஷிகர் பெருமூச்சுவிட்டான்....

பௌர்ணமி முழுநிலவின் ஒளி மழையிலே குளித்துக்கொண்டிருக்கும் தாஜ்மஹால்—அங்கே! கரை தழுவத் தாவியோடிவரும் கடலலைகளின் கும்மாளம் எங்கே? மேலும்...

திடுக்கிட்டுக் கண்விழித்தார், சேட் சூரஜ்மல்! அவரது குறட்டை ஒலி நின்றதைக்கொண்டு யூகித்தான், காஷிகர். காபின் அறை எதிரொலித்தது. "காஷிகர், கதை முடிந்ததா? கொண்டுவா, இங்கே"

பரந்து கிடந்த கதைக் காகிதங்களை ஒன்று சேர்த்து அடுக்கி காபின் அறைக்குள் எடுத்துச் சென்றான் காஷிகர். முழுவதையும் படித்தார், சேட். "இன்னும் கதையை முடிக்கவேயில்லை போலிருக்கிறதே?" என்று கேட்டார்.

காஷிகர் தொண்டையைக் கனைத்துவிட்டுக்கொண்டான்—" இல்லை"

'அந்த கஜானந்த், காபி குடிக்க விடாமல் நந்தினியை ஏன் தடுத்தான்?'

"அவன் மனைவி க்ஷயத்தால் பீடிக்கப்பட்டிருந்தாள். அவள் போட்ட காபியை நந்தினி குடித்தாளாகில், அவளுக்கும் அது பதிக்க ஏதுவாகும்!"

"ஆனால் அவனும், குழந்தைகளும் குடிக்கிறார்கள் அல்லவா?"

"உண்மை தான்! ஆனால் அவர்களுக்கும் க்ஷயம் பாதித்திருக்கலாம். நந்தினி அந்தக் குடும்பத்தைச் சேர்ந்தவளல்ல; வெளி மனுஷி; அமிர்தத்தில் விஷம் தெளிப்பது கூடாதல்லவா?"

முதலாளி கோபத்தோடு அக்காகிதங்களைக் கிழித்தார்.

"இது மாதிரிக் கதைகள் தேவையில்லை. சுதந்திரத்திற்குப் பிறகு 'பாரத'மக்கள் சந்தோஷமாகவும், மனநிறைவோடும் வாழ்வதாகக் காட்டும் கதைதான் எழுதவேண்டும். பண்டித நேருஜியின் புகழ் இன்று உலகில் எங்கெல்லாம் உயர்ந்திருக்கிறது? அதை மறந்து, நீ வேலையில்லாமல் இந்தத்தரித்திரக் கதையின் அழுகுரலை எழுதிக் கொண்டிருக்கிறாய்? தேசத்திற்காக நாம்'இலக்கிய தியாகம்' செய்து தான் ஆக வேண்டும். மணி இரண்டடித்து விட்டது. விரைவில் உணர்ச்சி நிறை சுவை மிக்க காதற்கதை வந்து சேரவேண்டும்—நினைவிருக்கட்டும்" "பட பட' வென்று பொரிந்து தள்ளினார், முதலாளி சூரஜ்மல் சேட்.

காஷிகரின் முகம் பயத்தால் வெளிறிப்போனது. அவனால் என்ன பதில் கூற முடியும்? தன்னிடத்தில் மீண்டும் வந்தமர்ந்து ஒரு காகிதத்துண்டை எடுத்து எழுத ஆரம்பித்தான், காஷிகர்—வணக்கம்,

"இன்றிலிருந்து என்னுடைய வேலையை ராஜிநாமா செய்கிறேன், இப்போதைய வருத்தம், என்னிடத்தில் வந்தமரும் நபர் இந்த அக்கிரமத்தை........."

'கேபின்' அறையிலிருந்து முதலாளியின் குரல் எழுந்தது—

"காஷிகர்.........!"

அவன் எழுந்து சென்றான். அவன் முன்னால் ஒரு ஆங்கிலச் சஞ்சிகையை வீசி எறிந்தார் "இதிலிருந்து ஒரு ரசாபாஸமுள்ள கதையை மொழி பெயர்த்துக் கொடு".

அவன் பத்திரிகையை எடுத்துக் கொண்டான். அதே சமயத்தில் 'டெலிபோன் மணி'யும் கணகணத்தது. சேட், ரிஸீவரை எடுத்துப் பேசி முடித்தார்.

"காஷிகர்! உன் மனைவியை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய் இருக்கிறார்களாம். அவளுக்கு 'ரத்த வாந்தி' வந்து விட்டதாம். சீக்கிரம் புறப்படு; ஆம்! இந்தா, கைச் செலவுக்கு இந்த ஐந்து ரூபாயை வைத்துக் கொள்!'

ஐந்து ரூபாய் நோட்டைப் பாக்கெட்டில் திணித்துக் கொண்டு 'கேபின்' அறையை விட்டு வெளியேறினான் காஷிகர் 'ராஜிநாமாக்' கடிதத்தைக் கிழித்துக் குப்பைக் கூடையில் வீசினான். சார்மினார் சிகரெட்டைப் பற்றவைத்துக்கொண்டு, வேலைச் சிறையிலிருந்து விடுதலை பெற்றான்'!

திறந்த வெளிப்பாதையில் நின்று கொண்டு, "டாக்ஸி!" என்ற ஜீவனிழந்த குரல் எழுப்பினான்.

மலரும் அரும்பு

பெண் குழந்தை

வாய்மைநாதன்

★

அது ஒரு பெண் குழந்தை!

இரண்டுக்கும் மூன்றுக்கும் இடைப்பட்ட வயதைப் பிடித்துக் கொண்டு தொங்கியது அக்குழந்தை. அதன் உயிருங்கூட அப்படித்தான் தொங்கிக்கொண்டிருந்தது, ஏதோ ஒரு நம்பிக்கையில்.

அந்தத் தெருவில் ஒரு பெரிய மைல் கல் இருந்தது. வாழ்க்கையில் அமைந்துள்ள மேடு பள்ளங்களுக்கு இடையில் எழுப்பப்பட்ட குறுக்குச் சுவரைப்போல. அதற்குப் பக்கத்திலே நகராட்சி மன்றத்தின் பொது மக்கள் சேவைக்கு விளம்பரமாய் அமைந்துள்ள, வேலை செய்யாத, 'ரிடையரா'ன நீர்க்குழாய். இரண்டிற்கும் இடையில் அந்த மகோன்னத, புனித, தெய்வீக ஜீவன்.

எரிக்கும் வெயிலுக்கு முற்பகல், பிற்பகல் என்ற வித்தியாசம் ஏதும் தெரியாது போலும்! அது தன் கடமையைச் சரிவரச் செய்துகொண்டிருந்தது. அது, காலுக்குச் செருப்பு, தலைக்குக் குடை, கண்ணுக்குக் கண்ணாடி—இத்தனையையும் ஊடுருவி தாக்கியது நாகரிக மைனர்களை. ஆனால், அந்தக் குழந்தை இந்த வெயிலில் மண்டை வெடிக்க வெதும்பிக்கொண்டிருந்தது.

மதிய உணவை முடித்துக் கொண்டு அலுவலகத்திற்குவிரைந்து கொண்டிருந்தோம் நாங்கள். உண்ட களை அலுவலகத் தொண்டர்களாகிய எங்களைச் சற்றுக் கண்ணயரவைத்து விட்டது. அதனால், அலுவலகத்திற்குச் செல்ல நேரமாகி விட்டது. எனவே, நாங்கள் எங்களது பிழைப்பை நோக்கி ஓடிக் கொண்டிருந்தோம்.

குழந்தை வெயிலின் வேதனை பொறுக்க முடியாமல் அலறியது; துடித்தது; பதைத்தது. பாவம், வாயில்லா ஜீவன். அதனால் அழத்தானே முடியும்!

இடையிலே "அம்...மா!" என்று இழுத்து நீட்டிக் கொண்டே சொல்லித் தேம்பியது.

நாங்கள் எங்களது பாதையிலே போய்க்கொண்டிருந்தோம். மெதுவாக இழைந்து இழைந்து தேய்ந்தது அக்குழந்தையின் குரல்.

மாலை மணி ஐந்தரை; முன்பு ஓடிய ஓட்டத்தில் திரும்பவில்லை நாங்கள். இப்பொழுது அன்னநடையும் போடலாம்; ஆமை வேகத்திலும் நகரலாம். தூரத்தில் உள்ள தென்னந்தோப்பிற்குள்ளே மஞ்சள் நிறச்சூரியன் சிரித்துக் கொண்டிருந்தான்; அதை நாங்கள் ரசித்துக் கொண்டே நடந்தோம். மெதுவாகத் தேம்பும் ஒலி எங்கள் செவிப்பறையைத் தீண்டியது. அழுகை ஒலி வரவர அதிகரித்தது. நாங்கள் குழந்தை இருக்குமிடத்தை நெருங்கிக் கொண்டிருந்தோம்.

மைல் கல்லுக்கும் தண்ணீர்க் குழாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் அக்குழந்தை அலறிக்கொண்டிருந்தது.

யாரோ ஒரு சங்கீத ரசிகன், "குழந்தை என்ன அழகாக முகாரியை ஆலாபனை செய்கிறது பார்த்தாயா?" என்று தன் நண்பனிடம் சொல்லிக்கொண்டே போனான்,

அவனுடைய நண்பன் அந்த ஹாஸ்யத்திற்காக 'ஹஹ் ஹஹா'வென்று உரக்கச் சிரித்தான்.

அவர்களையே உற்றுநோக்கினன் எனது நண்பன்; அதைத் தொடர்ந்து ஒரு பெருமூச்சு விட்டான்.

என் மனம், எதிரே இருந்த மைல் கல் தலையில் இருப்பதைப்போல பாரம் தாங்கமுடியாமல் தள்ளாடியது.

அட பாவிகளா? குழந்தை முகாரியை ஆலாபனை செய்கிறது என்று சொல்லுகிறீர்கள்? இதற்கு முகாரியையும் தெரியாது; ஆலாபனை செய்யவும் தெரியாது. இது தன் உள்ளக் குமுறலை, பசி செய்யும் புரட்சியை வெளியிட இந்த ஒரு வழியைத்தான் அறியும். சிறுகுடல் இரைப்பையை விழுங்கும் இந்தக் கோர சம்பவத்தை—சத்தியமாக இந்தக் குழந்தைக்கு சிறுகுடல், இரப்பையைப் பற்றி ஏதுவும் தெரியாது — அணு அணுவாக இந்த ஜீவனைப் பசியென்ற பேய் செய்யும் சித்திரவதையை வாய்விட்டு அழுதுதான் தீர்க்க முடியும் என்று இது நம்புகிறது போலும்!

'தங்களது கவலையை—மனக்குழப்பத்தை மறைக்க நடனம், சினிமா, இசையரங்கு, நாடகமேடை, இலக்கிய சர்ச்சை போன்ற விஷயங்களில் ஈடுபாடு கொள்ளும் கனவான்களைப் போல இக்குழந்தைக்கு ஒன்றும் இடையாது. உச்சந்தலைக்கு விஷம் ஏறுவதுபோல, உடலெங்கும் பரவி வாதை செய்யும் பசிக்கவலையை மறக்கக்கூடிய ஒரே ஒரு களியாட்டம் இதற்கு வாய்விட்டழும் அழுகை தான்!'

நண்பன் எதிரே இருந்த கடையில் இரண்டு ரொட்டித் துண்டுகளை வாங்கிக்கொண்டு திரும்பினான்.

குழந்தை அழுகையை நிறுத்தித் தேம்பித் தேம்பிக் கேவியது. வலது கைப் பெருவிரலை உதடுகளுக்கிடையில் செருகிச் சுவைத்தது. அதன் அடிவயிற்றிலிருந்து கிளம்பிய பொருமல் கொதி நீரைப்போலக் கொந்தளித்துத் தொண்டையில் வந்து முட்டியது.

ரொட்டி வாங்கி வந்த நண்பன்; அதைக் குழந்தையிடம் நீட்டினான். குழந்தை அதை ஆவலுடன் பெற்று, வாயில் வைத்துச் சுவைத்தது. ரொட்டிமாவு, உமிழ்நீர் ஓடியவயிற்றில் சிந்தி ஒட்டிக் கொண்டது.

நண்பனை இழுத்துக் கொண்டு நடந்தேன். சுறுசுறுப்பான தெருவின் தொடக்கத்தில், தெருவைக் கலக்கும் வேகத்தில் ஒரு கார் பறந்து வந்தது. காருக்குள்ளே நவநாகரிக வாலிபன் ஒருவன் அழகான நாய்க்குட்டி ஒன்றுடன் கொஞ்சிக்கொண்டிருந்தான். நான் அவனை என் நண்பனுக்குச் சுட்டிக் காண்பித்தேன். கார் பறந்தது; புழுதிப்படலம் எங்கள் மீது படையெடுத்தது. நான் கைக் குட்டையால் முகத்தை மூடிக் கொண்டு இருமினேன்.

"அவன் யார்?" என்று நச்சரித்தான் நண்பன். நான் நடந்து கொண்டே சொன்னேன்..

"இவ்வூர் பிரபல பேங்க் முதலாளியின் மகன் இவன். இவன் பெயர் சங்கரன். நான்கு ஆண்டுகட்குமுன்பு இவனது வீட்டில் செல்வம் என்றொரு வேலைக்காரி இருந்தாள். குலமும், பணமும் செல்வத்தைத் தாழ்த்தி எடைபோட்டாலுங்கூட, அதற்கு ஈடு கொடுக்கும் அவளது எழிலைக் கண்டு வெறிகொண்டான் சங்கரன். அம்மாதிரியான சந்தர்ப்பத்தில் வானத்தையும் வில்லாக வளைப்பார்களே வாலிபர்கள்! எந்தெந்த ஆசைகளை மூட்டினானோ தெரியாது; செல்வம் சங்கரனால் சீரழிக்கப் பட்டாள்.

"உள்ளத்தை மறைத்தாலும் காலத்தை மறைக்க முடியுமா? அது தன் கதியில் ஆறுமாதம் ஓடியபிறகு தான், செல்வம் கர்ப்பவதி என்பதைச் சங்கரனின் தாயார் கண்டு கொண்டாள். அந்நிலையில், அவள் தன் குலப்பெருமையைக் காப்பாற்ற

ஒரே ஒரு செயலைத்தான் செய்ய முடியும்; அதைத்தான் அவளும் செய்தாள். செல்வம் வீட்டை விட்டுத் துரத்தப்பட்டாள்.

"என்றைக்குமே ஏழையைக் கண்டால் மோழையும் பாய்வதுஇயல்பு. ஏழையாகப் பிறந்தவர்கள் எதற்கும் தயாராகிவிடுவார்கள். ஊரார் ஏச்சுப் பேச்சைக் கேட்டுக் கேட்டு செல்வத்தின் மனம் மரத்துவிட்டது அவளுக்கு வேண்டியது ஒன்றே ஒன்று; அதுதான் சோறு; அதைப் பெறும் வழி பிச்சை!

உருண்டோடிய காலம் அவள் கையிலே அந்தக் குழந்தையை விட்டுச் சென்றது. அவளும் அதை ஆசையோடும், பாசத்தோடும் வளர்த்தாள். வருடமும் இரண்டுக்கு மேலாகிவிட்டது.

"சென்ற ஞாயிற்றுக்கிழமை, நேற்று முன் தினம் இவ்வூரில் ஒரு அனாதைப் பெண் செத்துக் கிடந்ததாகக் கேள்விப் பட்டாயல்லவா? அவள்தான் செல்வம்"

"அவளுக்கு என்ன நேர்ந்தது?" — நண்பன் விஷயம் முழுதும் அறியத் துடித்தான்.

"யாரோ ஓட்டலில் ஏதோ உணவு கொடுத்திருக்கிறார்கள். அதிலே ஏதோ விஷம் கலந்திருக்கும் போலிருக்கிறது. அது காரணம்"

"அட பாபமே! நண்பன் திடீர் என்று உணர்வு பெற்றவனைப் போலக் கேட்டான். "அப்படியானால், அந்தக் குழந்தை யாருமில்லாத அனாதையா?"

"ஆமாம்!" நான் தலையசைத்தேன்.

"அட, பாவி, அப்போதே சொல்லியிருக்கக்கூடாதா?"

"சரி, சரி. உன் வீடு வந்து விட்டது. வீட்டுக்குப் போ."

"நாளைக்கு அதை எப்படியாவது அனாதை விடுதியில் சேர்த்துவிட வேண்டும். நாளை வரைக்கும்......"

சோகம் கவிந்த முகத்துடன் அவன் வீட்டுக்குள் சென்றான்.

நான் நடந்தேன் என் வீட்டை நோக்கி.

எங்களுக்காக அலுவலகம் மறுநாட்காலை திறந்து கிடக்கும்போது நாங்கள் மட்டும் வீட்டில் உறங்க முடியுமா? முதல் நாள் சென்ற வழியேதான் மறுநாளும் எங்களது வாழ்க்கை வண்டியை உருட்டிக் கொண்டு ஓடினோம்.

அதே மைல் கல்; அதற்கருகில் முனிசிபல் தண்ணீர்க் குழாய். இடைப்பட்ட புல் தரையில் அந்தக் குழந்தை. அது இப்பொழுது அழவில்லை. ஏன்?

இப்பொழுது அதற்கு அழவேண்டிய அவசியமில்லை.

அது இந்த உலகத்தை, உலகத்தில் இருக்கும் மக்களை, மக்கள் இனத்தை ஓட ஓட விரட்டித் துரத்தும் பசியைப் பற்றி லட்சியம் செய்யக் கூடிய நிலையிலில்லை.

ஆம்! அது பிணமாகிவிட்டது.

பசியின் கொடும் வெப்பம் தாங்காமல், அரும்பிய வேகத்திலேயே வாடிக்கருகி உதிர்ந்து விட்டது அந்த அரும்பு.

நண்பன் பெருமூச்சு விட்டான். அவனுடைய கண்கள் கலங்கின.

உலகத்தின் துயர முடிவுகளுக்காக நாமும் உடன்கட்டை ஏறிவிட முடியுமா?

நான் அவனை இழுத்துக்கொண்டு நகர்ந்தேன்.

கதறிக் கதறித் துடித்த அந்தப் பிஞ்சு உடல் பனியில் நனைந்து உலர்ந்து விறகாகக் காட்சி அளித்தது.

நேற்றிரவுவரை அனுதாபப்படாத மக்கள் கூட்டமும், நகர் மன்றமும் இன்று ஓடிவருகின்றன அனுதாபத்தோடு அங்கு!

என்னையா, உலகம்? பிணத்தை மதிக்கிறது; மனிதப் பிறவியை மதிக்கவில்லையே!

குட்டிக் கதை

முன்னொரு காலத்தில் ஒரு அரசன் இருந்தான். அவனுக்கு விவேக மிக்க ஒரு மந்திரியிருந்தான். அவன் மிகவும் நல்லவன். ராஜ்யத்தின் நன்மை ஒன்றையே பிரதானமாகக் கருதி கள்ளங் கபடில்லாமல் சேவை செய்து வந்தான். இதனால் அரசனும் மக்களும் அவனை வெகுவாக கௌரவித்தனர். அவனது புகழ் ராஜ்யம் முழுவதும் பரவிற்று.

அவனது புகழ் மேலோங்கி வருவதைக் கண்டு பொறாமைப்பட்டவர்களும் சிலர் உண்டு. மந்திரி மீது அரசனுக்குக் கோபம் உண்டாக்கச் செய்து, அவனை தேசத்தை விட்டே துரத்தியடித்துவிட வேண்டுமென்று திட்டம் போட்டார்கள் இந்த சதிகாரர்கள். இந்தத் திட்டத்தை நிறைவேற்ற சரியான சமயத்தையும் அவர்கள் எதிர்நோக்கிக் கொண்டிருந்தார்கள்.

மந்திரி எப்போதும் தன்னுடன் ஒரு பெரிய பெட்டியை பூட்டுப் போட்டு வைத்துக்கொண்டிருப்பது வழக்கம். வேட்டைக்கோ அல்லது வெளியில் வேறு எங்கோ சென்றாலும்கூட அந்தப் பெட்டியை அவன் தன்னோடு தவறாமல் எடுத்துச் செல்வான். இவற்றை யெல்லாம் பார்த்த பொறாமைக்காரர்கள் அரசனிடம் கோள் மூட்டிவிட்டனர்.

“மகாராசா, மந்திரி நல்லவர் போல் நடித்துக்கொண்டு இன்னொரு புறம் அரண்மனையிலுள்ள விலையுயர்ந்த பொருள்களை யெல்லாம் அபகரித்து பெட்டியில் பூட்டிக் கொள்கிறார். வேண்டுமானால் ஒரு தினம் அந்தப் பெட்டியை பரிசோதித்துப் பாருங்கள்” என்று தூபம் போட்டனர்.

அரசன் முதலில் இதை நம்பவில்லை. ஆனால் அடிமேல் அடி வைத்தால் அம்மியும் நகரும் என்பார்களே அதுபோல இந்தக் கசடர்கள் ஓயாது துர்போதனை செய்ததால் அவனும் சற்று அசைந்து கொடுத்தான்.

ஒரு நாள் வேட்டைக்குச் செல்லும்போது வழக்கம்போல மந்திரி பெட்டியைத் தன்னோடு எடுத்துச் சென்றான். அந்த சமயம் பார்த்து அரசன் மந்திரியை வழி மறித்து. “அந்தப் பெட்டியில் என்ன இருக்கிறது?” என்று சற்று கோபமாகவே கேட்டான்.

“ராஜ்யத்தின் சொத்து எதுவுமில்லை அரசே” என்று மந்திரி பணிவாகக் கூறினான். ஆனால் மன்னனுக்கு சந்தேகம் வலுப்பெற்றது. அந்தப் பெட்டியைத் திறக்கும்படி தன் ஏவலாள்களுக்குக் கட்டளையிட்டான்.

அப்படியேஅவர்கள் பெட்டியைத் திறக்க, உள்ளேயிருந்தப் பொருள்களைப் பார்த்து அரசன் திகைப்படைந்தான். பெட்டியில் ஆடு மாடு மேய்க்கும் இடையன் உடுத்தும் ஒரு கந்தல் மட்டும்தான் இருந்தது. ‘இதெல்லாம் என்ன?” என்று வினவுவதுபோல் ஆச்சரியத்தோடு மந்திரியைப் பார்த்தான்.

அமைச்சர் சொன்னான்: “மன்னவா, என் புத்திக் கூர்மையைப் பார்த்து ஆட்டிடையனாக இருந்த என்னை மந்திரியாக்கினீர்கள். இவ்வளவு உயர் பதவி கிடைத்ததும் சிலர் தங்களது பழைய நிலையை மறந்து, தன்னகங்காரத்தோடு தவறான வழியில் சென்றுவிடுவதுண்டு. அம்மாதிரி நானும் போய்விடக் கூடாது என்பதை சர்வ சதாவும் எனக்கு நினைப்பூட்டிக்கொண்டு இருப்பதற்காகவே இந்தப் பெட்டியை எப்போதும் என்னோடு வைத்திருக்கிறேன்” என்றான்.

அரசன் மனமகிழ்ந்து மந்திரியைப் பெரிதும் பாராட்டினான். பொறாமைக்காரர்கள் வெட்கித் தலை குனிந்தார்கள்.

இறைவன் விழித்தான்!

கவிஞர் இக்பால்

சோவியத் மக்களின் நல்வாழ்விற்கும், இன்றைய எல்லையில்லாத முன்னேற்றத்திற்கும் வழி வகுத்தவர் மாமேதை லெனின். அம்மனித குலத்தின் மணி விளக்கு இம்மண்ணிலிருந்து மறைந்தாலும் விண்ணுலகில் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது. ஒருநாள் லெனின் இறைவனின் சந்நிதானத்தின் முன் நின்றார். சுற்றுமுற்றும் பார்த்தார். தேவ தூதர்கள் வீற்றிருந்தார்கள்.

இறைவனை நோக்கி "நீதான் இறைவனோ" என்று லெனின் கேட்டார். இறைவன் திகைத்தார். லெனினின் கண்கள் கோவைப் பழங்களாக மாறின. "நீ யாருடைய இறைவன்?" என்று மீண்டும் கேட்டார். சந்நிதானத்தில் சலசலப்பு. இறைவன் திகைத்தார். தேவ தூதர்கள் விழித்தார்கள்.

"ஏ! இறைவனே! உலகில் வர்க்க முரண்பாடும், மனிதனை மனிதன் அடக்கியாள வேண்டுமென்ற பேரவாவும் வளர்ந்து வருவது உனக்குத் தெரியாதா? கீழ்திசை மக்களுக்கு வெள்ளையன்! தொழிலாளிக்கு முதலாளி! ஆம்! அவர்கள் தான் அவர்களுக்குக் கடவுள்! தொழிலாளியின் துன்பத்தை நீ அறியமாட்டாயா? அறிந்து மௌனியாகிவிட்டாயா? இப்பொழுது சொல், நீ யாருக்குக் கடவுள்?" லெனினின் இக்கேள்விக் கணைகள் இறைவனின் இதயத்தைத் துளைத்தன. உலகில் நடப்பதறியாது உறங்கிக் கொண்டிருந்த இறைவன் விழித்தான். தேவ தூதர்களைத் திரும்பிப் பார்த்தான். அவர்கள் லெனின் கூறுவது உண்மையென்று தலையசைத்தார்கள். இறைவனின் மூடிக்கிடந்த இதயக் கதவுகள் திறந்தன. "ஏழைகளுக்கு உணர்ச்சியூட்டுங்கள்! செல்வந்தர்களின் கோட்டை கொத்தளங்களை இடித்துத் தள்ளுங்கள்" என்று இறைவன் உத்தரவு பிறப்பித்தான்.

"பசியால் துடிக்கின்ற உழவன்
பசிதீர்க்க உதவா வயல்கள்
எங்கிருப் பினும்அதி லோர்
தானிய மணியும் எஞ்சாது
தீக்கு இரையாக் குவீரே"

என்றான் இறைவன். லெனின் தேவலோகத்திலும் புரட்சி செய்தார். அங்கும் அவர் வெற்றிபெற்றார்.

இத்தகைய உள்ளமுருகும் கற்பனை சித்திரத்தை சோவியத் புரட்சியால் ஈர்க்கப்பட்ட கவி இக்பால் எழுதியிருக்கிறார்.

அருணா ரணக்களிம்பு
(சர்வ ரண நிவாரணக் களிம்பு)
விலை அணா மூன்று.
ஏஜெண்டுகள், ஸ்டாக்கிஸ்டுகள் தேவை
விபரங்களுக்கு
P. A. முத்துசாமி (ராஜு)
ஏஜெண்ட், ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பரேஷன்
புஞ்சைபுளியம்பட்டி P.O. (கோவை ஜில்லா)
கமிஷன் தள்ளுபடியுடன், மலிவான விலையில் அழகான ஆர்ட் காலண்டர்கள் தேவைக்கு எங்களிடம் ஆர்டர் செய்யுங்கள்.

'கலித்தொகை-பரிபாடல்'

"இளம்பூரணன்"

★

கலித்தொகையும் பரிபாடலும் பாடல் வகையால் தொகுக்கப் பெற்றவை. அவற்றின் பெயரே அதனை உணர்த்தும். 'கலித்தொகை' 'கலிப்பா' என்ற பாடல் வகையால் ஆகிய கவிதைகளைக் கொண்டது. அகப் பொருள் தழுவியது. 'பரிபாடல்', என்ற பா வகையைச் சேர்ந்தவை 'பரிபாடல்' என்னும் நூலில் அடங்கியப் பாடல்கள். 'எட்டுத் தொகை'யில் அடங்கிய மற்ற நூல்கள் எல்லாம் 'அகவல்' என்ற பா வகையைச் சேர்ந்தவை.

இவ்விரண்டு வகைப்பாக்களும் இசையுடன் பாடுவதற் கேற்றவை. அகவல் என்பது இயற்கையான சந்தத்தில் அமைந்தது; ஒரே சீராகச் செல்லும். கலிப்பாவோ துள்ளும் நடையுடையது; சொல்ல விரும்பும் கருத்தை நாடகச் சுவைபடச் சொல்ல இடம் தருவது. பரிபாடலோ இசைக்கு ஏற்ற பல உறுப்புக்களைக் கொண்டு, கருத்துக்களை விரிவாக அமைக்க இடம் தருவது. இவை இரண்டுமே காதல் உணர்ச்சியை வெளிப்படுத்த மிகவும் ஏற்றவை என்பது ஆசிரியர் தொல்காப்பியனாரின் கருத்து.

"நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்
பாடல் சான்ற புலனெறி வழக்கம்
கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்
உரியதாகும்........"

என்பது தொல்காப்பியர் சூத்திரம்.

பதிப்பாசிரியர்கள்

இந்த இரண்டு தொகை நூல்களும் இடைக்காலத்தில் மறைந்து மறக்கப் பட்டிருந்தன. டாக்டர் உ. வே. சாமிநாதையரின் அரிய முயற்சியால் பரிபாடல் உலகத்தாருக்கு அச்சுப் புத்தக வடிவில் கிடைத்தது. உயர்திரு. சி. வை. தாமோதரம் பிள்ளை என்ற பெரியாரின் பெரு முயற்சியால் 'கலித்தொகை' அச்சேறியது.

கலித்தொகை

இந்நூல் 150 பாடல்களைக் கொண்டது. நூல் முழுவதும் கிடைத்திருக்கிறது! அகப்பொருள் கூறும் ஐந்து திணைகளில் ஐந்து பெரும் புலவர்

களால் பாலைக்கலி, குறிஞ்சிக்கலி, மருதக்கலி, முல்லைக்கலி, நெய்தற் கலி ஆகியவை இயற்றப் பெற்றுள் ளன. இவற்றை இயற்றிய புலவர் கள் முறையே பாலை பாடிய பெருங் கடுங்கோ, கபிலர், மதுரை மருதன் இளநாகனார், சோழன் நல் உருத்திரன், மதுரை ஆசிரியர் நல்லந்துவனார் என்ப வர்கள். நெய்தல் திணைப் பாடல் களைப் பாடிய நல்லந்துவனார் என்ற புலவரே இவற்றைத் தொகுத்தவர். ஒரு சாரார் கலித்தொகைப் பாடல் கள் யாவுமே ஒரே புலவரால் இயற் றப்பட்டிருக்கக் கூடும் என்றும் கருதுகிறார்கள்.

கலிப்பா — விளக்கம்

"கலிப்பா என்பது ஒருவகையால் வெண்பாப் போன்றது; ஆனால் குதிரை போலத்துள்ளியோடுவது... (Sonnet) என்று ஆங்கிலத்தில் கூறுவது போன்று கட்டு திட்டம் மிக்கது. (தரவு, தாழிசை, சுரிதகம், அராகம், அம்போதரங்கம் என்பவை கலிப்பாக்களின் உறுப்புக்கள்). முத லில் பொருளைச் சுருக்கமாக அறிவிப் பது தரவு. பின் அதில் உயிர் நிலை யான கருத்தை மூன்று முறை சுவை ததும்பப் பன்னிப் பன்னிப் பல வகையாகப் பேசுவதே தாழிசை. முடிந்த முடிவினை விளக்குவதே சுழிக்கப் பாயும் சுரிதகம். தொடங்கு வது, பின் கதை சிக்கலுறுவது, அதன்பின் சிக்கல் அவிழ்ந்து முடிவு பெறுவது—இந்த மூன்று நிலையை யும் இப்படிக் கலிப்பா விளக்கியது. ......இதிலே எத்தனையோ வகை: பேச்சும் விடையுமாக வருவது உறழ் கலி; மிடுக்கோடு சந்தக் குழிப்புப் போல வரும் அராகமும் இதில் உண்டு. கருத்தினைப் பாரிக்கும் போது, அலைபோலத் தாழிசை அடி யின் அளவிலிருந்து மெல்லப் பாதிப் பாதியாகக் குறைந்து கொண்டே வந்து ஒவ்வொரு சீரே ஒவ்வோரடி யாகவும் ஒவ்வொரு சொற்றொடராக வும் வருகிற அம்போதரங்க அழகும் இதில் வரும். துணியைக் கட்டுவார் வைக்கும் கொய்சகம் போல இவை எல்லாம் உறழ்ந்தும் பிறழ்ந்தும் கொச்சமாக வருவதும் உண்டு". என்பது பேராசிரியர் தெ. பொ. மீனாட்சி சுந்தரனார் கலிப்பாவின் அமைப்பைப்பற்றி அளிக்கும் அழ கான விளக்கம்.

நூலின் சிறப்பு

"கலித்தொகைப் பாடல் ஒவ் வொன்றும் ஒரு சிறு கதையைப் போல அமைந்திருக்கிறது." இது 'கற்றறிந்தோர் ஏத்தும் கலி' எனப் பாராட்டப் பெற்றது. பாடலின் போக்கிலேயே பல அருமையான கருத்துக்கள் மிகவும் நன்றாக வலி யுறுத்தப் படுகின்றன. மற்ற எட் டுத்தொகை நூல்களைக் காட்டிலும் அதிகமாகவே கலித் தொகையில் பாமர மக்களைப் பற்றி அறிய முடி கிறது. மரபுகளை ஒட்டிப் பேசாமல் இயற்கையாக உள்ளத்தில் தோன் றும் உணர்ச்சிகளை வெளியிடுவது போல் ஒரு சில பாடல்களில் பாத்தி ரங்கள் பேசுகின்றன.

கலித்தொகை உரை

இந்த நூல் முழுவதற்கும் 'நச்சி னார்க்கினியர்' உரை எழுதியிருக்கி றார். நூலைப் போலவே இந்த உரையும் இலக்கியச் சிறப்புப் பெற்றதாகும். பாடலின் கருத்து, அதில் அமைந்துள்ள நயங்கள் முத லியவற்றைத் தொல்காப்பியம் போன்ற இலக்கணங்களின் மரபை யும் இலக்கியங்களின் போக்கையும் உணர்ந்து நச்சினார்க்கினியர் விளக்கு கிறார். இவரது உரை இல்லாவிட் டால் இந்நூலின் பல பகுதிகளுக்கு நல்ல விளக்கம் இல்லாமலே போய் விடும்.

பல்வகை நயங்கள்

பல வகையான இலக்கிய நயம் மிகுந்த இந்தப் பாடல்கள் படிக்கப் படிக்கத் தெவிட்டாத இன்பம் தரு பவை:

'இல்லென இரந்தார்க்கு ஒன்று ஈயாமை இழிவு' என்றும், 'அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்

தல்' செய்யவேண்டும் என்றும் 'கேள் கேடூன்றவும் கிளைஞர் ஆரவும்' வேண்டும் என்றும் கருதிய ஓர் ஆண் மகன் தன் முன்னோர் சேர்த்து வைத்த செல்வத்தை எடுத்துச் செலவு செய்வது முறையாகாது, "தம்மில் இருந்து, தமது பாத்துண்ணுதல்" சிறப்பானது என்று நினைத்து, வெளியூர்களுக்குச் சென்று வாணிபம் செய்து பொருள் தேட நினைக்கிறான். அந்த நேரத்தில் அவனைப் பிரிந்தால் தலைவி உயிர்வாழ மாட்டாள் என்பதை மிகவும் நயம்பட ஒரு தோழி எடுத்துரைக்கிறாள் :

"செல் ; இனிச் சென்று
நீ செய்வினை முற்றி,
அன்பு அற மாறி,
'யாம் உள்ளத் துறந்தவள்
பண்பும் அறிதிரோ?'
என்று, வருவாரை
என் திறம் யாதும்
வினவல் ; வினவின்
பகலின் விளங்கும்
நின் செம்மல் சிதைய,
தவல் அரும் செய்வினை
முற்றாமல், ஆண்டு ஓர்
அவலம் படுதலும் உண்டு."

"நீ செல்லலாம். சென்று பொருள் திரட்டி உன் மனக் கருத்தை நிறைவேற்றலாம். ஆனால் இங்கிருந்து வருபவர் யாரையாவது பார்த்து "நான் வீட்டில் விட்டுவிட்டு வந்த என் மனைவி எப்படி இருக்கிறாள்?" என்று மட்டும் கேட்டுவிட வேண்டாம். ஏனென்றால் அவர்கள் சொல்கிற செய்தி உனக்குத் துக்கம் தருவதாக இருக்கும். அதனால் ஒரு வேளை நீ மேற்கொண்ட காரியம் நிறைவேறாமலும் போய்விடும்" என்று காதலன் காதலியரிடையுள்ள அன்பின் ஆழத்தை விளக்குவதாக அமைகிறது இப் பேச்சு.

பழக்க வழக்கங்கள்

பண்டைத் தமிழர்களின் இல்லற வாழ்வு, அவர்களது வாழ்க்கையை இயக்கி வந்த குறிக்கோள்கள், அவர்களுடைய ஆசாபாசங்கள், நடை, உடை முறைகள் அவர்களது நம்பிக்கைகள் முதலியவற்றை யெல்லாம் நன்றாக அறிவதற்கு இந்த நூல் பெரும் துணை புரிகிறது.

தமிழர்கள் நல்ல உழவர்கள், கைதேர்ந்த வணிகர்கள், கப்பல் வியாபாரம் செய்தவர்கள் என்பவை போன்ற பொதுப்படையான சில செய்திகளும், இக்காலத்தில் 'மஞ்சி விரட்டு' என்று சொல்லப்படும் 'ஏறு தழுவல்' முல்லைநில ஆயர்களிடத்தில் ஒரு பெரும் வீர விளையாட்டாக இருந்தது என்பன போன்ற பழக்க வழக்க ஒழுக்கங்களும் ஆய்ச்சியரது குரவைக் கூத்து, மற்றையோரது துணங்கைக் கூத்து, யாழிசை, குழலிசை போன்ற கலைகள் அக்காலத்தில் போற்றப்பட்ட முறையும் இன்னும் இவை போன்ற பல செய்திகளும் கலித்தொகையால் அறியப்படுவன.

இராமாயணம், பாரதம் ஆகிய இதிகாசங்கள் அவற்றுள் கூறப்படும் கதைகள். கண்ணன், பலதேவன் முதலிய தெய்வங்கள் இவற்றை அக்காலத்து மக்கள் அறிந்திருந்தனர்.

பரிபாடல்

"பரிபாட்டில் பலவகைப் பாடல்களின் பகுதிகளையும் பார்க்கலாம். ஆசிரியப்பா, வஞ்சிப்பா, வெண்பா, கலிப்பா ஆகிய நால்வகைப் பாடல்களும் கலந்த ஒரு வகைப் பாடலே பரிபாடல். இருபத்தைந்து அடிகள் முதல் நானூறு அடிகள் வரையில் இப் பாடலைப் பாடலாம்."

"பரிந்து வருதல் பரிபாடல். பரிந்து வருதல் — ஏற்றுக்கொண்டு வருதல். பரிதல்—ஏற்றல், தாங்குதல். அதாவது நால்வகைப் பாடல் உறுப்புக்களையும் ஏற்றுக்கொண்டு வருதல்" என்பது பரிபாடலைப் பற்றி அறிஞர் சாமி சிதம்பரனார் தரும் விளக்கம்

பரிபாடல்கள் அகம், புறம் இரண்டு செய்திகளையும் கலந்து தருவன. இசையோடு பாடுவதற்கு மிகவும் ஏற்றவை. பண்டைத் தமிழர்கள் இசைக் கலையில் அடைந்

திருந்த தேர்ச்சிக்குப் பரிபாடல் சிறந்த எடுத்துக் காட்டாகும்.

பதிப்பும், பகுப்பும்

மறைந்து புதைந்துகிடந்த இந்த அரும்பெரும் நூலைத் தாம் தேடிக் கண்டுபிடித்த சுவைமிக்க கதையை உ. வே. சாமிநாதையரவர்கள் தமது பரிபாடல் பதிப்பில் எழுதியிருப் பதைப் படித்து அன்னாருக்கு நாம் நன்றி செலுத்தவேண்டும்.

'பரிபாடல்' என்ற நூல் 70 பாடல் களைக் கொண்டது என்றும் அவற் றுள் 8 பாடல்கள் திருமாலைக் குறித் தவை, 31 பாடல்கள் முருகனைக் குறித்தவை, 1 பாடல் காளிக்குரியது, 26 பாடல்கள் வைகைக்கு உரியவை, 4 பாடல்கள் மதுரையை வருணிப் பவை என்றும் தெரியவருகிறது.

ஆனால் இப்பொழுது பரிபாடல் ஏட்டுப் பிரதிகளிலிருந்து நமக்கு கிடைத்திருப்பதை முதல் 22 பாடல் களேயாகும். அவற்றுடன் 'புறத் திரட்டு' என்னும் தொகை நூலி லிருந்தும் பழைய உரைகளிலிருந் தும், 2 முழுப் பாடல்களும், சில பாடல்களின் உறுப்புக்களும் தெரிய வருகின்றன. இவற்றுள் 7 திரு மாலைப்பற்றியவை, 8 முருகனைப்பற் றியவை 9 வைகையைப் பற்றியவை.

கிடைத்துள்ள பாடல்களில் ஒவ் வொன்றின் முடிவிலும் துறை, இயற்றிய ஆசிரியர் பெயர், இசை வகுத்தோர் பெயர், பண்ணின் பெயர் முதலிய குறிப்புக்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

பரிபாடல் உரை

இந்த நூலுக்குச் சிறந்த பழைய உரை ஒன்று உண்டு. இது திருக் குறளுக்கு உரை செய்த பெரும் புல வர் 'பரிமேலழகர்' என்பவரால் இயற்றப் பட்டது. பாடல்களின் கருத்தை விளக்குவதோடு இந்த உரை வேறு தமிழ் நூல்களிலிருந்து எடுக்கப்பட்ட மேற்கோள்கள், வேதம், உபநிடதம் முதலியவற்றின் கருத்துக்கள் இவற்றைத் தருகிறது.

ஆசிரியர்கள்

(1) ஆசிரியன் நல்லந்துவனார், (2) இளம் பெரு வழுதியார், (3) கடுவன் இளவெயினனார், (4) கரும்பிள்ளைப் பூதனார் (5) கீரந்தையார், (6) குன் றம் பூதனார், (7) கேசவனார், (8) நப் பண்ணனார், (9) நல்லச்சுதனார், (10) நல்லழுசியார், (11) நல்லெழுனியார், (12) நல் வழுதியார், (13) மையோ டக் கோவனார் என்பவர்கள் தற் பொழுது கிடைத்துள்ள பாடல்க ளின் ஆசிரியர்கள். இவர்களில் சில ரது பாடல்கள் மற்ற தொகை நூல் களிலும் காணப்படுகின்றன.

நூலின் சிறப்பு

இந்தப் பாடல்களில் பல, தெய்வ பக்தியைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன. பிற்காலத்தில் தோன்றிய தேவாரம், திவ்வியப் பிர பந்தம் போன்றவற்றுக்கு இவை வழிகாட்டியாக அமைந்திருத்தல் வேண்டும்.

ஒரு பாடல்;

அழல் புரை குழை,
 கொழுநிழல் தரும் பலசினை
ஆலமும், கடம்பும்,
 நல்யாற்று நடுவும்,
கால் வழக்கு அறுநிலைக்
 குன்றமும், பிறவும்
அவ்வவை மேய
 வேறுவேறு பெயரோடு
எவ்வயினோயும் நீயே''

என்று திருமாலே பரம்பொருள் என்று கூறுகிறது.

மதுரை

''மாயோன் கொப்பூழ்
 மலர்ந்த தாமரைப்
பூவொடு புரையும்
 சீரூர், பூவின்
இதழகத் தனைய
 தெருவம், இதழகத்து
அரும் பொகுட்டனைத்தே
 அண்ணல் கோயில்
தாதி னனையர்
 தண்டமிழ்க் குடிகள்
தாதுண், பறவை
 யனையர் பரிசில் வாழ்நர்''

என்ற பாடற் பகுதி மதுரையின் அமைப்பையும் சிறப்பையும் அழகு பெற வருணிக்கிறது. ''திருமாலின்

உந்தியிலே மலர்ந்த தாமரை மலர் போன்றது மதுரை நகரம். அந்தத் தாமரைப் பூவின் இதழ் போன்று அமைந்துள்ளன மதுரைத் தெருக்கள். பூவின் நடுவிலுள்ள பொகுட்டைப் போன்றது கோயில். தாமரைத் தாது போன்றவர் மதுரை நகர் வாழும் தண்டமிழ்க் குடிகள். அந்தப் பூந்தாதை நுகர வரும் வண்டு போல் வருபவர்கள் பரிசிலர்கள். என்ன அழகான கற்பனை?

"ஈவாரைக் கொண்டாடி
ஏற்பாரைப் பார்த்துவக்கும்
சேய் மாடக் கூடலும்,
செவ்வேள் பரங்குன்றும்
வாழ்வாரே வாழ்வார்
எனப்படுவார், மற்றையார்
போவாரார் புத்தேள் உலகு"

என்பது மதுரை நகரைச் சிறப்பிக்க விரும்பும் ஒரு கவிஞரின் வாக்கு.

வையையில் புதுப்புனல் பொங்கி வரும் காலத்தில் ஆண்களும் பெண்களுமாக அணிதிரண்டு சுண்ணமும் சாந்தும் கொண்டு சென்று ஆற்றில் பலவிதமாகக் களித்துக் குளித்து மீளும் காட்சி பல பாடல்களில் வருணிக்கப்படுகிறது.

திருப்பரங்குன்றமும், அங்கே கோவில் கொண்டிருந்த முருகனும், அங்கே அமைந்திருந்த ஓவிய மண்டபமும் சில பாடல்களில் சீர் பெற வருணிக்கப்படுகின்றன.

மற்ற தொகை நூல்களைப் போலவே இந்நூலும் பண்டைத் தமிழ் மக்களின் பழக்க வழக்கங்களை அறியவும் பயன்படுகிறது.

இவ்விரண்டு நூல்களையும் கற்கத் துணை செய்யும் நூல்கள்: 1. எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும் —சாமி. சிதம்பரனார் 2. பரிபாடல் சொற்பொழிவுகள் 3 கலித்தொகைச் சொற்பொழிவுகள்.

ஒருவர்: என்ன இங்கே ஓரே நாற்றம் அடிக்கிறதே?

இன்னொருவர்: வேறொன்றுமில்லை. அடுத்த வீட்டில் சர்க்கார் நியாயவிலைக் கடையிருக்கிறது. அதுதான் இந்த நாற்றம்.

வேதனை

வல்லிக்கண்ணன்

மாதவன் உள்ளத்தில் துயரம் கவிந்து கிடந்தது. அமைதி இழந்து, அங்குமிங்கும் அலைந்து கொண்டிருந்தான் அவன்.

மாதவனிடமுள்ள பெருங்குறை, அவன் மனித இதயம் பெற்றிருந்தது தான். அதனால், பிறர் வேதனைகள் எல்லாம் சுமையாக அழுத்தின அவனை.

இப்பொழுதுகூட அவன் வேறொருவனுக்காகவே மனஉளைச்சல் அனுபவித்தான். அந்த நபரின் பார்வையில் பட்டுவிடக்கூடாதே என்ற துடிப்போடு—பயம் என்று கூடச் சொல்லலாம்—அவன் தன் வழியே போய்க்கொண்டிருந்தான்.

'கடன்காரன் மாதிரி அவன் வழி மேல் விழிவைத்துக் காத்திருப்பான். சரியான வழிமறிச்சான் சாமி வந்து சேர்ந்தானே!' என்று எரிச்சலோடு முனங்கியது அவன் உள்ளம்.

உண்மையான கசப்பின் விளைவல்ல அது. பண வறட்சி தூண்டிவிட்ட எண்ணம்தான்.

'என்ன வாழ்க்கை இது, தரித்திரம் பிடித்த வாழ்வு!' என்று பொருமியது அவன் மனம். 'அட கடவுளே, நீ எனக்கு ஏன் இளகிய மனசைப் படைத்தாய்? அப்படித்தான் படைத்தாயே, என்னிடம் மிகுந்த செல்வத்தையாவது கொடுத்திருக்கக் கூடாதா—தேவையானவர்களுக்கு, தேவைப்படும்போது, தாராளமாக எடுத்துத் தருவதற்கு? கஷ்டப்படுகிறவர்களுக்கு உதவி செய்வதற்கு?' என்று கொதித்தது அவன் சிந்தனை.

மாதவன் தன்னைச் சுற்றிலும் வறுமையின் கோரப் பிடிப்பையே கண்டான். வாழ்க்கையின் பயங்கர உருளையில் சிக்கி, மௌனமாக ரத்தம் கக்கியபடி அணு அணுவாகச் செத்துக்கொண்டிருக்கும் மனிதர்களையே கண்டான். உடலோய உழைத்தாலும் முழு வயிற்றுக்குச் சாப்பிடவும் வசதி இல்லாமல் அல்லல் உறும் மனிதர்களே அவனைச் சுற்றிக் காணப்பட்டார்கள்.

மலர்களைவிட மென்மையான—களங்கமற்ற—குழந்தைகளும், பொறுமையையே அணியாகக் கொண்ட பெண்களும், உழைப்பையே வாழ்வாக வரித்து விட்ட தொழிலாளிகளும் பசி எனும் கொடுந் தீயினால் தகிக்கப்பட வேண்டிய நிலை நீடிப்பதேனோ?

மாதவனும் 'வாழமுடியாதவர்கள்' இனத்தைச் சேர்ந்தவன்தான். எனினும், தன்னைவிட மோசமான நிலைமையில் இருப்பவர்களைப் பார்க்கையில், அவன் மனம் வேதனையால் கனம் பெறும். கஷ்டப்படுகிறவர்களுக்காக அனுதாபம் கொள்வதோடு, தன்னால் இயன்ற அளவு உதவியும் செய்வான் அவன். உதவி புரிவதற்குக் காசும் பொருளும் இல்லாத வேளைகளும் ஏற்பட்டுவிடுவது உண்டு. ஆராயப் போனால், இவைதான் அதிகமாக இருக்கும். அந்தச் சந்தர்ப்பங்களில் அவனுடைய வேதனை பெருகிவிடும்.

வாழத் தெரிந்து கொண்ட பலரைப்போல், தனது கண்களைக் குருடாக்கிக் கொள்ளும் கலையை அவன் கற்றறியவில்லை. பணத்துக்கு மேல் பணம் சேர்ப்பதிலேயே கண்ணாக இருக்கிற செல்வர்களைப் போல், இதயத்தைக் கல்லாக்கிக்கொள்ளும் திறமையும் அவனிடம் இல்லை. பெரும் பகுதியினரைப் போல 'சின்னதோர் கடுகு உள்ளம்' அவனும் பெற்றிருந்தால், வாழ்வின் சிறுமைகள் அவனை அதிகமாகத் துன்புறுத்த மாட்டா.

'இல்லை, தரமுடியாது' என்று சொல்வதற்கும் விசேஷமான துணிச்சல் வேண்டும். அந்தத் துணிவு மாதவனுக்கு இல்லை. எனவேதான் அவன் இப்பொழுதும் மனக்குழப்பத்தினால் தவித்தான்.

அவனுக்கு அறிமுகமான ஒரு குடும்பம். கணவன், மனைவி,

இரண்டு குழந்தைகள். குடும்பத் தலைவனின் தம்பி ஒருவனும் உடன் இருந்தான்.

பெரியவனுக்கு 'மாத வருமானம்' என்று ஒரு தொகை வந்துகொண்டு தானிருந்தது. ஆயினும் அது குடும்பச் செலவுக்குப் போதுமானதாக இல்லை. பற்றுக்குறை வருமானம், தீர்க்கமுடியாத சில்லறைக் கடன் என்ற இரண்டு சக்கரங்கள் மீது தள்ளாடிக் கொண்டிருந்த குடும்பச் சகடம் காலப்பாதையில் கிறீச்சிட்டு நகர்ந்து வந்தது. அதனால், குடும்பத்தில் உள்ளவர்கள் அடிக்கடி மோதிக் கொள்ளவும், முறைக்கவும், பிறகு சமாதானம் அடையவும் சந்தர்ப்பங்கள் நிறையவே வாய்த்தன.

தம்பி அருணாசலம் நிரந்தரமான வேலை எதுவும் செய்பவன் அல்ல. எங்கெங்கோ திரிந்து, ஏதேதோ வேலைகள் செய்து, கிடைத்த கூலியைப் பெற்று, எப்படியோ நாளோட்டுவதில் ஆர்வம் உடையவன் அவன். உழைக்கக் கூடாது என்று எண்ணும் சோம்பேறி அல்ல அவன். உழைக்காமலே பிறர் உழைப்பில் உண்டு கொழுக்க விரும்பும் வீணனுமல்ல. 'அத்தக்கொத்து வேலை' செய்து பிழைக்கும் அவனுக்கு நாள்தோறும் உழைத்துக் காசு பெறுவதற்கு உரிய வாய்ப்புக்கள் கிட்டுவதில்லை. அத்துடன் உள்ளூர இருந்து ஒரு வியாதி அவனை அரித்துக் கொண்டிருந்தது.

ஆகவே, ஓய்வு ஒழிவு இல்லாமல் உழைக்க முடிவதில்லை அவனால். கிடைக்கிற பணத்தில் ஒரு பகுதியை அவன் எடுத்துக் கொண்டு மீதியை வீட்டுச் செலவுக்காகக் கொடுத்து விடுவான். அவனுக்குக் கிடைக்கிற சாப்பாட்டில் 'சத்தான உணவு' என்பதே இராது. ஓய்வும், போஷாக்கும், மருந்தும் இல்லாமலே அவன் உடம்பு எத்தனை காலத்துக்கு ஓடி ஆடி உழைக்கும்?

அவன் வியாதி அதிகரித்தது. டாக்டர் ஒருவரிடம் அவன் உடம்பைக் காட்டினான். விலை அதிகமுள்ள சில மருந்துகளின் பெயர்களை எழுதிக் கொடுத்தார் அவர். பால், பழங்கள், முட்டை; ரொட்டி இவற்றைத்தான் தின்ன வேண்டும் என்று கட்டளையிட்டார், சோறு அல்லது இட்டிலி கூடவே கூடாது என்று அவர் கண்டிப்பாகச் சொல்லி விட்டார்.

அருணாசலத்துக்குச் சிரிப்பு வந்தது டாக்டரின் அறிவுரையைக் கேட்டு. தனது அவல நிலையை எண்ணி அழுகையும் எழுந்தது. மருந்துக்கும், பாலுக்கும் பழங்களுக்கும் அவன் எங்கே போவது? பெருமூச் செறிந்தான் அவன்.

ரொட்டி மட்டும் சாப்பிட்டுப் பார்க்கலாம். உடம்பு தேறினால் தேறட்டும், தேருவிட்டால் எக் கேடும் கெடட்டும்' என்று அவன் முடிவு செய்தான்.

'எனக்கு இனிமேல் சோறு வேண்டாம்' என்று அருணாசலம் அறிவித்தபோது, அவனுடைய அண்ணி அதிசயித்தாள். 'சாப்பாடும் சேர்த்துச் சம்பளம் இவ்வளவு என்று எங்காவது வேலை கிடைத்து விட்டதா?' என்று கேட்டாள்.

அவன் நிலைமையை விளக்கியவுடன் அவள் குமுறினாள்.

'உனக்கு ரொட்டிதான் வேணுமாக்கும் இனிமேலே? பெரிய துரை வீட்டு நாய்க்குட்டி இவரு. ரொட்டிதான் தின்பாராமில்லே!...சீ போ, போக்கத்தவனே...வெந்து போட்டதைத் தின்னுட்டு விதியேன்னு விழுந்து கிடக்காமல், ரொட்டி வேணும், சோறு வேண்டாமின்னு ஆரம்பிச்சிட்டான்' என்று அண்ணன் சீறிவிழுந்தான்.

'இவனுக்குச் சோறு போடுவதே வீண் தெண்டம், இவன் ஒழுங்காக எங்கே பணம் தருகிறான்?' என்று அண்ணி முணுமுணுத்தாள்.

இவ்வாறு சூடான பேச்சாக ஆரம்பித்த மனப்புழுக்கம் கொதி

லேை எய்தி, சண்டையாக முற்றி, அடிதடியில் முடிந்தது.

'இனி இந்த வீட்டிலே உனக்கு இடமில்லை. வெளியே போ. திரும்பவும் இந்த வாசல் நடையில் அடி எடுத்து வைத்தாயோ, உன் கால் முறிந்துவிடும்' என்று எச்சரித்து வழியனுப்பு உபசாரம் செய்தான் பெரியவன்.

இந்த விவகாரம் மாதவனுக்குத் தெரியும். அருணாசலத்தையும் அவன் அறிவான். 'நல்ல பையன்' என்றும் தெரியும். அவனிடம் அனுதாபம் பிறக்கவே மாதவன் சிறுவனை அழைத்து 'என்ன கலாட்டா?' என விசாரித்தான்.

நிகழ்ந்தது அனைத்தையும் அருணாசலம் அவனிடம் கூறினான். அவனது சோகப் பேச்சு மாதவனின் உள்ளத்தைத் தொட்டது.

'வளர்ச்சி அடைய வேண்டிய பருவம். பதின்மூன்று—பதினாலு வயசுப் பையனுக்கு ஒருவேளைச் சாப்பாடு கூடச் சரியாகக் கிடைக்க வழியில்லை. சிலபேர் ஒருவேளை டிபன் என்று தின்னத் தொடங்கினால், ஸ்வீட்டும் காரமும் மசால் தோசையும் புரூட் ஸாலடுமாக விழுங்குகிறார்கள். சிக்காளிக்கு வெறும் ரொட்டிக்குக்கூட வகையில்லை...' என்று எண்ணக் கொதிமூச்சை வீசியது அவன் மனம்.

'ஸார், தயவு செய்து நீங்க ஒரு உதவி செய்யணும். உங்களாலே முடியுமா ஸார்?' என்று பையன் கெஞ்சினான். பசியாலும் உணர்ச்சியாலும் கரகரத்த அவன் குரல் மாதவனின் இதயத்தை அறுத்தது.

'என்ன செய்யணும் சொல்லு!'

சிறுவனின் பரிதாபகரமான பார்வை மாதவனின் முகத்தில் தேங்கியது. 'எனக்கு ஒரு ரொட்டி...' என்று இழுத்தான் அவன்.

வேதனைப் பெருமூச்சு உயிர்த்தான் மாதவன். 'சரி, வா' என்று சொல்லி, அவனை ஒரு கடைக்கு அழைத்துச் சென்றான். நாலணாவுக்கு ரொட்டி வாங்கித் தந்தான். நல்ல செயல் ஒன்றைச் செய்த மனநிறைவு அவனுக்கு ஏற்பட்டது. பையன் அதை ஆசையோடும், பசிவேகத்தோடும், மகிழ்ச்சியோடும் கடித்துக் கடித்துத் தின்பதைக் கவனித்து நின்றவனுக்கு உண்மையான ஆனந்தமும், பெருமித நினைவும் எழுந்தன.

இவ்விதம் உதவி புரிவது அவனுக்குப் புதிய விஷயமல்ல. பையிலே காசு இருந்தால், உதவி கோருகிறவர்களுக்கு அவன் உதவத் தயங்கியதில்லை. 'நோட்டு வாங்கத் துட்டு இல்லை; டீச்சர் கோபிப் பாங்க' என்று பயந்து அழுது கொண்டு நிற்கும் சின்னஞ்சிறு பெண்களுக்கு ஒன்றிரு தடவை அவன் நோட்டு வாங்கிக் கொடுத்திருக்கிறான். 'ஐயா, பசி வயிற்றைக் கிள்ளுகிறது. காசு ஏதாவது...என்று கெஞ்சுகிறவனுக்கு—ஆளைப் பார்த்துக்கொண்டு—இரண்டணாவும் நாலணாவும் வழங்கியிருக்கிறான். 'நான் சாப்பிட்டு மூன்று நாட்களாச்சு, சாமி' என்று தீனக்குரல் கொடுத்த ஒருவனுக்கு அவன் ஒரு சமயம் ஹோட்டல் சாப்பாடே வாங்கிக் கொடுத்தது உண்டு. கிழிந்த கந்தல் ஒன்றைக் கட்டிக்கொண்டு திரிந்த ஒருவனுக்குப் புத்தம் புதிய வேட்டியையே அவன் கொடுத்துவிட்டான்...இவ்விதம் எவ்வளவோ!

மாதவன் பணக்காரன் அல்ல; அவனுடைய மாத வருமானம் ஐம்பது ரூபாய்கூட இல்லை என்கிற உண்மையை நினைவில் கொண்டு கவனித்தால், அவனுடைய மனோ விசாலமும் கைத்தாராளமும் எத்தகைய மாண்பு உடையவை என்பது புரியும்.

மறுநாளும், அதற்கு அடுத்த நாளும், பிறகும் அருணாசலம் மாதவனுக்காக வழியில் காத்து நின்றான். அவனைக் கண்டதும், 'பல்லெலாம்

தெரியக் காட்டி, பருவரன் முகத்தில் கூட்டி, சொல் எலாம் சொல்லி காட்டி' ரொட்டிக்காகக் கெஞ்சினுன்.

அவனது துயரநிலையையும், கெஞ்சும் முகபாவத்தையும் கண்டு மனம் இளகிய மாதவனுக்கு அவன் வேண்டுகோளை மறுக்கமுடியவில்லை. ஒவ்வொரு நாளும் ரொட்டி வாங்கிக் கொடுத்தான். 'இன்றுடன் நிறுத்தி விடுவான்...... இன்றைக்கு அவன் ரொட்டி கேட்க மாட்டான்' என்று அவன் மனம் எண்ணும்; ஆசை வளர்க்கும், ஏமாற்றம் அடையும்.

'ஸார், தயவு செய்து தினசரி எனக்கு ரொட்டி கொடுக்கும்படி கடையில் சொல்லி விடுங்களேன். அப்படியென்ருல் நான் ஒவ்வொரு நாளும் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்க வேண்டாமல்லவா? நான் பாட்டுக்கு வந்து, கடைக்காரரிடமே ரொட்டி வாங்கிக் கொள்ளலாமே' என்று அருணசலம் பணிவுடன் வேண்டிக் கொண்டான், ஒரு நாள்.

மாதவனுக்கு அந்தக் கடையில் 'பற்றுவரவு' இருந்தது. அருணசலம் கேட்கும் போது ரொட்டி கொடுக்கும்படி அவன் ஏற்பாடு செய்து விட்டான்.

அருணசலம் மாதவனைக் காணும் போதெல்லாம் நன்றிப் புன்னகை காட்டுவதும் வழக்கமாயிற்று.

ஒரு மாதம் சென்றது.

கடைக்காரன் மாதவனிடம் கணக்குக் கூறினுன். 'இந்த மாதம் உங்கள் கணக்கு ரொம்ப அதிகமாகி விட்டது, ஸார். இருபது ரூபாய் வரை வந்து விட்டது. சீக்கிரம் பணம் தர ஏற்பாடு செய்யுங்கள்' என்ருன்.

மாதவன் கணக்கைப் பார்த்தான். கடைக்காரன் பொய்யா சொல்லப் போகிருன்? ரொட்டி தான் கணக்கில் பேரளவுக்கு வளர்ந்திருந்தது!

அவன் பெருமூச் செறிந்தான். வேறு வழி இல்லை. 'இனிமேல் அவனுக்கு ரொட்டி கொடுக்க வேண்டாம்' என்று கடைக்காரனிடம் சொல்லிவிட்டு, துயர நெஞ்சோடு நடந்தான். 'இப்பொழுது இருபது ரூபாய் வேண்டும். கடைக்காரனுக்கு உரிய பணத்தைக் கொடுத்தாக வேணும். இல்லாவிட்டால் இனி அவன் எப்படி மாதவனுக்குத் தேவையான சாமான்களைக் கொடுப்பான்?

'ஒவ்வொருவன் அலட்சியமாக நூறும் - ஐநூறும் செலவு செய்கிருன். சூதாட்டத்திலும், ரேஸிலும் ஆயிரக் கணக்கில் அள்ளி வீசுகிருர்கள். நானே ஒருவன் வயிற்றுக்கு ரொட்டி வாங்கிக் கொடுக்க யோசிக்கிறேன்' என்று வருத்தப்பட்டான் அவன்.

அருணசலம் பசியோடு— ஆசையோடு—ரொட்டி வாங்கச் செல்வான். கடைக்காரன் கொடுக்க மறுத்ததும் அவனுக்கு எப்படி இருக்கும்?— இந்த எண்ணத்தை வைத்து விதவிதச் சித்திரங்களைத் தீட்டியது கற்பனை, அதனுல் அவன் மனக் குழப்பம் அதிகரித்தது.

மாதவன் இருபது ரூபாய்க்காக எங்கெங்கோ அலைந்தான். அநேக நண்பர்களிடம் முயற்சி செய்து பார்த்தான். பதினைந்து ரூபாய் தான் புரண்டது. 'பரவாலே. இவ்வளவாவது கிடைத்ததே. இதை முதவில் கடைக்காரனிடம் கொடுக்கலாம்' என்று நினைத்தான் அவன்.

அவன் திரும்பும் போது நல்ல வெயில், நடுப்பகல். தெரு முனையில் அடி வைத்த போதே, வழக்கமான இடத்தில் அருணசலம் உட்கார்ந்திருப்பது அவன் பார்வையில் பட்டது. நம்பிக்கை இழந்து, சோர்வினுல் குன்றி, பசிக்களைப்போடு அந்தப் பையன் சாய்ந்து சரிந்து கிடந்தான்.

அவனைப் பார்ப்பதற்கே மிகவும் சங்கடமாக இருந்தது மாதவனுக்கு. அந்த அப்பாவியைப் பாராதவன்

போல் தலை குனிந்தபடி, வேகமாக அடி எடுத்து வைத்து நடந்தான் அவன்.

அவன் வருகையை ஆவலுடன் எதிர்பார்த்துக் காத்திருந்த அருணா சலம், தூரத்தில் அவன் தலையைக் கண்டவுடனேயே கொஞ்சம் நிமிர்ந்து உட்கார்ந்தான். ஆனால் மாதவன் தன் பக்கம் திரும்பாமலே செல்வதைக் கண்டதும் இவன் முகம் வெளுத்தது. 'ஸார்!' என்று கூப்பிட்டான். குரல் தெளிவாக மேலோங்கவில்லை.

'ஸார்......ஸார்' என்று அழைத்தபடி எழுந்து நடக்க முயன்றான் அருணாசலம், தடாலென்று கீழே விழுந்து விட்டான்.

பதறி அடித்து ஓடி வந்தான் மாதவன். அவன் நெஞ்சு பதைபதைத்தது. 'ஐயோ பாவம்......... நான் ஒரு பாவி......என்னால் தான் இந்தத் துயரம்' என்று அவன் உள்ளம் துடித்தது.

மாதவன் அந்தப்பையனைத் தூக்கி எடுத்து, அன்புடன் உபசரித்தான். பக்கத்துக் கடையில் சோடா வாங்கி அவனுக்கு அளித்தான்.

'ஸார்...ஸார்... ரொட்டி' என்று ஈனசுரத்தில் கெஞ்சினான் அருணாசலம்.

மாதவனின் நெஞ்சமே அவனைச் சுட்டது.

'சரி, வா......மெதுவாக வா...... கடைக்குப் போவோம்' என்று கூறி அவனை அழைத்துச் சென்றான் மாதவன். கடைக்காரனிடம் பதினைந்து ரூபாயைக் கொடுத்து விட்டு, 'மீதியை இன்னும் இரண்டு நாட்களில் தந்து விடுகிறேன்' என்றான்.

'அதுக்கென்ன ஸார்!' என்று குழைந்து, பல்லிளித்தான் கடைக்காரன்.

'இவனுக்கு ஒரு ரொட்டி கொடுங்க......இனி வழக்கம் போல் தினமும் கொடுங்க' என்று மாதவன் சொன்னான்.

ரொட்டியைப் பெற்றுக் கொண்ட அருணாசலம் மிக்க நன்றி உணர்வோடு கையெடுத்துக் கும்பிட்டான்.

மனவேதனையோடு நடந்தான் மாதவன்.

'கொடுத்துப் பழகியவனுக்கு அதுவே ஒரு பலவீனமாகி விடுகிறது......... சடையப்ப வள்ளலைப் பற்றி ஒரு கதை உண்டு அல்லவா? கொடுப்பதற்கு அவரிடம் பொருள் இல்லாமல் போய் விட்டதாம். உதவிகோரி வந்தவனுக்கு இல்லை என்று சொல்ல முடியாமல், அவர் தன் உயிரையே மாய்த்துக் கொள்ளத் துணிந்தார். தோட்டத்தின் பக்கம் போய், பாம்புப்புற்றிலே கை விட்டார். வள்ளலின் கை என உணர்ந்து கொண்ட நாகம் அவரைக் கடிக்காமல், தனது ரத்தினத்தை அவர் கையில் கக்கிவிட்டு மறைந்தது. அதைக் கொண்டு வந்து அவர் தானமளித்துவிட்டாராம்... கதை நன்றாகத் தான் இருக்கிறது. ஆனால் வாழ்க்கைத் தீயில் வதங்கி வாடுகிற நல்லவனுக்கு ரத்தினம் எங்கே கிடைக்கிறது.''

அவன் உள்ளத்தில் அமைதி ஏற்படவே இல்லை. வேதனை மண்டிய உள்ளத்தில் அமைதிக்கு இடம் ஏது? அவன் மனக் குகையிலே, என்றோ எங்கோ படித்த ஒரு பாடலின் சில அடிகள் எதிரொலி செய்தன:

'அண்டையன் பசியால் வாட
அணங்கொடும் மாடி வாழ்தல்
மண்டையன் குற்ற மன்று'
மன்னிடும் ஆட்சிக் குற்றம்!'

கொல்லுலையின் கொடுமூச்சை உந்தியது அவன் நெஞ்சம், குற்றத்தைப் போக்குவதற்குத் தனி ஒருவனின் அனல் மூச்சுக்கு சக்தி கிடையாதே!



வளரும் விஞ்ஞானம்

புல்லுருவி

எம். வி. ஆர்.

“நல்ல மரத்தில் புல்லுருவி பாய்ந்தாற்போல்” என்பது பழமொழி. சிறுவனாயிருக்கும் போது இதை நான் படித்தேன். புல்லுருவி என்பது என்ன என்று விளங்கவில்லை. தாவர நூல் கற்ற பின்னரே அது விளங்கிற்று. ஆனால் அன்றும் அம்மொழியின் முழு அர்த்தம் தெளிவாகவில்லை. வாழ்க்கைப் பு வில் அகப்பட்டு வளருங்காலை வ மான அநுபவம் அதைப் புலப்ப(த்துகிறது. யா கண்ட இன்பம் பெருக இவ்வையகம்.

நாஞ்சில் நாட்டில் எங்கு பார்த்தாலும் மாமரங்களில் ‘இத்தில்’ என்ற செடி ஒன்று ஒட்டிப் படரும். படத்தைப் பாருங்கள். ஒரு மாங்கிளையில் ஒட்டி ஏறும் இத்தில் செடியை. இதை மட்டை இத்தில் (vi-cum) என்பர். ஓலை இத்தில் (Loranthus) என்று ஒன்றுண்டு. அது நீண்ட இலைகளையும் பல இலைகளையுடைய நீண்ட கிளைகளையும் உடையது. இரண்டிலும் மயிர் மாணிக்கம் செடியின் பூவைப்போல் நிறமுடைய சிறு பூக்கள் உண்டு. சில மரங்களில் இத்தில் ஏராளமாகப் பற்றிப் போய் மரம் வளர்ச்சி குன்றி வளங்குன்றி இறுதியில் பட்டுப்போகும். இத்திலுக்குப் பூமிக்குள் செல்லும் வேர் கிடையாது. ஆனால் அதைத் தாங்கி நிற்கும் மரத்தில் இடைக்கிடையே ஓர் வேர் ஊடுருவிக் கொண்டு செல்கிறது. இதுதான் உறிஞ்சு வேர் அல்லது ஒட்டு வேர் (sucker). இவ்வேர் மரத்தின் பட்டையைத் துளைத்து உட்சென்று பூசாரத்தை எடுத்துச் செல்லும் குழாய்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ளும். எவ்விதம் தெருவிற் செல்லும் பெரிய குழாயிலிருந்து வீட்டுக்குத் தண்ணீர்க் குழாய் எடுத்துக்கொள்கிறோமோ அவ்விதமே துளைத்து ஒட்டிக்கொண்ட இவ்வுறிஞ்சு வேர், மரம் தரையிலிருந்து உறிஞ்சி எடுக்கும் தண்ணீரில் தனது தேவைக்கு வேண்டிய அளவு எடுத்துக்கொள்ளும்.

பச்சையான இலைகள் தன்னிடம் இருப்பதால் ஒளிச் சேர்க்கைக்கு வேண்டிய இதர பொருள்கள் செடிக்குக் கிடைக்கின்றன. ஒளிச் சேர்க்கை (Photosynthesis) நடக்கும்போது செடி தனது பசுமையான பாகங்களில் உள்ள பசுங்கணிகம் அல்லது பச்சையம் என்ற பச்சை நிறமுடைய நிறமிகளின் (pigments) உதவியால் தண்ணீரையும் ஆகாயத்தில் மிகக் குறைந்த அளவில் உள்ள (அதாவது நூற்றுக்கு ஒரு பங்குகூட இல்லாத)

கரியமில வாயு (கார்பன் டையாக் ஸைட்) என்ற வாயுப் பொருளையும் சேர்த்து சூரியனுடைய வெப்பத்தால் வேகவைத்துச் சர்க்கரையாக மாற்றுகிறது. பசுங் கணிகத்தை ஒரு பாத்திரமாகக் கருதி நீரை அதில் ஊற்றுகிறோம் என்று வைத்துக் கொள்ளுங்கள். கரியமில வாயுவை அந்நீருக்குள் செலுத்துகிறோம். அடியில் சூரிய வெப்பமாகிய நெருப்பை வைக்கிறோம். வாயுவுந் தண்ணீரும் ஓர் வித மந்திர சக்தியால் மாவாக மாறிக்கொண்டே வருகிறது. இம்மாவுதான் சர்க்கரைப் பொருள் அல்லது குளுக்கோஸ். இலையின் தேவைக்கு மேற்பட்ட இவ்வுணவுப் பொருளை அது வேரைநோக்கி அனுப்பி விடுகிறது. இவ்வாறு அனுப்பப்படும் பொருள் நீரில் கரைந்து சல்லடைக் குழாய்கள் (Sieve tubes) என்னும் இலை நரம்புகளில் இருக்கும் குழாய்கள் வழியாக இறங்கும். தண்ணீரில்லாமல் இத்தில் செடிகள் ஒளிச் சேர்க்கை செய்ய இயலாது அல்லவா? அதனால் உறிஞ்சு வேர்கள் மூலமாக வேண்டிய அளவு நீரையும் அத்துடன் தாது உப்புக்களையும் திருடிக்கொள்கிறது. மரத்துக்கு இந்த இத்தில்போன்ற செடிகளால் ஒரு பயனும் இல்லை.

இவ்வாறு களவாடும் செடிகளைத் தான் புல்லுருவி என்று சொல்வார்கள். புல்லுருவிகளின் வளர்ச்சி அதிகப்படின் அவை மரத்தின் பூசாரத்தை யெல்லாம் பிடுங்கிக் கொள்ளும். அதனால் மரம் வளர்ச்சி குன்றும், வளம் குன்றும். சிலசமயங்களில் கணக்குப் பிள்ளைகள் கையில் அகப்பட்ட முதலாளிகள் போல் புல்லுருவியைத் தாங்கி நின்ற கொடையாளியான மரமும் சாகும். ஆனால் அதன் சாவு புல்லுருவியையும் சாக அடிக்கும். முதலாளியின் கடை அடைபட்டதும் கணக்குப் பிள்ளையும் அசந்து விடுவாரல்லவா? ஆனால் சிலர் அகப்பட்டதைச் சுருட்டிக் கொண்டு புதுக்கடை ஆரம்பிப்



மாமரத்தில் இத்தில்

Sucker - ஒட்டுவேர்
Parasite - புல்லுருவி
Host - தாங்கும் மரம்

பது போல் சாகுமுன் இப்புல்லுருவியும் நிறையப் பழங்களை உண்டாக்கலாம். நல்ல மிளகு அளவுள்ள நாவல் பழ நிறமுள்ள இப்பழங்களைக் காகம், புல்புல், மைனு, குயில் முதலிய பறவைகள் விரும்பி உண்ணும். இவற்றின் விதைகள் வழுவழுப்பான மேல்தோடு உடையவை. அதனுல் அவை பறவைகளின் அன்னக் குழாய் வழியாக வழுகி எச்சத்துடன் வெளியே வந்துவிடுகின்றன. அவை புதிதாக ஓர் கிளையில் முளைக்க ஆரம்பிக்கின்றன. உறிஞ்சுவேர் ஒன்று பட்டையைத் துளைத்துக்கொண்டு உட்சென்று மரத்துடன் தொடர்பு வைத்துக்கொள்கிறது. புல்லுருவியும் வளர்கிறது.

மூடில்லாத்தாளி என்பது சிறு கம்பிபோன்ற கொடியுடைய செடி. இதற்குத் தரைக்குள் செல்லும் வேரும் கிடையாது. இத்தில்களில் காணப்படும் இலையுங் கிடையாது. அதனுல் இது பூசாரத்தை மட்டும் திருடுவதன்றி ஒளிச் சேர்க்கையால் செடியில் உண்டாகும் சர்க்கரைப்

பொருளையும் திருடும். இதன் உறிஞ்சி வேர்கள் தாங்கிநிற்கும் மரம் அல்லது செடியில் பூசாரக் குழாய்களுடன் மட்டுமன்றி கீழ் நோக்கிச் சர்க்கரைப் பொருளைச் செலுத்தும் உணவுக் குழாய்களுடனும் தொடர்புகொள்ளும். படத்தில் காட்டியிருக்கும் குறுக்கு வெட்டுத் தோற்றத்தைப் பாருங்கள். இவ்வகைப் புல்லுருவிகளை முழுப் புல்லுருவிகள்(total parasite)என்றழைப்போம். இப்புல்லுருவி சவுக்கு அல்லது காற்றாடி மரம், பலவகை காட்டுச் செடிகள், கொட்டை முந்திரி மரம் இவைகளைத் தாக்கும்.



மூடில்லா தாளியும்
கொட்டை முந்திரியும்

மேலே காட்டப்பட்டவை வெளிப்படையாகப் புல்லுருவித் தன்மையைக் காட்டுகின்றன. ஆனால் வேறு சில செடிகள் வெளித் தோற்றத்தில் நல்லவைகள், ஆனால் அவற்றின் வேர்கள் வேறு செடிகளின் வேர்களுடன் தொடர்புவைத்துக்கொள்ளும். இவைகள் வேர்ப்புல்லுருவிகள் (Root parasites) என்று அழைக்கப்படும். சந்தன மரத்தை சந்தேகிப்பார்களா? அதன் வேர்கள் வேலிக்காகப் போடப்பட்டிருக்கும் உண்ணிச் செடிகளின் வேர்களுடன் பிணைக்கப்பட்டு அவை எடுக்கும் பூசாரத்தையும், சேகரிக்கும் சர்க்கரைப் பொருளையும் திருடும். மூங்கில் மூடுகளில் கல்வாழை போன்று ஒரு சிறு செடி ஒட்டிவைப்பதுண்டு. இச் செடிக்குத் தனக்கென்று இலைகள் கிடையா. பூக்கொத்து பெரிதாக வளர்ந்து நிற்கும், அழகாக இருக்கிறதே என்று தோண்டிப் பார்த்தால் மூங்கில் வேர்களுடன் முடிச்சு இணைந்திருப்பது தெரியும். இதைச் சேர்ந்த முழுவேர்ப் புல்லுருவிகளில் 'ஓரோபாங்கே' என்பது ஒன்று. இது உருளைக்கிழங்குச் செடி, தக்காளி, கத்தரி, கடுகு, புகையிலை இவற்றின் வேர்களில் ஒட்டிவளரும். 'பவனோபோரா' என்னும் ஓர் முழுப்புல்லுருவி அஸ்ஸாம் நாட்டில் 6500 அடிகளுக்கு மேலுள்ள மலைகளில் காணப்படுகின்றது.



மூடில்லாத் தாளியின் ஒட்டு வேர்

1. புல்லுருவி. 3. உணவுக் குழாய்கள்,
2. ஒட்டு வேர். 4. நீர்க்குழாய்கள்.

சமுதாயத்திலும் இவ்வித முழுவேர்ப்புல்லுருவிகள் உண்டு. வெளித் தோற்றத்தில் பசுத்தோல் போர்த்த இப்பாதகர்கள் பலவித வேடத்தில் இருக்கின்றனர். நல்ல அரசாங்கம் இப் பதர்களை வேரோடு தோண்டி எடுத்து ஒழித்துக் கட்டும்.

டாக்டர் ஆர்னல்டு என்பவரும் சர்ஸ்டாம் போர்டு ராபின்ஸ் என்பவரும்

ஜாவா, சுமத்ரா தீவுகளின் அடர்ந்த காட்டில் பிரயாணஞ்செய்து கொண்டிருந்தனர். டாக்டர் ஆர்னல்டு அத்தி இனத்தைச் சேர்ந்த கொடி ஒன்றில் மூன்றடி அகலமுள்ள சிவந்த பூ ஒன்றைக் கண்டார். அதன் இதழ் ஒவ்வொன்றும் ஒரு அடி அகலமுடையது. ஒன்றரைக் காலன் தண்ணீர் அது கொள்ளக் கூடியது. இப்பூ எந்தச் செடியிலிருந்து வருகின்றது என்று கண்டு பிடிக்கச் சற்று கடினமாகவே இருந்தது. அத்திக் கொடியின் பட்டைக்குள் ஒளிந்திருந்தது ரவ்வேஸியா என்று பெயர் கொடுக்கப்பட்ட அப்புல்லுருவி. அதற்கு வேருமில்லை. இலையும் இல்லை. ஒட்டுவைத்து தன்னைத் தாங்கிக் காப்பாற்றும் எளிய செடியின் உயிரையே சூறையாடியல்லவா இது விளம்பரஞ்செய்கிறது. ஆனால் கயவனின் நெஞ்சில் நல்லெண்ணம் உதிக்காது அல்லவா? அதுபோல் பூ மலர்ந்ததும் ஓரே துர்நாற்றம் அழுகிய நாய் வீசுவது போல அக்காடு முழுவதும் வீசுகிறது. உடனே தேனீக்களும், வண்ணாத்திப் பூச்சிகளும் மலரின் மணத்தையோ அல்லது மதுவையோ தேடி வருவதில்லை. ஆனால் ஆயிரக்கணக்கில் ஈக்கள் வந்து விழுகின்றன. குடிவெறியர் போல் கிண்ணத்தில் விழுந்து மதுவை உண்டு மகரந்தத்தை அள்ளிப் பூசிக் கொண்டு ஓடுகின்றன இன்னொரு பூவைநாடி. அப்பூவில் கொண்டு சென்ற மகரந்த தூள்களால் கருத்தரிக்கச் செய்யும். இரு நாட்களில் பூவிதழ்கள் உதிர்ந்துவிடும். காய் கனியாகிறது சில நாட்களில். அணில், எலி போன்ற சிறு பிராணிகள் அவற்றைக் கடித்து விதைகளைச் சிதறடிக்கின்றன. மற்றொரு அத்தி மரப்பட்டையில் விழுந்து விதை முளைக்கிறது. உடனே அது பட்டைக்கு அடியில் ஒளிந்துகொள்கிறது. அது பூக்கும் பொழுதுதான் ரவ்வேஸியா புலப்படும். கயவர்களின் வேடம் கயமை முற்றின் கலைந்து விடுகிறது அல்லவா? அது போல உள்ளடங்கிய இம்முழுப்புல்லுருவியின் தன்மை அது மலருங்காலை வெளிப்பட்டு விடுகிறது.

"தக்கார் தகவிலர் என்பதவரவர்
எச்சத்தாற் காணப்படும்"

—(குறள்)

MARK OF QUALITY

SRI VENKATA LODGE CONDIMENTS KUMBAKONAM

SYMBOL OF PURITY

ருசிமிக்க "லோட்டஸ்" பிராண்டு

ஊறுகாய் தினுசுகள்

சாம்பார் பௌடர், ரஸ பௌடர், கறி பௌடர், மசாலா பௌடர் முதலியன.

தயாரிப்பவர்கள் :

ஸ்ரீ வெங்கடா லாட்ஜ் காண்டிமெண்ட்ஸ்,

கும்பகோணம் :: தென் இந்தியா

வனமலர்கள்

கவிஞர் தமிழ்ஒளி

★

நற்காட்சி

மூட்டை சுமந்துவந்த ஒரு கழுதை, நீர் வேட்கையால், ஒரு குளத்தின் படிக்கட்டுகளில் விரைவாக இறங்கிக்,காலிடறித் 'தொபீர்' என்று வீழ்ந்துவிட்டது.

குளக்கரையில் பல் விளக்க லின்றிருந்தவன், 'திடீர்' என்று திரும்பினான்.

'புசோ' என்ற ஒலியுடன் வெண்புகை கிளம்பக் கழுதை கால்களை, உதைத்துக்கொண்டு, தலையைத் தூக்கிப் பார்த்து, மூச்சுத் திணறி, நீரில் மூழ்கி இறந்துவிட்டது.

வெண்புகை, குளத்தையே சூழ்ந்துகொண்டது!

"எவனோ, குளத்தின் அடியில் நெருப்பு வைத்துவிட்டான். அதில் சிக்கிக் கழுதை இறந்துவிட்டது. நெருப்பில்லாமற்புகையுமா?" என்று முணகினான் கிராமவாசி. அப்பொழுது, ஒரு துறவி வந்தார். "என்னப்பா, நீயே பேசிக்கொண்டிருக்கிறாய்?" என்று கேட்டார் துறவி.

"சுவாமி! இந்தக் குளத்திற்குள், ஒரு கழுதை வீழ்ந்து விட்டது... குளத்திற்குள் இருந்த நெருப்பில் சிக்கி, அது, இறந்துவிட்டது" என்றான் அம்மனிதன்.

"தண்ணீர்க்குள் நெருப்பிருக்குமா தம்பி?" என்றார் துறவி.

"நெருப்பில்லாமற் புகை வருமா சுவாமி?" என்று கேட்டான் கிராமவாசி.

அவர்கள் விவாதித்துக் கொண்டிருக்கும்போதே, கழுதையைப் பறிகொடுத்தவன் அப்பக்கம் வந்தான்.

"என்னப்பா தேடுகிறாய்?" என்று கேட்டார் துறவி.

"என் கழுதையைக் காணோம் சுவாமி!" என்று பதில் இறுத்தான் கழுதைக் குரியவன்.

"உன் கழுதையின் மேல், நீ வைத்திருந்தது சுண்ணாம்பு மூட்டையா?" என்று கேட்டார் துறவி.

"ஆமாம், சுவாமி!" என்றான் அவன்.

"நெருப்பிலிருந்துதான்புகைவரும் என்பதல்ல, நீரில்பட்ட சுண்ணாம்பிலிருந்தும் அது வரும். இறங்கினால் வீழ்ந்து விடுவோம் என்றுதெரியாமல் இறங்கிய கழுதையைப் போல், ஆராயாது தெளிபவன்—பார்ப்பது மட்டுமே மெய்யென்று நம்புபவன்—அறிவற்றவன்; காரண காரியத் தொடர்பை ஆராய்ந்தறிவதே நற்காட்சி!" என்றார் துறவி.

o o o

வெள்ளைப் பேய்

ஓர் ஊரில், பெரிய புளுகன் ஒருவன் இருந்தான். ஒவ்வொரு நாளும், ஏதாவதொரு புரளியைக் கிளப்பி விடுவதுதான் அவன் தொழில்.

"இருளில் வரும் பிசாசுகள், வெண்மையாயிருந்ததை நான் கண்டேன். பகலில் வரும் பிசாசுகள் கறுப்பாயிருப்பதையும் நான் கண்டேன்" என்று ஒருமுறை அவன் ஒரு பெரும் புரளியைக் கிளப்பிவிட்டான்.

ஒருநாள் இரவு வேளையில், ஊரினர் சிலர், பேய் வருவதை நிரூபிக்க வேண்டும் என்று புளுகனை கிர்ப்பந்திக்கத் தொடங்கினர்..

அவன் அவர்களைச் சமாதானப் படுத்தும் முறையில் ஏதோ சொல்ல முயன்று கொண்டிருந்தபோது, 'வெள்ளை வெளேர்' என்று ஒரு நெடிய உருவம் அவன் வீட்டை நோக்கி வருவது தெரிந்தது...

கடலில் மூழ்கியவனுக்குத் தெப்பம் கிடைத்தது போன்ற தெம்புடன், புளுகன் அந்நெடிய உருவைக் காட்டி, "அதோ, நான் சொன்ன பேய்!" என்று அழுத்தந் திருத்தமாகக் கூறினான்.

தைரியசாலிகளான இரு நபர்கள், தம் கைகளில் தடிகளை ஏந்தியவாறு, பேயைத் தாக்க ஓடினர்.

உடனே அப் பேய் கூச்சலிட்டுக் கொண்டு, "ஐயா, என்னை ஏன் அடிக்க வருகிறீர்கள்? என் சொந்தக்காரன் வீட்டிற்கு நான் வருகிறேன். அது தவறா?" என்று கேட்கவே, "யார் உன் சொந்தக்காரன்?" என்று கேட்டனர் அவர்கள். அந்நெடிய உருவம், அருகில் நின்றிருந்த புளுகனைச் சுட்டிக் காட்டி, 'இவன்தான்' என்று கூறியது.

"நீ, பேய்க்கும் சொந்தக்காரனாயிருந்து கொண்டே, ஊரில் குடியிருக்கிறாயா? ஓடிவிடு! இல்லாவிட்டால் உன் காலை முறித்துவிடுவோம்" என்றனர் அடிக்க முனைந்தோர்.

புளுகன், தன் கண்களை அகல விரித்துப் பார்த்து, 'நான் இவரைப் பேயென்று கூறியது பிழை; அவர் என் மாமா; என் உறவினர்." என்று அலறினான்.

"அயோக்கியப் பயலே! நீயே என்னைப் பேய் என்று கூறி ஆபத்திற் சிக்கவைத்தாயா? நீ கடன் கேட்டாயென்று உனக்குத்தான் பணம் கொண்டுவந்தேன்... இனி ஒரு சல்லியும் நீ என்னிடமிருந்து பெறமுடியாது" என்று கூறித் தன் பணப்பையை எடுத்துக் காட்டினார் அம்மனிதர்.

அவர், ஊரினரின் பாதுகாப்பில் தன் சொந்த ஊர் போய்ச்சேர்ந்தார்.

பணத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்த புளுகன், வெறுங்கையனாய் நின்றான்.

ஊரில் வாங்கியிருந்த கடனுக்காகப் புளுகனின் வீடு, 'ஜப்தி' செய்யப்பட்டது.

o o o

ஆறு வற்றினாலும்...

ஆற்றில் வெள்ளம் வழிந்துகொண்டிருந்தது. மக்கள், அதன் நீரை வேண்டியபடி செலவழித்துவிட்டு, நீரைத் தேக்கிவைக்காமல் வீணாகும்படி விட்டுவிட்டனர்.

பின்னர், ஆற்றில் வெள்ளம் வற்றிவிட்டது. மக்கள், முகஞ் சுளித்து நின்றனர். அப்பொழுது, ஆறு, மக்களைக் கூவி அழைத்துக் கூறியது: 'என் மணலைத்தோண்டுங்கள், நீர் சுரக்கும். நான் சேமித்து வைத்திருக்கிறேன்; வீணாய்ப்போன நீரை, நீங்கள் சேமித்து வைத்திருக்கலாம் அல்லவா?" என்று கேட்டது.

o o o

முட்டாள் மந்திரவாதி

செத்துப் போனவர்களுக்கு உயிர் கொடுப்பேன் என்று சொல்லியவாறு, ஒரு மந்திரவாதி சுடுகாட்டின் அருகே சென்று, ஏதோ கூச்சல் போட்டுக் கொண்டிருந்தான். அப்பொழுது, புதைகுழியொன்று வாய் திறந்து, அவனிடம் கூறியது:

"முட்டாளே! செத்துப்போனவர்களை எழுப்புவதல்ல முக்கியம். இருப்பவர்களை வாழ வைப்பதுதான் முக்கியம்!"

o o o

படகும் அலைகளும்

ஆற்றில் உல்லாசமாய் நீந்திச் சென்ற ஒரு படகு, சிற்றலைகளை நோக்கிக் கூறியது:

"உங்களுடைய தலைகளின் மேல் நான் நடனம் ஆடுகிறேனே, தெரியவில்லை?"

சிறிது நேரத்திற்கெல்லாம் படகில் ஓட்டை விழுந்தது. ஓட்டையின் வழியாய்த் தண்ணீர் படகினுள் நுழையவே, படகு மூழ்கும் நிலையில் இருந்தது. அப்போது சிற்றலைகள் படகை நோக்கிக் கூறின :

"நாங்கள் உன் மார்பின் மேல் நடனம் ஆடுகிறோமே, தெரியவில்லை?"

o o o

திருடன்

ஒரு வியாபாரி, பச்சைக்கிளியொன்றை வளர்த்து வந்தான். அதற்கு அவன் பேசக் கற்றுக் கொடுத்தான்; அந்தப் பேச்சின் சாரம் இது:

"அக்கா, அக்கா, திருடன், திருடன்!"

கிளி, யார் வந்தாலும், "திருடன், திருடன்" என்று சொல்லவே, நல்ல மனிதர்கள் அவ் வீட்டின் பக்கம் வராமற்போய் விட்டனர். அதனால் அம்மனிதனின் வியாபாரத்திற்கே நஷ்டம் ஏற்பட்டது. விஷயம் தெரிந்த பின், அவன் கிளியைத் திட்டிக் கொண்டு, அதைக் கூட்டினின்றும் எடுத்து, வெளியே விட்டுப், 'பறந்துபோ' என்று விரட்டினான். அப்போது, கிளி, "முட்டாள் வியாபாரியே! எனக்குப் பேசக் கற்றுக்கொடுக்கும் போதே, திருடன் என்ற சொல்லைக் கற்றுக் கொடுத்தாய் — இத்தனை காலமும் நான் திருடன் என்று அழைத்து வந்தது — உன்னையே!" என்று சொல்லிவிட்டுப் பறந்து சென்றது.

o o o

இடம் இல்லை

"உன்னை என் உயிரினும் மேலாய் விரும்புகிறேன், நீயே என் நண்பன்" என்று, ஒரு புளுகன், ஒரு நல்ல மனிதனை ஏமாற்றி வந்தான்.

ஒருநாள், அந்தப் புளுகனைப் பரிசோதிப்பதற்காக, நல்ல மனிதன் யுக்தியொன்றைக் கையாண்டான்.

"நண்பரே! ஒரு குற்றம் காரணமாய் என்னைப் போலீஸ் தேடுகிறது...தயவு செய்து, உன் வீட்டில் என்னை ஒளித்துவைக்க முடியுமா?" என்று கேட்டான்.

அதற்குப் புளுகன், "நண்பனே! நான் உன்னை உயிரினும் மேலாய் விரும்ப வேண்டும் என்றால் என் உயிர் இருக்க வேண்டும். என் உயிரைக் காப்பது எது? உத்தியோகம்! உத்தியோகம் போகாமல் இருக்க வேண்டும் என்றால், நான் என் வீட்டில் உனக்கு இடங்கொடுக்க முடியுமா?" என்று கேட்டான்.

"புளுகரே! நீர் எனக்கு இடங்கொடுக்காமல் இருப்பதுதான் சரி. இனிமேல் நம் நட்பிற்கும் இடம் இல்லை என்பதை உம்மிடம் தெரிவித்துக் கொள்ளுகிறேன்" என்று அமைதியாய்க் கூறினான் நல்ல மனிதன்.

o o o

புதை குழியை நோக்கி

ஒரு குழந்தை செத்துப் பிறந்தது.. அப்போது, இரவு நேரமாகையால் விண்மீன்கள் பேசிக்கொண்ட குரல், தெளிவாகக் கேட்டது :

"சாதிகளும் சமூக அந்தஸ்துகளும் இந்தக் குழந்தையோடு புதைகுழிக்குள். இறங்குகின்றன என்பதை, எத்தனை பேர் சிந்திக்கிறார்கள்?"

o o o

வேறுபாடு உண்டோ?

ஒரு பைத்தியக்காரன், துணிகளைக் கிழித்தவாறு நடுத்தெருவிற் சென்று கொண்டிருந்ததைக் கண்டு, ஊர் மக்கள் சிரித்தனர். பின்னர், அவ்வூரில் ஒரு கலகம் ஏற்பட்டது. ஊரினர், ஒருவர் மேல் ஒருவர் பாய்ந்து, சட்டை, வயிறு, உடம்புத் தோல் ஆகியவற்றைக் கைகளாலும் கத்தியாலும் கிழித்தெறிந்தனர்.

அப்போது, பைத்தியக்காரன் ஊர்க்கோடியில் நின்று சிரித்துக் கொண்டேயிருந்தான்!

(தொடர்ச்சி 72-ம் பக்கம் பார்க்க)

ஓரங்க நாடகம்

எரிநட்சத்திரம்

டி. செல்வராஜ்

இடம்: சென்னை பட்டினத்தில் 'ஹாலிவுட்' நகரம் என்று பேர் பெற்ற கோடம்பாக்கத்தில் ஒரு குடிசை.

(மீனாட்சி என்ற கோகிலம் ஒரு சினிமா 'எக்ஸ்ட்ரா'. கடந்த ஏழு ஆண்டு காலமாக ஒரு சினிமா நட்சத்திரமாகிவிட வேண்டுமென்று பகீரதப் பிரயத்தனங்கள் எடுத்துத் தோற்றுப் போனவள். ஆனால், இன்றும் அந்த நினைவுமட்டும் கன்னி யழியாமலேயே இருக்கிறது—வயது சுமார் இருபத்தைந்து இருக்கும். சினிமா பாணியில் தன்னை அலங்கரித்துக் கொண்டாள் என்றால் பதினாறு வயதுக் குமரி என்றுதான் மதிக்கத் தோன்றும். கைக்குழந்தை ஒன்று இருக்கிறது. தொழிலை முன்னிட்டுத் தனக்குக் குழந்தை இல்லை என்றே சொல்லி வருகிறாள். இப்போது அந்தக் குடிசையில் மீனாட்சியும், அவள் தாயார் கமலமும்தான் இருக்கின்றனர். இதுவரையில் அவளுடன் இருந்த தரகன் 'ஸ்டண்ட் வேங்கடேசன்' இளம் 'எக்ஸ்ட்ரா' ஒருத்தியைக் கூட்டிக் கொண்டு வேறு இடத்திற்குக் குடிபோய் இரண்டு வாரமாகிறது)

காட்சி ஒன்று **அதிகாலை**

ஓலைக் குடிசையின் முன் அறையில், சுவரில் கோகிலம் சினிமா போஸ்களில் அலங்கரித்துக்கொண்டு நிற்கும் படங்கள் தொங்குகின்றன. அறையின் நடுவில் படுக்கை ஒன்று. மூலையில் கிழடு தட்டிய தம்புரா ஒன்று சாத்தி வைக்கப்பட்டிருக்கிறது. உள் வீட்டு வாசல் அடைத்துக் கிடக்கிறது.

கோகிலம்: 'நைலான் தாவணியும் பாவாடையும் அணிந்தவளாகச் சோர்வுடன் வீட்டிற்குள் வருகிறாள். தலை குலைந்து, முகப்பவுடர் கலைந்து, கண்மை அழிந்து, உதட்டுச் சாயம் வழிந்து அலங்கோலமாகக் காணப்படுகிறாள். வந்த வேகத்தில் படுக்கையில் விழுகிறாள். இரவெல்லாம் தூக்கம் விழித்த சோர்வுக்களை. அறையின் நாலா திக்கையும் பார்த்துக்கொண்டே''

அம்மா! அம்மா!! சே, எங்கே போயிட்டாளோ தெரியலையே. எங்கேயோ போய்த் தொலைஞ்சுட்டாளே (சலித்துக் கொள்கிறாள்)

கமலம்: (வாசலைத் திறந்து கொண்டு அறைக்குள் வந்ததும்) மீனாட்சி, எப்போம்மா வந்தே. நீ வந்ததுகூடத் தெரியலையே. [மகள் முகத்தை உற்றுப்பார்த்தவண்ணம்] என்னடீ, இராத்திரி பூராவுமா ஷூட்டிங்'?

கோகிலம்: (மனச் சலிப்புடன்) இல்லேம்மா.

கமலம்: [திடுக்கிட்டவண்ணம] என்னடீ, நீ சொல்றது விளங்கலே. 'கால்ஷீட்' இருக்கின்னு சொல்லித்தானே காரை அனுப்பிச்சுக் கூட்டிட்டுப் போனாங்க. ஷூட்டிங் இல்லையானா நேரே வீட்டுக்கு வாரது தானே. நீயோ அழுபிள்ளைக்காரி.

கோகிலம்: (துக்கத்துடன்) கால் ஷீட்' ஸ்டுடியோவிலே இல்லேம்மா. தாஜ்மஹால் ஹோட்டல்லே. வயத்தெரிச்சலைக் கிளப்பாதே. (கண்களில் கண்ணீர் கரித்து நிற்கிறது)

கமலம்: அப்படியானா?

கோகிலம்: (கண்ணீரைக் கரத்தால் துடைத்த வண்ணம்) அப்படியானா என்ன? மாமூல்ப்படிதான். பாதிப் படம் அந்த 'டிஸ்டிபியூட்டர்' (விநியோகஸ்தர்) கொடுக்கும் பணத்தை வச்சுதான் எடுக்கணுமாம். (பெருமூச்சு விடுகிறாள்) மளிகைக் கடை வைச்சிருக்கனுவ எல்லாம் படம் எடுக்கவந்தா? தூ! (காரி உமிழ் கிறாள்) அவுங்க அக்கா தங்கச்சி இருந்தா அனுப்பக் கூடாது?

(ஒரு கணம் தாயும்மகளும் ஒருவரை ஒருவர் இமைகொட்டாமல்

பயபீதியுடன் பார்த்துக் கொண்டே இருக்கின்றனர்)

கோகிலம்: (தன் மடியைத் துழாவி ஐந்து ரூபாய் நோட்டை எடுத்துப் படுக்கையில் போட்ட வண்ணம்)

இதுதான் கிடைச்சது. (பணம் அப்படியே கட்டிலில் கிடக்கிறது கோகிலம் எதையோ யோசனை செய்தவளாக) அம்மா ரஞ்சி எங்கே. குழந்தையை எங்கேம்மா. நான் போகும்போதே குழந்தைக்கு ஜுரமா இருந்ததே. இரவெல்லாம் எனக்கு அவளைப் பற்றித்தான் நினைப்பு. மாபாவிப் பயல், மிருகத்துக்குக் காவல் போட்டமாதிரிக் காவல் போட்டிட்டான்: இல்லையானு இரவோட இரவாகவே வீட்டைப் பார்த்து ஓடியாந்திருப்பேன். அம்மா! குழந்தையை எடுத்தாயேன்.

கமலம்: மீனாட்சி, என்னத்தடியம்மா சொல்லறது. இரா பூரா குழந்தை தூங்கவே இல்லை. ஒரே அழுகைதான். பக்கத்துக் காப்பிக் கடையிலே ஒரு தம்ளர் பால்கூட வாங்கிக் கொடுத்துப் பார்த்தேன். குடிக்கவே மாட்டேண்னுட்டா...... குடிக்கலை காய்ச்சலானு, காய்ச்சல். என் போட்டா எள் பொறிஞ்சு போவும். இப்போத்தான் தொட்டிலிலே போட்டிருக்கேன் :

கோகிலம்: என்னமோ என் தலையெழுத்து. (மனச் சஞ்சலம் அடைகிறாள். அதற்குள் குழந்தை அழுகுரல் கேட்கிறது) அம்மா, குழந்தை அழரது. எடுத்திட்டுவா பால் கொடுத்திடுரேன்.

கமலம்: போய் குளிச்சிட்டு வந்து பால் கொடேண்டீ.

கோகிலம்: இல்லேம்மா, பச்சைக் குழந்தை. இரவெல்லாம் பால் இல்லாமல் குழந்தைக்குத் தொண்டையே வரண்டு போயிருக்கும். (குழந்தை பலமாக அழும் சப்தம் கேட்கவும் கமலம் போய்க் குழந்தையை எடுத்துக் கொண்டு வருகிறாள்.)

கோகிலம்: (கையை நீட்டி) கொண்டாம்மா குழந்தையை.

கமலம்: (குழந்தையை அவள் கையில் கொடுக்காமலே.)

இந்தாடீ, சொன்னாக் கூட உனக்குத் தெரியரதில்லை. சின்னக் குழந்தையாவால்லா இருக்கே. நீ என்ன சுத்தமாவா இருக்கே?

(கோகிலம் ஒன்றும் பேசாமல் தலையைத் தொடங்கப் போட்ட வண்ணம் குளிக்கப் போகிறாள். கமலம் குழந்தையைத் தோளில் போட்ட வண்ணம் அறையை வலம் வருகிறாள். குழந்தையோ, அழுகிறது. வீட்டுச் சொந்தக்காரன் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருகிறான். அவனைக் கண்டதும் கமலம் திடுக்கிடுகிறாள்.)

கமலம்: வாங்க விட்டுக்காரரே.

வீட்டு: இன்னும்மே, பணம் தர்ரியா?

கமலம்: ஒரு வாரம் பொறுத்துக் காங்க ஐயா.

வீட்டு: இன்னும்மே நென்ச்சுக் கிணே. ஒரு மாசமா டோக்கர் விட்டுக்கிணே வர்ரியே.

கமலம்: கோவப்படாதிங்க ஐயா. மகளுக்குக் கம்பெனிகள்ளேருந்து பணம் வரலை. வந்ததும் பாக்கி எல்லாம் தீர்த்திடுவோம். இந்த ஒரு வேளையும் தயவு செய்ங்க.

வீட்டு: இன்னும்மே கம்பெனி. ஓம் மக இன்னும்மே பெரிய 'இஸ்டாரோ'? அந்தக் கம்பெனி பணம், இந்தக் கம்பெனி பணம்ண்ணு நம்பளை ஏமாத்திக் கடாசிக்கினுவர்ரே, இந்தாம்மே பணம் தரலே நான் நவுர மாட்டேன். ஆமா!

கமலம்: நாங்க பொய் சொல்லலைய்யா. நடிச்ச கம்பெனியிலேருந்துகூட பணம் வரலை.

வீட்டு: இந்தாம்மே. நம்பகிட்டே அத்தெல்லாம் வேணும். நமக்குப் பணம் வோணும். (படுக்கையில் போய் கோபமாக உட்கார்ந்து கொள்கிறான். உள்ளே

யிருந்து கோகிலம் கூந்தலில் தண்ணீர் சொட்டச்சொட்ட வருகிருள்.) கிழிந்த மேல்ச்சட்டையும், கந்தல் சேலையும்தான் அவள் உடலை அலங்கரித்திருக்கின்றன. இப்போது இருபத்தைந்து வயதுத் தாயாகத் தோன்றுகிருள். கோகிலத்தைக் கண்டதும் வீட்டுக்காரன் மேலும் கோபத்துடன்)

இன்னும்மே, கோக்கிலம் வாடகைக்கு இன்ஞ சொல்றே, பணம் தரலே, அல்லாத்தையும் இழுத்து வீதியிலே கடாசிப்போடுவேன் ஆமா!

கோகி: (திடீரென்று ஏதோ தோன்றியவளாக, படுக்கையைத் துழாவி படுக்கையில் கிடந்த ஐந்து ரூபாய் நோட்டை அவனிடம் நீட்டுகிருள்.)

இந்தாங்க, எங்களுக்கும் மானம் மரியாதை எல்லாம் உண்டு. கினைத்தபடியெல்லாம் பேசவேண்டாம். பாக்கிப் பணத்தை நாளைக்கே வாங்கிக்காங்கோ...

கமலம்: (மகளையே இமைகொட்டாமல் பார்த்துவிட்டு) எப்படி டீ, கொடுப்பே?

கோகிலம்: சாயங்காலம் வேஷம் போடப்போர அமெச்சூர் பார்ட்டியிலே கிடைக்கிற பணத்தை இவனுக்கு வச்சு அழ வேண்டியதுதான்.

(வீட்டுக்காரன் ஒன்றும் பேசாமல் ஒன்றும் பேசாமல் பணத்தை எடுத்துக்கொண்டு கோபத்துடன் கதவைத் தடாரென்று சாத்திக்கொண்டு போகிருன்)

கோகிலம்: (சோர்வுடன் படுக்கையில் உட்கார்ந்த வண்ணம்)

அம்மா, குழந்தையைக் கொண்டா. பால் கொடுத்திடரேன்.

(குழந்தையைக் கையில் வாங்கியவள் திடீரென்று பயபீதியுடன்] என்னம்மா இது? ரஞ்சியின் உடம்பு அனலாய்க் கொதிக்குதே. ஐயோ, குழந்தைக்கு அழக்கூட ஜீவன் இல்லையே ரஞ்சி! ரஞ்சி!! என் கண்ணே ரஞ்சி... தினம் என் முகத்தைக் கண்டு சிரிக்கிற குழந்தைக்கு அழக்கூட ஜீவன் இல்லையேம்மா.

காட்சி முடிவு.

காட்சி இரண்டு மாலைவேளை

[கோகிலம் படுக்கையில் உட்கார்ந்த வண்ணம் அன்று இரவு நடிக்க வேண்டிய நாடகத்திற்கான பாடங்களை மனனம் பண்ணி அபிநயித்துக் கொண்டிருக்கிருள். கையில் பாடம் எழுதப்பட்ட ஒரு நோட்டும் இருக்கிறது]

கோகிலம்: (கோபம் கொண்டவளைப் போல்) சீ! கிராதகா. என்னை நீ என்னவென்று எண்ணிக் கொண்டாய். கற்பிற் சிறந்த கண்ணகி பிறந்த மண்ணில் பிறந்தவளடா நான். அருந்ததியும், நளாயினியும், தமயந்தியும் உதித்தெழுந்த புண்ணிய பூமியில் உதித்தவளடா, நண்பன் நண்பன் என்று சொல்லிக் கொண்டு, என் கணவர் இல்லாத நேரத்தில் நாய்போல் எங்கள் வீட்டிற்குள் ஏன் நுழைந்தாய்? பெண்கள் என்ருல் வெறும் புழுக்கள் என்பது தான் உன் நினைப்போ? பேயேஎன்னைநெருங்காதே...நெருங்காதே.....உன் உயிர் உடம்பில் நிற்காது. ஆ! ஐயோ!...... அம்மா!! (கமலம் கதவைத் திறந்துகொண்டு வெளியிலிருந்து குழந்தையுடன் வருகிருள்).

கோகிலம்: (எழுந்து போய் குழந்தையை வாங்கிக் கொண்டு) அம்மா டாக்டர் என்ன சொன்ஞர்?

கமலம்: (துக்கம் தோய்ந்தவளாக) குழந்தைக்கு 'டைபாய்டு' ஜுரமாம்......நன்ருகக் கவனிக்க வேண்டுமாம்.

கோகிலம்: (திடுக்கிடுகிருள்) மருந்து ஏதாவது.

கமலம்: ஏதோ போனதற்குத் தருமத்திற்கு ஊற்றிஞர். (ஒரு சீட்டை எடுத்து மகளிடம்கொடுத்த வண்ணமே) இந்தச் சீட்டை எழுதிக் கொடுத்தார். இதில் எழுதியிருக்கும் மருந்துகளை வாங்கிக் கொடு

கணுமா: .. ஊசியும் வேறே போடனுமாம். நான் வர்ர வழியிலே மருந்துக் கடையிலே சீட்டைக் காட்டினேன். இருபது ரூபாய் வரையிலே ஆகுமாம்......... பணத்துக்கு என்னம்மா செய்ய?

கோகிலம்: (மனச் சோர்வுடன் குழந்தையைத் தோளில் சாத்திய வண்ணம் படுக்கையில் போய் உட்காருகிறாள்) மேல் அனலாச் சுடுதேம்மா.

கமலம்: மோசமான ஜுரமாம். கவனிக்கலையானு......

கோகிலம்: ஐயோ, அப்படிச் சொல்லாதேம்மா. ரஞ்சி ஒருத்திக்கு வேண்டித்தானேம்மா, இந்தக் கேவலத்தை யெல்லாம் சகிச்சுட்டு இருக்கோம் (திடீரென்று படுக்கையை விட்டு எழுந்து) கவலைப்படாதேம்மா, குழந்தைக்கு மருந்து வாங்கப்பணம் கிடைச்சிடும். அந்த 'அமெச்சூர்' பார்ட்டியிலே பதினைஞ்சு ரூவா கிடைக்கும். கெஞ்சிக் கதறியாவது இருபதுரூவா வாங்கிரலாம், வாங்கிரலாம்மா, நம் குழந்தைக்கு மட்டும் சுகமானாப் போதும், ஆண்டவனே, முருகா.

கமலம்: கோகிலா, நானும் கூட, மறந்து போயிட்டேனே. நாலு மணிக்கே வந்திருவாங்களே. போயி டிரஸ் பண்ணிட்டு வந்திடேன் (குழந்தையை வாங்கப் போகிறாள்?

கோகிலம்: என்னம்மா டிரஸ் வேண்டியிருக்கு. குழந்தை இப்படி இருக்கையிலே நான் என்னம்மா சீவிச் சிக்காரிக்க. வேண்டாம்.

கமலம்: என்னம்மா செய்ய.? ஆள்பாதி ஆடைபாதின்னு நம்ப வாழ்க்கையே நடிப்பாப் போயிட்டே இந்த நிலையிலே உன்னைப் பார்த்தா அவுங்க கூப்பிடுவாங்களா?

கோகிலம்: ஹூம், நாய் வேஷம் போட்டா குலைச்சாகணும். குழந்தையைத் தொட்டிலிலே போட்டுட்டு, டிரஸ் பண்ணிட்டு வாரேன். யாராவது வந்தா இருக்கச் சொல்லு. (துக்கத்துடன் உள்கதவைத் திறந்து கொண்டு போகிறாள். கமலம், தம் புராவை எடுத்து வேறுபக்கம் சாத்தி விட்டு, வீட்டில் சிதறிக் கிடக்கும் பொருட்களைச் சரி செய்கிறாள்

வெளிக் கதவைத் தட்டும் ஓசை கேட்டதும் கதவைத் திறக்கிறாள். முழுக்கால்ச் சட்டை அணிந்த மைனர் ஒருவன் வந்து நிற்கிறான்)

கமலம்: வாங்க, வாங்க. உங்களுக்கு வயது நூறு. (முகத்தில் சிரிப்பை வரவழைத்துக் கைகூப்பி நமஸ்காரம் செய்கிறாள்.) கோகிலம் இப்போத் தான் உங்களைப் பற்றி கேட்டுகிட்டு இருந்துச்சு. உக்காருங்க (படுக்கையைக் காட்டுகிறாள்.) கோகிலா! கோகிலா! சீக்கிரம் வாம்மா, அவங்க வந்திட்டாங்க?

கோகிலம்: உள்ளே இருந்த வண்ணம்) இதோ வந்திட்டேம்மா. அவங்க வந்திட்டாங்களா? (கோகிலம் வெகு சீக்கிரமே, தன்னை இளம் குமரியைப் போல் அலங்கரித்த வண்ணம் வந்து நிற்கிறாள். முகத்தில் வலிய வழைத்த சிரிப்பு. வந்தவன் கோகிலத்தையே வெறித்துப் பார்க்கிறான்)

கோகிலம்: (மாராப்புச் சேலையைச்சரி செய்த வண்ணம்) அப்புறம் புறப்படலாங்களா?

வந்த நபர்: (கனவிலிருந்து விழித்தவன் போல்) 'ஸாரி' மன்னிக்கனும்.

கோகிலம்: என்னங்க?

வந்த நபர்: சிரமம் கொடுத்ததுக்கு மன்னிக்கனும் (நிதானித்துக் கொண்டு) இன்றைக்கு நாடகம் இல்லை. கான்சல் பண்ணிட்டோம்.

கோகிலம்: (திடுக்கிடுகிறாள்) என்னங்க இது?

வந்த நபர்: என்ன செய்ய, கிளப்பிலே பெரிய தகராறு ஏற்பட்டுட்டுட்டது. மெம்பர்ஸுக்குள்ளே இது பற்றிப் பெரிய வாக்கு வாதம். கடைசியிலே கான்ஸல் பண்ண வேண்டியதாயிற்று.

கமலம்: ஏன்ங்க இது? குழந்தை உங்களுக்காக வேண்டி எத்தனை 'புரோக்கிராம்களை' கான்சல் செஞ்சுட்டா......

வந்த நபர்: என்ன செய்வது. அட்வான்ஸ் கொடுத்தோம் பாருங்க. அதை வச்சுக்காங்கோ. இனியும் ஏதாவது கொடுக்க முடியுமான்னு காரியதரிசியைக் கேட்டுப் பார்க்கிறேன். அப்புறம் சந்திக்கிறேன். (சரேலென எழுந்து வெளியே போய் விடுகிறான். கோகிலம் அவன் போன திக்கையே பார்த்துக்கொண்டு பித்துப் பிடித்தவள் போல் நிற்கிறாள். கண்களில் கண்ணீர் கரித்துநிற்கிறது. கமலமும் ஸ்தம்பித்துப் போய் நிற்கிறாள்.)

(உள்ளே இருந்து குழந்தையின் அரவம் கேட்கிறது,)

கோகிலம்: அம்மா, குழந்தை மருந்து...... (இருவரும் ஒருவரை ஒருவர் பரிதாபமாகப் பார்க்கிறார்கள்.

காட்சி முடிவு.

காட்சி மூன்று நடுநிசி

(கட்டிலில் குழந்தை குற்றுயிராய்க்கிடக்கிறது. கமலம் கற்சிலையைப்போல் ஒன்றும் புரியாமல் கட்டிலில் உட்கார்ந்திருக்கிறாள். கந்தல் உடையில் இருக்கும் கோகிலமோ நிலைகுலைந்து கண்ணீரும், கம்பலையுமாகக் கட்டிலின் அருகில் தரையில் உட்கார்ந்திருக்கிறாள்...)

கோகிலம்: அம்மா, ரஞ்சி நம்ம எல்லாரையும் ஏமாற்றிட்டுப் போயிருவாளோம்மா?

கமலம்: (மகளின் வாயைப் பொத்திக்கொண்டு)

ஐயோ, மீனுட்சி அப்படிச் சொல்லாதேம்மா. ரஞ்சி நம்மளை எல்லாம் விட்டுட்டுப் போகமாட்டாம்மா. ஆண்டவன் நம்மைக் கைவிடமாட்டாரம்மா.

கோகிலம்: நல்ல ஆண்டவம்மா. ஆண்டவன். (தவறு செய்துவிட்டவளைப்போல்) ஆண்டவனை நொந்து என்ன செய்ய. நான் பிழைத்த பிழைப்பு என் குழந்தைக்கு ஒரு வேளை மருந்து வாங்கிக்கொடுக்கக் கூட கையிலே வக்கில்லை. நமக்கு மாடமாளிகைகூட கோபுரம் வேண்டாம். இந்தக் குழந்தையைக் காப்பாத்தறக்துக்கு கூட வகை வேண்டாமா...? பாவி! பாவி! (கட்டிலில் தலையை மோதிக் கொள்கிறாள். கமலம் மகளின் தலையைப் பிடித்துக் கொள்கிறாள்)

கோகிலம்: அம்மா, இராப்பொழுதுக்கும் என் செல்வம் சுகமா இருப்பாளாம்மா?

(ஸ்டண்ட் வெங்கடேசன் கதவைத் திறந்துகொண்டு வீட்டிற்குள் வருகிறான். அவனைக் கண்டதும் கோகிலம் கோபாவேசம் கொண்டவளாக)

இங்கே ஏன் வந்தே. (பேசாமல் புன்முறுவலுடன் நிற்கிறான்) பாவி! பாதகா!! போ வெளியே. என்னைய 'ஸ்டார்' ஆக்கிடறேண்ணு கூட்டியாந்து நாசம் செய்திட்டு மானபங்கம் பண்ணின பாவி. ஏண்டா இங்கே வந்தே. போ வெளியே!

(விக்கி விக்கி அழுகிறாள்)

வேங்க: (நிதானமாக). கோகிலா, என் கண்ணே உன்னை மறப்பேனு நான். ஒரு முக்கிய காரியமாகத்தான் ...திருக்கேன் இங்கே பார் கோகிலா, வேங்கடேசன் எங்கே இருந்தால் என்ன, உன்னை மறப்பேனு.

(அவன் கைகளில் மூன்று பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து அவள் முன் காட்டிக் கொண்டு. அவள் காதில் ரகஸ்யம் பேசுகிறான்)

கோகில: (வெறி கொண்டவளைப் போல் ரூபாய் நோட்டுகளைத் தட்டிவிட்டு) சீ! சீ!! பேயே. நீயும் உன் ரூபாயும். (கண்ணீர் வடிய) என் செல்வம் இருக்க நிலையப் பார்த்தியா? (குழந்தையைச் சுட்டிக் காட்டுகிறாள்)

வேங்க: வந்த சீதேவியைத் தள்ளாதே. குழந்தை பிழைக்கணுமான இதுதான் வழி ஆமா!

கமல: (விஷயத்தைப் புரிந்து கொண்டவள்போல) என்ன தம்பி?

(வெங்கடேசன், கமலத்தின் காதிலும்போய் விஷயத்தைச் சொல்லவும், ஒரு கணம் யோசனை செய்து விட்டு கட்டிலில் தலையை வைத்து அழுது கொண்டிருக்கும் மகளிடம் வந்து தலையை நிமிர்த்திக் கண்ணீரைச் சேலைத் தலைப்பால் துடைக்கிறாள்)

கமல: அம்மா! (மகளை ஒரு மாதிரியாகப் பார்க்கிறாள்)

கோகி: அம்மா, இந்த நேரத்திலேயம்மா, என் குழந்தை உயிருக்கு மன்றாடும் போதாம்மா. மிருகமா...(தொண்டை கம்முகிறது)

கமல: அம்மா மீனாட்சி, ரஞ்சி பிழைக்கணுமே. விடிஞ்சா மருந்துக்குப் பணத்துக்கு எங்கேம்மா போரது.

(தாயும் மகளும் ஒருவரை ஒருவர் இமைகொட்டாமல் பார்க்கின்றனர். இருவர் கண்களிலும் கண்ணீர் தாரை தாரையாக ஓடுகிறது)

கோகிலம்: (ஒருகணம் கட்டிலில் கிடக்கும் குழந்தையைப் பார்த்து விட்டு அறையையும் வெறிக்கப் பார்த்தவண்ணம்) சரிம்மா! (கட்டிலில் தலையைப் புதைத்துக்கொண்டு விம்முகிறாள்).

வெங்கடேசன்: (சிரித்த வண்ணம்) கோகிலா நீ, டிரஸ் பண்ணிக்கோ.

கோகிலம்: முடியாது, இப்படியே தான் இருப்பேன்.

கமலம்: என்னடீ, இப்படிப் பிடிவாதமா நிக்கறே......

கோகிலா: வார மிருகத்துக்கு என் உடம்புதானே தேவை. (எல்லோரும் ஸ்தம்பித்துப் போய் ஒன்றும் பேசாமல் இருக்கின்றனர்)

வெங்கடேசன்: (சமாளித்துக் கொண்டு) ஹும், அதுவும் சரிதான் நான் சொல்லி சரிகட்டிடறேன். (கமலத்தைப் பார்த்து) அக்கா, நீ குழந்தையைத் தூக்கிகிட்டு உள்ளே போ. (கமலம் குழந்தையைத் தூக்கிக்கொண்டு உள் வீட்டிற்குள் போகிறாள். வெங்கடேசன் வெளியே போகிறான். கட்டிலில்போய் உட்கார்ந்த கோகிலம் சிதறிக்கிடக்கும் ரூபாய் நோட்டுக்களை வெறித்துப் பார்த்தவண்ணமிருக்கிறாள். பிறகு கண்ணீரைத் துடைத்துக்கொண்டு எழுந்து ரூபாய் நோட்டுக்களை எல்லாம் எடுத்து இடுப்பில் சொருகிக்கொண்டு கட்டிலில் உட்காருகிறாள்.)

(ஸ்டண்ட் வெங்கடேச' அழகாக அலங்காரம் செய்துகொண்ட நபர் ஒருவனைக்கூட்டிக்கொண்டு வீட்டிற்குள்ளே வருகிறான். அவர்களைக் கண்டதும், கோகிலம் படுக்கையை விட்டு எழுந்து நிற்கிறாள்.)

வெங்கடசன்: இவதாங்க.

கோகிலம்: (மனஉளைச்சலுடன்) வாங்க... (வெங்கடேசன் வெளியே போகப் புறப்படும் போது ஒரு போலீஸ்காரன் அவனைத் தள்ளிக் கொண்டு உள்ளே வரவும், திடுக்கிட்ட கோகிலம், பக்கத்தில் நிற்கும் நபரைத் தள்ளிக் கொண்டு வீட்டிற்குள் போக யத்தனிக்கவும் பக்கத்தில் நின்றவன் அவள் கரங்களைக் கட்டியாகப் பிடித்து நிறுத்தி விடுகிறான்.)

போலீஸ்: தேவடியா முண்டே, எத்தனை நாளா இந்த வேலை.

கோகிலம்: (பரிதாபமாக) நான் ஒண்ணும் தப்புச்செய்ய லேங்களே.

பக்கத்தில் நிற்பவன்: (அவள் கரங்களைப் பிடித்துக் கட்டிலில் இழுத்தெறிந்த வண்ணம்) ஹும்! போலீஸ் காரங்களையே ஏமாத்தப் பாக்கிறையா?

(ஸ்டண்ட் வெங்கடேசனைச் சுட்டிக் காட்டி)

அவங்கிட்டே, இப்போது முப்பது ரூபாய் வாங்கலே? சினிமா ஸ்டார், ஸ்டாரிண்ணு சொல்லி ஊர் வாலிபப் பயல்களை எல்லாம் கெடுத்துக் குட்டிச்சுவர் பண்ணுவது.

(கோகிலம் வெங்கடேசனைப் பரிதாபமாகப் பார்க்கிறாள். அவன் சிரித்துக் கொண்டு நிற்கிறான்.)

கதவண்டை நிற்கும் போலீஸ்: ஏய் முன்னூத்தி மூனு அவ என்ன எழவும் பண்ணிட்டுப் போரா. 'உம்' இன்னேயோட, இந்த மாச நம்ம கேஸ் கோட்டா முடிஞ்சது. அந்த இன்ஸ்பெக்டர் நம்மளே நச்சரிக்க மாட்டானில்லா? சரி அவளே இழுத்திட்டுவா, ஸ்டேஷனுக்குப் போய் 'புக்'பண்ணிரலாம்.

கோகிலம்: (மடியிலிருந்து ரூபாய் நோட்டுக்களை எடுத்துக் கொடுத்த வண்ணம்)

ஐயா, தெரியாமச் செய்கிட்டேன். இனிமே இந்தச் சோலிக்கே போக மாட்டேன். இந்த ஒரு வேளைக்கும் மாப்புக் கொடுங்க.

(பரிதாபமாக கெஞ்சுகிருள். கமலம் குழந்தையுடன் வீட்டிற்குள் ஓடி வருகிருள்)

கோகிலம்: (அம்மாவைக் கண்டதும்) அம்மா! (தாய்மேல் விழப் போகிருள்.)

போலீஸ்: (அவள் கையைப்பிடித்து இழுத்து நிறுத்திய வண்மை) எங்கேடீ. போரே முண்டை வா. ஸ்டேஷனுக்கு

கோகிலம்: ஐயா, தயவு பண்ணி விட்டுருங்கய்யா. இனிமேச் செய்யவே மாட்டேன்.

கமலம்: ஐயா, என்னமோ, தெரியாம.

போலீஸ்: என்னடீ தெரியாமே, இதுதானே பிழைப்பு. வா, (கோகிலத்தை இழுக்கிருன்)

கோகிலம்: ஐயா, என் குழந்தையைப் பாருங்கையா, ஐ ரம், சாகப் போராப்போல இருக்கு இந்த ராவுக்கு மட்டுமாவது தயவு பண்ணுங்க.

போலீஸ்: முடியாது.

கோகிலம்: ஐயா! ஐயா!! நாளைக்கு நானே வேணுமானலும் ஸ்டேஷனுக்கு வந்திடரேன். என் குழந்தை சாகப்பிழைக்க இருக்கய்யா, விட்டிருங்க சாமீ கோடிப் புண்ணியம் உண்டு.

போலீஸ்: (கோபத்துடன்) ஹூம் முண்டை, எங்கேடீ குழந்தை, இது வரையில் குழைந்தை கிடையாது, கிடையாதுண்ணே. பாசாங்கு பண்ணறயா? உன்நடிப்பை ஸ்டுடியோவிலே காட்டுடீ, நம்பகிட்டே வேண்டாம்

கோகிலம்: ஐயா! ஐயா!! (பரிதாபமாகக் கெஞ்சுகிருள்)

கமலம்: (குழந்தையை அவர்கள் முன் காட்டிய வண்ணம்). ஐயா இந்தக் குழந்தை கோகிலம் குழந்தைதான் இந்த ஒரு வேலக்கு தயவு பண்ணுங்க.

(கோகிலம். குழந்தையை எடுக்கப் போகிருள் அலங்கோலமாகக் கதறுகிருள் கட்டிலில் முட்டிக் கொள்கிருள்)

போலீஸ்: வாடீ, தேவடியா, மயான காண்டம் பாடரு.

(கையைப் பிடித்து, பரபரவென இழுத்துச் செல்கின்றனர். தாயும் மகளும் கதறுகின்றனர்)

—திரை—

(65-ம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தையின் கனவு...

குழந்தை கனவுகண்டால், அது எப்படி யிருக்கும் என்று தற்கால அறிஞன் ஒருவன் சிந்தித்தான்; அவனுக்குக் கிடைத்த விடை!

"பால், வெண்புரு, வனமலர், கனி வர்க்கம், எல்லா நாடுகளும் கையெழுத்திட்ட சமாதான உடன்படிக்கைப் பத்திரம் ஆகியவற்ருேடு, நிலவைப் பார்ப்பதற்காகக் குழந்தை, பறந்துகொண்டிருந்தது.

அப்போது, மேகமண்டலங்களுக்கும் அப்பால், ராக்கெட்டினின்றும் குழந்தைக்காக ஒலி பரப்பப்பட்ட பாடல், கீழ் வருமாறு பாடியது:

"நிலா, நிலா வருகிறேன்
தின்னும் பண்டம் தருகிறேன்
கையைக் கையை விசலாம்...
கண்சிமிட்டிப் பேசலாம்"